# விசுவாச வாழ்வு

"விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்!"



**R. ஸ்டான்லி**

# விசுவாச வாழ்வு

**R. ஸ்டான்லி,** B.E., M.TECH.,

*திருமறைப் போதகராய் மாறிய*
*ஒரு கட்டிடப் பொறியியலர்*

1985ஆம் ஆண்டின் உயிர்மீட்சி முகாம் ஒன்றில்,
*"விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்"*
என்ற பொருள்மீது தரப்பட்ட செய்திகளை
இந்நூல் வடிவில் அமைத்தவர்
**திருமதி லினட்டா சம்பத்குமார்**

*வெளியிடுவோர்:*
ஆசீர்வாத இளைஞர் இயக்கம்
அஞ்சல் பை 609, வேலூர் 632 006
தொலைபேசி: 0416-2242943, 2248943
<bym@sancharnet.in>
www.BlessingYouthMission.org

**FAITH LIFE** (Tamil)

Copyright 1987 R. STANLEY

First Edition : September 1987
Second Edition : March 1989
This Edition : November 2007

Available in English and a few vernaculars also

Printed by
Bapuji Printers
5 Kurban Ali Street
Woods Road
Chennai 600 002

# உள்ளே...


0. விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்! ... 5

**பகுதி ஒன்று**

விசுவாச வாழ்வின் துவக்கம் ... 12

1. தேவனது ஒரே நிபந்தனை ... 13
2. தோல்வி ஏன் ? ... 23
3. எளிய விசுவாசம் ... 32
4. கலப்பட சுவிசேஷம் ... 39
5. மனிதனின் பொறுப்பு ... 47

**பகுதி இரண்டு**

விசுவாச வாழ்வின் தொடர்ச்சி ... 53

1. பாவத்தின்மீது வெற்றி ... 58
2. தேவனோடு ஐக்கியம் ... 64
3. பரிசுத்தவான்களின் ஐக்கியம் ... 71
4. உடலுக்கடுத்த தேவைகள் ... 80
5. விசுவாசத்தைப் பகிர்ந்துகொள்ளுதல் ... 91

**பகுதி மூன்று**

விசுவாச வாழ்வின் முடிவு ... 95

1. பாடுகள் ... 99
2. சந்தேகங்கள், இருளான வேளைகள் ... 108
3. உபத்திரவங்கள், எதிர்ப்புகள் ... 114

# விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்!

பதினாறாம் நூற்றாண்டின் துவக்கத்தில் "விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்" என்று வீரமுழக்கமிட்டு மூடப்பழக்கங்கள், போலிக்கொள்கைகள், மார்க்கச் சடங்காச்சாரங்கள் ஆகிய கோட்டைகளைத் தகர்த்தெறிந்தார் விசுவாச வீரர் மார்ட்டின் லூத்தர் (1483-1546). இந்த இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் கர்த்தரது வருகையை எதிர்நோக்கியிருக்கும் இவ்வேளையில்—விசுவாசத்தின் மாட்சிமை மறக்கப்பட்டு சடங்காச்சாரங்களுக்கும் தேவையற்ற கொள்கைகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படும் இந்நாட்களில்—"மனுமகன் வரும்போது மண்ணகத்திலே விசுவாசத்தைக் காண்பாரோ?" (லூக் 18:8) என்றுரைக்கும் கர்த்தரின் ஏக்கத்தைத் தீர்க்கும்படியாய், "விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்" என்று மீண்டுமாய் வீரமுழக்கமிட நம்மை அவர் அழைக்கிறார்!

இந்த மகிமையான தேவ வார்த்தையை முதன் முறையாக வேதத்திலே ஆபகூக் 2:4இல் காண்கிறோம். ஆபகூக் என்றால் "அணைத்துக்கொள்ளுகிறவன்" என்று பொருள். வேடிக்கையான பொருள்தான்! ஆனால் அது வெள்ளங்களும், திரண்ட தண்ணீர்களும் அணைக்க முடியாத தேவன்பின் ஓட்டத்தை நமக்கு வெளிப்படுத்துகிறது. துன்பத்தில் துவளும்போது, நெருக்கத்தில் தவிக்கும்போது, ஆபத்தில் கலங்கும்போது உதவி



செய்யும்படியாக நாடிவருகிறார் தேவன். நம்மை அணைத்துக்கொள்ளும்படியாக அவரது இரக்கத்தின் கரங்கள் நீட்டப்படுகின்றன. தேவன் நம்மை மறக்கிறவரல்ல, உள்ளங்கைகளில் நம்மை வரைந்துவைத்து எப்போதும் நம்மேல் நினைவாயிருப்பவர்; அவர் நம்மைக் கை விடுகிறவரும் அல்ல, தாயினும் பரிவுடன் அரவணைத்துக்கொள்ளும் நாயகர்; தள்ளிவிட்டு வெறுத்து விடுகிறவருமல்ல, பாசத்துடன் அணைத்துக்கொள்ளும் நேசர்; கண்ணுறங்காது நம்மைக் காத்துக்கொள்ளும் கனிவுள்ளம் நிறைந்தவர்.

முக்கியத்துவம் நிறைந்த இவ்வசனம் எந்தச் சந்தர்ப்பத்திலே கூறப்பட்டுள்ளது என்பதை நோக்குவோம். இந்தச் சரித்திரம் யூதா மக்களைக் குறித்தது. அவர்கள் தேவனுக்குச் சொந்தமானவர்கள்; அவரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள். ஆனால் அவர்கள் தேவனை விட்டுச் சோரம்போனார்கள். யேகோவாவின் கற்பனைகளின்படியும், நியாயப்பிரமாணத்தின்படியும் நடக்கத் தவறிவிட்டார்கள். தங்களை அக்கிரமங்களுக்கும் அநீதிக்கும் ஒப்புக்கொடுத்தார்கள். தேவனுக்குத் துரோகம் செய்து, அவரை மறந்து அந்நிய தேவர்களைப் பின் பற்றினார்கள். அவர்கள் நடுவில் ஆபகூக் ஒரு தீர்க்கதரிசியாயிருந்தான். தேவமக்கள் செய்த பாவங்களையும், அக்கிரமங்களையும் சகிக்கக்கூடாதவனாய் அவர்களது அக்கிரமங்களுக்கு விரோதமாக அவன் குரலெழுப்பினான். தீர்க்கதரிசி என்பவன் எப்பொழுதும் தேவனுக்கு நெருக்கமாய் வாழ்பவன். அவன் தேவனுடைய வாயாயிருந்து அவருக்காய்ப் பேசுகிறவன். தேவமக்கள் தேவனுடைய வழியை விட்டுத் தவறான வழியில் செல்லும்போது, தேவனுடைய இருதயத்தின் வேதனையையும், அவரது மனதின் பாரத்தையும் மக்கள் உணரும்படியாக அப்படியே அதைக் கொட்டுவான் உண்மையான தீர்க்கதரிசி. யூதா மக்களின் பாவத்தைக் குறித்து ஆபகூக் புலம்புவதை ஆபகூக் 1:2−4இல் காணலாம்.

‘‘கர்த்தாவே, நான் எதுவரைக்கும் உம்மை நோக்கிக் கூப்பிடுவேன், நீர் கேளாமலிருக்கிறீரே! கொடுமையினி மித்தம் நான் எதுவரைக்கும் உம்மை நோக்கிக் கூப்பிடுவேன், நீர் இரட்சியாமலிருக்கிறீரே! நீர் எனக்கு அக்கிரமத்தைக் காண்பித்து, என்னைத் தீவினையைப் பார்க்கப்பண்ணுகிறதென்ன? கொள்ளையும் கொடு மையும் எனக்கு எதிரே நிற்கின்றன; வழக்கையும் வாதை யையும் எழுப்புகிறவர்கள் உண்டு. ஆகையால் நியாயப் பிரமாணம் பலமற்றதாகி, நியாயம் ஒருபோதும் செல் லாமல் போகிறது; துன்மார்க்கன் நீதிமானை வளைந்து கொள்ளுகிறான்; ஆதலால் நியாயம் புரட்டப்படுகிறது.’’

யூதா மக்கள்மீது தேவன் தமது நியாயத்தீர்ப்பை ஊற்றும்படியாய் இருந்தார். பாபிலோனிலுள்ள கல்தேயரை அவர்களுக்கு எதிராகப் பயன்படுத்த நினைத்தார். கல் தேயரைக் கொண்டு அவர்களை நியாயந்தீர்க்க எண்ணினார். ‘‘இதோ, நான் கல்தேயரென்னும் கொடிதும் வேகமுமான இனத்தாரை எழுப்புவேன்; அவர்கள் தங்களுடையதல்லாத குடியிருப்புகளைக் கட்டிக்கொள்ள தேசத்தின் விசாலங்களில் நடந்து வருவார்கள்’’ என்றார் (ஆப 1:6). தமது மக்களைத் தண்டிப்பதற்கு அவர் களைவிட அநீதியும் அக்கிரமமும் நிறைந்தவர்களைத் தேவன் பயன்படுத்துவதை ஒத்துக்கொள்ள மறுத்தது ஆபகூக்கின் உள்ளம். பொல்லாதவர்களாகிய கல்தேயர் மூலமாக தேவன் தமது மக்களை நியாயந்தீர்க்கப்போகி றார் என்பதை அவனால் ஏற்றுக்கொள்ளவே முடிய வில்லை. தேவனைப் பார்த்துக் கண்ணீர்விட்டுக் கதறு கிறான்: ‘‘தேவனே, யூதா ஜனங்கள் உம்மைவிட்டுப் பின்வாங்கிப்போனார்கள், உண்மைதான்; பாவத்தில் விழுந்து சோரம்போனார்கள், மெய்தான். ஆனாலும் அவர்கள் உம்முடைய பிள்ளைகளல்லவா? நீர் தெரிந்து கொண்டவர்களல்லவா? அவர்களைத் தண்டிக்க அவர் களைவிடத் துன்மார்க்கமாய் நடப்பவர்களை நீர்



பயன்படுத்துவானேன்?’’ அவனது இந்தக் கதறுதலையே ஆபகூக் 1:13இல் பார்க்கிறோம். ‘‘தீமையைப் பார்க்க மாட்டாத சுத்தக்கண்ணரே, அநியாயத்தைப் பார்த்துக் கொண்டிருக்கமாட்டீரே; பின்னை துரோகிகளை நீர் பார்த்துக்கொண்டிருக்கிறதென்ன? துன்மார்க்கன் தன்னைவிட நீதிமானை விழுங்கும்போது நீர் மவுன மாயிருக்கிறதென்ன?’’

தீர்க்கதரிசியின் கதறல் தேவாதி தேவனின் செவி களில் எட்டிற்று; அவரது உள்ளத்தை உருக்கிற்று. உடனடி யாய் இவ்விதம் பதிலுரைக்கிறார்: ‘‘இதோ, அகங்காரி யாயிருக்கிறானே, அவனுடைய ஆத்துமா அவனுக்குள் செம்மையானதல்ல; *தன் விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்’’* (ஆப 2:4).

தேவன் கூறிய பதிலின் பொருளாவது: ‘‘என் மக் களைத் தண்டிக்க அகங்காரிகளாகிய கல்தேயரை நான் பயன்படுத்துவதினாலே கல்தேயர் தங்கள் பாவத்துக்குரிய தண்டனையினின்று தப்புவார்கள் என்று நீ நினைக்க வேண்டாம். பெருமைக்காரராகிய கல்தேயர்மீது என் கோபாக்கினையை ஊற்றுவேன். நிச்சயமாகவே அவர் களுக்கு அழிவு உண்டு. ஆனால் *தன்* விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்.’’ இங்கு நீதிமான் என்று தேவன் குறிப்பிடுவது தாம் தெரிந்துகொண்ட யூதா மக்களையே. தேவன் அவர்களை அவ்வாறு குறிப்பிடக் காரணம் என்ன? யூதா மக்கள் தேவனை விட்டுத் தூரம் போனாலும் அவர்கள் சரித்திரத்தின் மையத்திலே விசுவாசம் இருந் தது. அவர்களது முற்பிதாவாகிய ஆபிரகாம் விசுவாசி களின் தகப்பன் என்றழைக்கப்பட்டவன், இஸ்ரவேலரின் சரித்திரமெங்கும் ‘விசுவாசம் ’ என்னும் நூல் எங்காவது ஓடிக்கொண்டேயிருக்கும். எனவேதான் தேவன், ‘‘தன்’’ விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்றார். ‘‘தன் விசுவாசம்’’ என்பது இஸ்ரவேலின் விசுவாசம், யூதாவின்

விசுவாசம். தேவமக்கள் தங்களுக்குள் மறைந்திருக்கும் அந்தரங்க விசுவாசத்தினால் பிழைப்பார்கள்!

இந்தச் சத்தியமே வேதத்தின் அடிப்படையாகும். g© oj ®C.I. ஸ்கோபீல்டு (1843–1921) தனது ஒத்து வாக்கிய வேதாகமத்திலே இதை வேதத்தின் "மையக் கருத்து" என்று குறிப்பிடுகிறார்.

*"விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்!"* இந்த தரிசனம் மிக முக்கியமானதாகையால் தேவன், "நீ தரிசனத்தை எழுதி, அதைக் கடந்தோடுகிறவனும் வாசிக்கும்படிப் பலகைகளிலே தீர்க்கமாக வரை" என்று உரைக்கின்றார் (ஆப 2:2). தரிசனமானது உறுதியான கற்பலகைகளிலே எழுதப்படவேண்டும். எழுதி வைப்பதை வேகமாக ஓடுகிறவன்கூட வாசிக்கத்தக்கதாகத் தெளிவாக, பெரிதாக, தீர்க்கமாக எழுதவேண்டுமாம்! காரணம்? "குறித்த காலத்துக்குத் தரிசனம் இன்னும் வைக்கப்பட்டிருக்கிறது; முடிவிலே அது விளங்கும், அது பொய் சொல்லாது! அது தாமதித்தாலும் அதற்குக் காத்திரு: அது நிச்சயமாய் வரும், அது தாமதிப்பதில்லை" (ஆப 2:3). "குறித்த காலம்" என்பது புதிய ஏற்பாட்டுக் காலத்தைக் குறிக்கிறது. ஆபகூக்கைப் பார்த்து தேவன் சொல்கிறார்: "உனது பார்வையில் நான் செய்வது நியாயமற்றதாகத் தெரியலாம். ஆனால் நான் செய்யும் காரியத்தைக் கவனித்துப் பார்த்துக்கொண்டிரு, காலம் அதை விளங்கப்பண்ணும். நீ காத்துக்கொண்டேயிரு. இதோ, மேசியா வருவார். இந்தத் தரிசனம் சத்தியமானது!"

*"விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்!"* இந்தத் தரிசனத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்த புதிய ஏற்பாட்டின் மூன்று முக்கிய நிருபங்கள் இந்த வசனத்தைக் குறிப்பிடுகின்றன.



1) ரோமர் 1:17, "விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறபடி விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதி விசுவாசத்திற்கென்று அந்த சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப்படுகிறது."

2) கலாத்தியர் 3:11, "நியாயப்பிரமாணத்தினாலே ஒருவனும் தேவனிடத்தில் நீதிமானாகிறதில்லையென்பது வெளியரங்கமாயிருக்கிறது. ஏனெனில், விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே."

3) எபிரெயர் 10:38, "விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்; பின்வாங்கிப்போவானானால் அவன்மேல் என் ஆத்துமா பிரியமாயிராது."

ரோமர் நிருபம் பிரதானமாக நமது கிறிஸ்தவ வாழ்க்கையின் துவக்கத்தைப்பற்றிச் சொல்லுகிறது. கலாத்தியர் நிருபம் நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கையின் இடையில் வருகின்ற பிரச்னைகளைப் பற்றிக் கூறுகிறது. இறுதியாக, எபிரெயர் நிருபம் நமது கிறிஸ்தவ வாழ்க்கையின் ஓட்டத்தை முடிப்பதைக் குறித்துப் பேசுகிறது.

1) ரோமர் : விசுவாச வாழ்வின் துவக்கம்
2) கலாத்தியர் : விசுவாச வாழ்வின் தொடர்ச்சி
3) எபிரெயர் : விசுவாச வாழ்வின் முடிவு

விசுவாச வாழ்வின் இம்மூன்று நிலைகளை வேதவசன வெளிச்சத்திலே, பரிசுத்த ஆவியானவரின் குடையின் கீழ் அமர்ந்து, தியானிப்போம். உபதேசத்துக்கடுத்த சத்தியங்கள் பல அமைந்துள்ள இச்செய்திகள் உங்கள் வாழ்க்கையில் பெரும் புரட்சியொன்றை உண்டாக்குமென்பதில் ஐயமில்லை. கிறிஸ்தவ வட்டாரங்களில் நிலவி வரும்

பலவித துர்வுபதேசங்கள் மக்களை அலைக்கழித்துக் கொண்டிருக்கும் இந்நாட்களில் இச்சத்தியத்தை நீங்கள் தெளிவாய் விளங்கிக்கொண்டால் சத்துருவின் தந்திர மான தாக்குதல்களினின்று தப்பிக்கொள்வீர்கள். இச் செய்திகளினால் உங்களுக்குச் சரிவிகிதத்தில் பக்தி விருத்தியும் புத்திவிருத்தியும் உண்டாகவும், உங்கள் வாழ்வில் அவிசுவாசக் கோட்டைகள் தகர்ந்து விசுவாசக் கோட்டைகள் எழும்பும்படியாகவும் இறைவேண்டுகிறேன்.



*பகுதி 1*

# விசுவாச வாழ்வின் துவக்கம்

‘‘முதற் கோணல் முற்றும் கோணல்’’ என்று ஒரு பழமொழியுண்டு. பலரது கிறிஸ்தவ வாழ்வில் ஏற்படும் தடுமாற்றத்திற்கும் சீர்குலைதலுக்கும் ஒரு முக்கிய காரணம் துவக்கமாகிய அடித்தளம் சரியாக அமையாத தேயாகும். இப்பகுதியில் விசுவாச வாழ்வின் துவக் கத்தைக் குறித்த ஐந்து முக்கிய மூல சத்தியங்களைத் தெளிவாகப் படிப்போம்.

*பகுதி 1 அத்தியாயம் 1*

# தேவனது ஒரே நிபந்தனை

தேவன் மனிதனை அங்கிகரிக்க அடிப்படையாய்க் கேட்கிற ஒரே நிபந்தனை விசுவாசம். வேறு எந்தக் காரியமும் தேவனுக்குப் பிரதானமானது அல்ல. நீங்கள் ஒழுங்காக ஜெபிக்கலாம்; தினமும் வேதம் வாசிக்கலாம்; தவறாது ஆலயத்துக்குச் செல்லலாம்; தான தருமங்களை மிகுதியாய்ச் செய்யலாம்; தலைசிறந்த சன்மார்க்க வாழ்க்கையும் வாழலாம். ஆனால் தேவன் உங்களை ஏற்றுக்கொள்ளுவதற்கு அவர் கேட்கும் ஒரே நிபந்தனை விசுவாசமே.

"விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்" என்கிறது திருமறை (எபி 11:6). அதாவது, 'விசுவாசமில்லாமல் வழியேயில்லை!' Without faith there's no way! நீங்கள் நூற்றுக்கதிகமான நற்காரியங்களைச் செய்தாலும் வழியேயில்லைதான்! இதற்கு வேதத்திலிருந்து ஏழு எடுத்துக்காட்டுகளைக் கவனிப்போம்.

### 1. ஆதாம், ஏவாள்

தேவன் ஆதாமையும், ஏவாளையும் தமது தோட்டத்தை விட்டுத் துரத்த ஒரே காரணம் என்ன ? அவர்கள் செய்த



பெரிய பாவம்தான் என்ன ? ஆராய்வோம். உள்ளத்தைப் பேருவகையடையச்செய்யும் அழகிய தோட்டம் ஏதேன். நறுமணம் வீசும் வண்ண வண்ண மலர்கள் மிகுந்த செடிகள்; கண்ணைக் கவரும் இனிய கனிகள் நிறைந்த மரங்கள்; கொள்ளை அழகுடன் பாய்ந்தோடும் நீரோடைகள்; மென்மையான தென்றல் காற்று. தோட்டத்திலுள்ள அனைத்தையும் அனுபவித்து, பேரானந்தக் கடலில் மூழ்கியிருந்தனர் கடவுளின் சாயலாய் உண்டாக்கப்பட்ட ஆதாமும், ஏவாளும். பகலின் குளிர்ச்சியான நேரத்திலே அனைத்தையும் உண்டாக்கிய கடவுளுடன் பக்கமாக அமர்ந்து உறவாடுவது அதைவிடப் பேரின்பம். எல்லா வற்றிற்கும் மேலாக கடவுளையே சார்ந்து அவர்மேல் விசுவாசம் வைத்து வாழும் வாழ்க்கை! இறைவன் தந்த ஒரே நிபந்தனை: "தோட்டத்திலுள்ள நன்மை தீமை அறியத்தக்க மரத்தின் கனியைப் புசிக்கவேண்டாம்; அதைப் புசிக்கும் நாளில் சாகவே சாவீர்கள்" (ஆதி 2:17). ஆனால் சத்துருவாகிய பிசாசு கேட்டான்: "புசிக்க வேண்டாம் என்று தேவன் சொன்னதுண்டோ ?" (ஆதி 3:1). அந்தோ, பரிதாபம்! கடவுள்மீதிருந்த விசுவாசம் அகன்றது. பொய்யுரையாத தேவனின் வார்த்தையை விசுவாசியாமல், சத்துருவின் கேள்வியை நம்பினார்கள். விளைவு ? தோட்டத்தை விட்டே துரத்தப்பட்டனர். ஆம் நமது முதல் பெற்றோர் செய்த முதல் பாவம் அவிசுவாசம்தான். இறைவனுடைய வார்த்தையை நம்பத் தவறினர். அதுவே பாவங்களிளெல்லாம் பெரிய பாவமாம்.

### 2. மோசே, ஆரோன்

தீர்க்கதரிசியாகிய மோசேயும், பிரதான ஆசாரியனாகிய ஆரோனும் பாலும் தேனும் ஓடுகிற கானான் நாட்டிற்குள் நுழைய முடியாமற்போனதற்குக் காரணம் என்ன ? கடவுளை அவ்வளவாய்த் துக்கப்படுத்திய அவர்களது பாவம்தான் என்ன ? பார்ப்பதற்கு அவ்வளவு

அழகாயிருந்த மோசே சின்னஞ்சிறு பாலகனாக இருக்கும் போதே தன் தாயினால் விசுவாசம் ஊட்டப்பெற்று வளர்ந் தவன்; தன் விசுவாசத்தினாலே, அநித்தியமான பாவச் சிற்றின்பங்களை அனுபவிப்பதைவிட இறைவனுடைய மக்களோடே துன்பத்தை அனுபவிப்பதையே தெரிந்து கொண்டவன்; கடவுளுடைய வீட்டில் எங்கும் உண்மை யுள்ளவன் என்று அவராலேயே சாட்சி பெற்றவன்; பழைய ஏற்பாட்டிலுள்ள எல்லாத் தீர்க்கதரிசிகளையும்விடப் பெரியவன். அவனுக்கு முன்னரோ, அவனது காலத் திலோ, அவனுக்குப் பின்னரோ அவனுக்கு நிகரான தீர்க்கதரிசி ஒருவருமில்லை. அவன் சகோதரன் ஆரோ னும் சாதாரணமானவனல்ல. அவன் கனமான ஆசாரிய ஊழியத்திற்காகத் தேவனால் அழைக்கப்பட்டவன்; பிரதான ஆசாரியனாய் இருந்தவன். தேவன் அவர்கள் இருவரையும் வெகுவாய்ப் பயன்படுத்தினார். அவர்கள் இருவருமாக, ஆண்டவரது கட்டளைப்படியே, இஸ்ர வேலரை எகிப்தின் அடிமைத்தனத்தினின்று விடுதலை யாக்கி, அற்புத அடையாளங்களுடன் கானானுக்கு நேராக வழிநடத்திச் சென்றுகொண்டிருந்தனர். கடினமான தொரு சூழ்நிலையில் அவர்களது விசுவாசம் தளர்ந்தது. கன்மலையைப் பார்த்துப் "பேசினால்" தண்ணீர் புறப்பட்டு வரும் என்று சொன்ன தேவனின் வார்த்தையை விசு வாசிக்காமல், கன்மலையை "அடித்து"விட்டனர். எனவே, கர்த்தர் அவர்களைப் பார்த்து, "நீங்கள் என்னை *விசு வாசியாமற்போனபடியினால்* இந்தச் சபையாருக்கு நான் கொடுத்த நாட்டிற்குள் நீங்கள் அவர்களைக் கொண்டு போவதில்லை" என்றார் (எண் 20:12). வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டிற்குள் மோசேயும் ஆரோனும் நுழைய முடியாமல் தடுத்த ஒரே பாவம் அவர்களது அவிசுவாசம்.

### 3. இஸ்ரவேலர்

இஸ்ரவேல் மக்களைத் தேவன் தமக்கென்று தெரிந் தெடுத்தார். அவர்களைப் பெயர் சொல்லி அழைத்து



அறிந்தார்; பரிசுத்தக் கூட்டமாக வாழ்வதற்காக அவர் களைப் பிரித்தெடுத்தார்; கரம்பிடித்து நடக்கப் பழக் கினார்; தந்தையைப்போல் தோள்மீது தூக்கிச் சுமந்தார். அவர்கள் அவரது பங்காகவும் சுதந்திரவீதமாகவும் இருந்தனர். எகிப்தின் அடிமைத்தனமாகிய புயற்காற்றில் அவர்கள் சிக்கித் தவிப்பதைப் பொறுக்கவொண்ணாத அவர் அதினின்று அவர்களை மீட்டு வெளியே கொண்டு வந்தார். ஆனாலும் அவர்கள் கானான் நாட்டிற்குள் நுழையமுடியவில்லை. காரணம்? "*அவிசுவாசத்தினலே* அவர்கள் அதில் நுழையக்கூடாமற்போனார்கள்!" (எபி 3:19). இஸ்ரவேலரின் பாவப்பட்டியல் நீளமாக இருக் கலாம். ஆனால் தேவனை வேதனைப்படுத்திய மகா பெரிய பாவம் அவர்களது அவிசுவாசம்தான்.

அடுத்து, சாதகமான சில எடுத்துக்காட்டுகளைக் கவனிப்போம்.

### 4. பவுல், சீலா

கிறிஸ்து இயேசுமீதுள்ள விசுவாசத்தைப் பறை சாற்றினதற்காய்ப் பவுலும் சீலாவும் சிறையிலடைக்கப் பட்டனர். சிறைச்சாலை அவர்களது விசுவாசத்தை அழிக்க முடியவில்லை. தொழுமரத்தில் மாட்டப்பட்ட கால்களுடன் நள்ளிரவிலும் ஜெபித்து, தூயவனைத் துதித்துப் புகழ்ந் தனர். திடீரென்று நிலநடுக்கம்! சிறைச்சாலையின் அடித்தளங்கள் அசைந்தன! கதவுகள் திறந்தன! அனை வரின் கட்டுகளும் தெறித்தன! கட்டுண்டவர்கள் தப்பி ஓடிவிட்டார்களென எண்ணி, தற்கொலை செய்யப் போனான் சிறைச்சாலை அதிகாரி. "நாங்கள் இங்கேதான் இருக்கிறோம்" என்ற பவுலின் வார்த்தைகள் அவனை நடுங்கச் செய்தன. தீபங்களைக் கொண்டு வரச்சொல்லி, ஓடி, பவுலுக்கும் சீலாவுக்கும் முன்பாக விழுந்தான். "ஆண்டவன்மாரே, இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன

செய்யவேண்டும்?'' என்றான் (அப் 16:30). உடனே பவுலும் சீலாவும் "இரட்சிப்பின் ஏழுபடிகள்'' என்ற ஒரு பெரிய பிரசங்கத்தைச் செய்யவுமில்லை, நீண்ட பாவ அறிக்கைப் பட்டியல் ஒன்றை அவனுக்குக் கொடுக்க வுமில்லை. அவர்கள் அளித்த ஒரே பதில்: "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை *விசுவாசி,* அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்'' (அப் 16:31).

"இரட்சிக்கப்பட நான் என்ன செய்யவேண்டும்? என் பாவங்களிலிருந்து விடுதலை பெற வழி என்ன?'' என்று இதயத்தின் ஆழத்தில் இன்றும் குமுறிக்கொண்டிருப்போர் கோடிக்கணக்கானோர். சன்மார்க்க வாழ்க்கை இரட் சிக்கும் என எண்ணி ஏமாந்துபோனோர் எண்ணற்றோர். தான தருமங்கள் செய்தும் பலனில்லையே என்று புலம்பு வோர் பலர். புண்ணியத்தலங்களைச் சென்று தரிசிப்ப தினால் பாவம் நீங்குமோ என ஏங்குவோர் ஏராளம். கவலை வேண்டாம். உங்கள் உள்ளத்திற்கு உவகையூட்டும் ஒரே பதில், உங்கள் இதயத்திற்கு சமாதானம் நல்கும் ஒரே பதில், திருமறை நவிலும் ஒரே பதில்: "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை *விசுவாசி,* அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்.'' விசுவாசத்தின் அதிவுன்னதமான, அதிமேன்மையான காரியம் இதுவே.

### 5. யோவான் 6:28,29

இயேசுவின் சீடர்கள் அவர் அற்புதம் செய்கிறதைப் பார்த்துக்கொண்டிருந்தனர். குருடர் பார்வையடைகின் றனர்; செவிடர் கேட்கின்றனர்; ஊமையர் பேசுகின்றனர்; தொழுநோயாளி சுகமடைகிறான்; திமிர்வாதக்காரன் எழுந்து நடக்கிறான்; ஐந்தப்பம் இரு மீன்களை ஐயாயிரம் பேர் சாப்பிட்டும் பன்னிரண்டு கூடைகள் நிறைய மீதி! சீடர்களுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. இத்தகைய அற்புதங்களை ஆண்டவரைப்போல் தாங்களும் செய்தால்



எவ்வளவு நன்றாயிருக்கும்! ஆனால் செய்வது எவ்வாறு? "ஆண்டவரே, தேவனுக்கேற்ற செயல்களை நடப்பிக் கும்படி நாங்கள் என்ன செய்யவேண்டும்?'' (யோ 6:28). இயேசு தம்மைப்போல் அற்புதங்களைச் செய்வதற்கு இன்னின்ன வழிகளைக் கடைப்பிடிக்க வேண்டுமென ஒரு புத்தகத்தையே கொடுப்பார் என சீடர்கள் எதிர் பார்த்திருக்கலாம்; அல்லது மிகப்பெரிய காரியங்களைச் சாதிப்பதற்கு இன்னின்ன படிகளைத் தாண்டவேண்டும் என்று ஒரு பட்டியலைக் கொடுப்பார் என்றும் எண்ணி யிருக்கலாம். இயேசுவோ மிகவும் எளிமையானவர்; ஆனால் மகிமையானவர். மகிமையான காரியங்களை எளிமையாய்ச் சொல்லுகிறதே அவரது ஞானம், அதுவே அவரது சாதுரியம். அவர் கொடுத்த பதில் மிகவும் எளிமையானது, ஆனால் மகிமையானது: "அவர் அனுப் பினவரை நீங்கள் *விசுவாசிப்பதே* தேவனுக்கேற்ற செய லாயிருக்கிறது!'' (யோ 6:29).

ஒரு வேளை இன்று ஊழியர் ஒருவர் இவ்விதப் பதிலைக் கொடுப்பாரானால், தற்கால வேத வல்லுனர்கள் அவருக்கு மதிப்பெண் வழங்குவது கடினம். அவருக்கு ஆழமாய்த் தெரியாததால் சாதாரணமாய்ச் சொல்லு கிறார் எனத் தீர்த்துவிடுவர். சில சமயங்களில் நாம் "ஆழமாய்ப்'' போக எண்ணி "உயரமாய்ச்'' செல்லாமற் போகிறோம்! "இறைமகனை விசுவாசிப்பதே இறைவனுக் கேற்ற செயல்.'' எளிமையான பதில்! திட்டமான பதில்! ஆணித்தரமான பதில்! விசுவாசத்தின் மேன்மையை உறுதிப்படுத்தும் பதில்!

### 6. யோவான் 16:8,9

"அவர் (பரிசுத்த ஆவியானவர்) வந்து பாவத்தைக் குறித்தும்... உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார்... அவர்கள் என்னை *விசுவாசியாதபடியினாலே* பாவத்தைக் குறித்து... கண்டித்து உணர்த்துவார்.'' இங்கே 'பாவங்கள்'

என்று பன்மையில் கூறப்படாமல் 'பாவம்' என்று ஒருமையில் சொல்லப்பட்டுள்ளது. அது என்ன பாவம் என்பதை 9ஆம் வசனத்தில் காண்கிறோம்—"அவரை விசுவாசியாதபடியினாலே." அவிசுவாசம் பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளன் கண்டித்துணர்த்தும் பிரதான பாவமாம்; ஏனெனில் உலகிலுள்ள பாவங்களில் மிகப் பிரதானமான பாவம் அதுவே. "மரணத்துக்கேதுவல்லாத பாவத்தைத் தன் சகோதரன் செய்ய ஒருவன் கண்டால், அவன் வேண்டுதல் செய்யக்கடவன், அப்பொழுது அவனுக்கு வாழ்வைக் கொடுப்பார்; யாருக்கென்றால், மரணத்துக்கு ஏதுவல்லாத பாவத்தைச் செய்தவர்களுக்கே; மரணத்துக்கு ஏதுவான பாவமுண்டு, அதைக் குறித்து வேண்டுதல் செய்ய நான் சொல்லேன்" என்றெழுதினான் அப்போஸ்தலன் யோவான் (1 யோ 5:16). மரணத்துக்கு ஏதுவான ஒரே பாவம் அவிசுவாசம் மட்டுமே. ஒருவன் வேறு எந்தப் பாவம் செய்யும்போதும் நீங்கள் ஜெபம் பண்ணினால் தேவன் கேட்டு அந்தப் பாவத்தை அவனுக்கு மன்னிப்பார். ஆனால் அவன் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை இரட்சகராய் விசுவாசிக்க மறுத்துக் கொண்டிருப்பதை அவனுக்கு மன்னிக்கும்படி நீங்கள் எவ்வளவுதான் ஜெபித்தாலும் அவனது அவிசுவாசத்தை ஆண்டவர் மன்னிப்பதில்லை. விபச்சாரம், கொலை, அன்பின்மை, விக்கிரகாராதனை முதலியவை கொடிதான பாவங்களாயிருந்தாலும், அவையல்ல உங்களை நரகத்திற்கு கொண்டுசெல்வது. விபச்சாரம் செய்யாதவர்கள், கொலை செய்யாதவர்கள், இன்னும் இதுபோன்ற தீயவை பல செய்யாதவர்களும் நரகத்திலிருப்பார்கள். ஆனால் அவர்களெல்லாரும் விசுவாசியாதவர்களாயிருப்பார்கள்!

### 7. யோவான் 3:18

"அவரை *விசுவாசிக்கிறவன்* ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான்; விசுவாசியாதவனோ, தேவனுடைய ஒரே



பேறான குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனாயிராதபடியினால், அவன் ஆக்கினைத்தீர்ப்புக்கு உட்பட்டாயிற்று." கிறிஸ்துவின்மீதுள்ள விசுவாசமாகிய நீதிக்குள் மறைந்திருக்கிறவனுக்கு ஆக்கினைத் தீர்ப்பு இல்லை. பிதாவின் மடியில் செல்லப் பிள்ளையாயிருந்து தினமும் அவருடைய மனமகிழ்ச்சியாயிருந்த தம்முடைய ஒரே பேறான குமாரனை அவர் உலகுக்கு அனுப்பியிருந்தும், அவரை விசுவாசியாதவன் "ஏற்கனவே" ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டாயிற்று என்கிறது வேதம். அவன் இன்னுமொரு நியாயத்தீர்ப்பு நாளுக்கென்று காத்திருக்க வேண்டியதில்லை. அவனது அவிசுவாசமாகிய பாவம் ஏற்கனவே அவனை நரகத்தின் மகனாக்கிற்று. எத்தனை பயங்கரம்! ஆ! விசுவாசி என்னும் போர்வைக்குள் மறைந்திருக்கும் அவிசுவாசிகளும், எம்மதமும் சம்மதம் எனப் பெருமையடிப்போரும், கடவுள் இல்லையெனப் பிதற்றுவோரும் இவ்வுண்மையை உணர்ந்து மனந்திரும்பினால் எத்தனை நலமாயிருக்கும்! "குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்திய வாழ்வை உடையவனாயிருக்கிறான்; குமாரனை விசுவாசியாதவனோ வாழ்வைக் காண்பதில்லை. கடவுளுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும்" (யோ 3:36).

இந்த ஏழு எடுத்துக்காட்டுகளும் கடவுள் நம்மிடம் எதிர்பார்க்கும் விசுவாசம் என்பது எவ்வளவு பிரதானமானதும் இன்றியமையாததுமானது என வலியுறுத்துகின்றன.

தேவ மக்களின் வாழ்க்கை முழுவதும் விசுவாசத்தோடு பின்னிப் பிணைக்கப்பட்டிருப்பதை இதோ கவனியுங்கள்—

*அ) விசுவாசத்தைத் துவக்குகிறவர்*

"விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்குக் குறிப்பிட்டி

ருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடுவோம்'' (எபி 12:1)

*ஆ) விசுவாசக் குடும்பத்தார்*

''யாவருக்கும், சிறப்பாக விசுவாசக் குடும்பத்தார்களுக்கும், நன்மை செய்வோம்'' (கலா 6:10)

*இ) விசுவாசத்தின் ஆவி*

''விசுவாசித்தேன், ஆகையால் பேசினேன் என்று எழுதியிருக்கிறபடி, நாங்களும் அந்த விசுவாசத்தின் ஆவியை உடையவர்களாயிருந்து, விசுவாசிக்கிறபடியால் பேசுகிறோம்'' (2 கொரி 4:13)

*ஈ) விசுவாச வார்த்தை*

''இந்த வார்த்தை நாங்கள் பிரசங்கிக்கிற விசுவாசத்தின் வார்த்தையே'' (ரோ 10:8)

*உ) விசுவாசமுள்ள ஜெபம்*

''விசுவாசமுள்ள ஜெபம் நோயாளியை இரட்சிக்கும்; கர்த்தர் அவனை எழுப்புவார்; அவன் பாவம் செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்'' (யாக் 5:15)

*ஊ) விசுவாசத்தில் குமாரன்*

''விசுவாசத்தில் உத்தம குமாரனாகிய தீமோத்தேயுவுக்கு எழுதுகிறதாவது...'' (1 தீமோ 1:2)

*எ) விசுவாசப் போராட்டம்*

''விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு'' (1 தீமோ 6:1,2)



இப்படி,

| | | |
|---|---|---|
| *நமது தலைவர்* | — | *விசுவாசத்தைத் துவக்குகிறவர்* |
| *நமது சபை* | — | *விசுவாசக் குடும்பம்* |
| *நமது உயிர்* | — | *விசுவாசத்தின் ஆவி* |
| *நமது செய்தி* | — | *விசுவாச வார்த்தை* |
| *நமது மன்றாட்டு* | — | *விசுவாச ஜெபம்* |
| *நமது கனிகள்* | — | *விசுவாசக் குமாரர், குமாரத்திகள்* |
| *நமது யுத்தம்* | — | *விசுவாசப் போராட்டம்* |

*பகுதி 1 அத்தியாயம் 2*

# தோல்வி ஏன்?

**தேவன்** மனிதனை ஏற்றுக்கொள்ள ஒரே நிபந்தனை விசுவாசம் என்று பார்த்தோம். ஆனால் மனிதனோ தேவனுடைய இந்த எளிய திட்டத்தை அறியாதவனாய்த் தோல்வியடைந்தான். எடுத்துக்காட்டாக, இஸ்ரவேல் மக்களை எடுத்துக்கொள்வோம். அவர்கள் தோல்வி யடைய இரு காரணங்கள் உண்டு: ஒன்று, அவர்கள் தங்கள் சுய முயற்சி பயனற்றது என்பதை அறியவில்லை. அடுத்து, நியாயப்பிரமாணம் தற்காலிகமாகவே கொடுக் கப்பட்டது என்பதையும் உணரத் தவறிவிட்டார்கள்.

**அ) சுயமுயற்சி பயனற்றது.**

இஸ்ரவேல் மக்களுக்கு மோசேயின் மூலமாகக் கடவுள் தமது பிரமாணத்தைக் கொடுத்தார். அதற்கு அவர்கள், "நாங்கள் இந்தக் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்து, அவைகள் எல்லாவற்றின்படியும் நடப்போம்" என்று சொன் னார்கள் (யாத் 24:3). இதுவே அவர்கள் செய்த முதல் மதியீனச் செயல். நடைமுறையில் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளுவதற்கான கிரயம் என்னவென்பதைச் சற்றும் சிந்திக்கத் தவறிவிட்டார்கள்; இதில் என்னென்ன



கேட்கப்படுகிறது என்பது அவர்களுக்குத் தெரிய வில்லை; அப்படியே தெரிந்தாலும், தங்களது முடியா மையை அவர்கள் உணரவில்லை; நியாயப்பிரமாணத் தில் தேவன் எதிர்பார்ப்பது எவ்வளவு உயரமானது, எட்டுதற்கரியது என்பதையும் அவர்கள் அறியவில்லை. மிகச் சாதாரணமாகத் தலையசைத்து "செய்வோம்" என்று பதிலுரைத்துவிட்டார்கள். அறிவீனம்! தங்களைத் தாழ்த்தி இறைவனது பாதத்தில் வீழ்ந்து, "தேவா, இதைச் செய்ய எங்களால் முடியாது. எங்களது திறனில்லாமையை ஒத்துக்கொள்ளுகிறோம்" என்று சொல்லியிருந்தார் களானால் அதுதான் ஞானம். அப்படிச் சொல்லியிருந்தால் தேவன் என்ன செய்திருப்பாரென்று நமக்குத் தெரியாது, அது வேதத்தில் இல்லை. அவர்கள் எடுத்துக்கொண்ட தீர்மானத்தை அவர்களும் கைக்கொள்ளமுடியவில்லை; அவர்களது பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பின்வந்த சந்ததியார் ஒருவருமே நிறைவேற்ற முடியவில்லை, எவ ராலும் முடியாதுதான்! வேதம் அப்படித்தான் சொல்லு கிறது:

"உன்னிடத்தில் நீ அன்புகூருகிறதுபோலப் பிறனி டத்திலும் அன்புகூருவாயாக என்று வேதவாக்கியம் சொல்லுகிற ராஜரிகப் பிரமாணத்தை நீங்கள் நிறை வேற்றினால் நன்மை செய்வீர்கள்; பட்சபாதமுள்ளவர் களாயிருப்பீர்களானால், பாவம் செய்து, மீறினவர் களென்று நியாயப்பிரமாணத்தால் தீர்க்கப்படுவீர்கள். எப்படியெனில், ஒருவன் நியாயப்பிரமாணம் முழுவதையும் கைக்கொண்டிருந்தும், ஒன்றிலே தவறினால் எல்லா வற்றிலும் குற்றவாளியாயிருப்பான். ஏனென்றால், விப சாரம் செய்யாதிருப்பாயாக என்று சொன்னவர் கொலை செய்யாதிருப்பாயாக என்றும் சொன்னார்; ஆதலால் நீ விபசாரம் செய்யாமலிருந்தும் கொலை செய்தாயானால் நியாயப்பிரமாணத்தை மீறினவனாவாய்" (யாக் 2:8−11).

எவராயிருந்தாலும் நியாயப்பிரமாணம் முழுவதையும், அதற்குரிய நூறு விளக்கங்களையும், கைக்கொண்டிருந்தும் ஏதாவது ஒன்றில் தவறினால் எல்லாவற்றிலும் குற்றவாளியாம்! அதுவே கடவுளின் கணிப்பு! மனிதனுடைய பார்வையிலே சில பாவங்கள் பெரியதாகத் தெரியலாம், சில பாவங்கள் சிறியதாகத் தெரியலாம். "விபசாரம் செய்யாதிருப்பாயாக" என்று சொன்னவர், "உன்னைப்போல் பிறனை நேசி" என்றும் சொல்லியிருக்கிறார். நமது கிறிஸ்தவ வாழ்க்கையின் உச்சக்கட்டத்தில் நாம் ஒரு வேளை எவரையும் பகைக்காமல் இருக்கலாம்; ஆனால் நம்மை நாம் நேசிப்பதைப்போல யாவரையும் நேசிப்போமா? இப்படிப்பட்ட தரத்தில், கடவுளுக்குமுன் நம்மில் யார்தான் குற்றமற்றவன் என்று சொல்லமுடியும்? 10 அடி அகலமான ஒரு குழியைத் தாண்டி மறுபக்கம் போகவேண்டுமானால் 10 அடியையும் தாண்டினால்தான் முடியும்; 9½ அடி தாண்டினாலும் குழியில் விழவேண்டியதுதான்; அதேபோல்தான் நியாயப்பிரமாணமும்! "நீ எல்லாவற்றையும் கைக்கொண்டும், ஒன்றில் தவறினால் எல்லாவற்றிலும் குற்றவாளியாயிருப்பாய்." நம்முடைய தத்துவம் இதை ஒத்துக்கொள்ளத் தயங்கினாலும், இதுவே தேவனுடைய வார்த்தை. இதுவே உண்மை.

ஆதித் திருச்சபையில் அதைப்போன்ற பிரச்னை ஒன்று வந்தது. சிலர் யூதேயாவிலிருந்து வந்து: "நீங்கள் மோசேயினுடைய முறைமையின்படியே விருத்தசேதனமடையாவிட்டால், இரட்சிக்கப்படமாட்டீர்கள் என்று சகோதரருக்குப் போதகம் பண்ணினார்கள்... அப்பொழுது பரிசேய சமயத்தாரில் விசுவாசிகளான சிலர் எழுந்து, அவர்களை விருத்தசேதனம்பண்ணுகிறதும் மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளும்படி அவர்களுக்குக் கற்பிக்கிறதும் அவசியம் என்றார்கள். பேதுரு எழுந்து அவர்களை நோக்கி, நம்முடைய மூதாதையர்



களாலும் நம்மாலும் சுமக்கக்கூடாதிருந்த நுகத்தடியை சீடர்களின் கழுத்தின்மேல் சுமத்துவதினால் நீங்கள் தேவனைச் சோதிப்பானேன் என்றான்" (அப் 15:1,5,10).

பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணத்திற்கு அப்போஸ்தலர் கொடுத்த பெயர் "நுகத்தடி!" "நம்முடைய முன்னோர்களாலும் நம்மாலும் ஒரு நுகத்தைப் போல சுமக்க முடியாமல் இருந்த நியாயப்பிரமாணத்தை விசுவாசிகள்மீது ஏன் சுமத்தவேண்டும்?" என்பதே பேதுருவின் கேள்வி. எனவேதான் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இந்த பூமியிலே ஊழியம் செய்கையில் யூதரைப் பார்த்து, "வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன். என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் எளிதாயும் என் சுமை இலகுவாயும் இருக்கிறது என்றார்" (மத் 11:28−30). அதாவது, மோசேயின் நுகத்தை இறக்கிவைத்துவிட்டுத் தமது நுகத்தை ஏற்றுக்கொள்ளச் சொன்னார். ஏனெனில் கிறிஸ்துவின் நுகம் மெதுவானது, அவரது பாரம் இலகுவானது. பாரமான பிரமாண நுகத்தைக் களைந்துவிட்டு, எளிதான கிருபையின் நுகத்தை விசுவாசத்தால் பற்றிக்கொள்ளுவோம்!

**ஆ) நியாயப்பிரமாணம் தற்காலிகமானது.**

இஸ்ரவேலரின் தோல்விக்கு இரண்டாம் காரணம், நியாயப்பிரமாணம் தற்காலிகமாகவே கொடுக்கப்பட்டது என்பதை விளங்காமை ஆகும். நியாயப்பிரமாணத்தின் தற்காலிகத் தன்மையைக் கீழ்க்காணும் வேத வாக்கியங்கள் நமக்கு விளக்குகின்றன—

1) **எபிரெயர் 10:1,** "நியாயப்பிரமாணமானது வரப் போகிற நன்மைகளின் பொருளாயிராமல், அவைகளின் நிழலாய் மட்டும் இருக்கிறது." நிழல் நல்லதுதான். ஆனால் சூரியன் உச்சியில் வரும்போது நிழல் மறைந்துவிடுமே! பழைய ஏற்பாட்டுக் காலத்தில் நியாயப்பிரமாணமாகிய நிழல் வந்தது. நீதியின் சூரியனாகிய இயேசு கிறிஸ்து உதிர்த்து, உயர எழும்பி வந்து, உச்சியில் தமது காந்தியை முழுப் பிரகாசத்துடன் வீசியபோது அந்த நிழல் மறைந்து விட்டது! நீதியின் சூரியனாகிய இயேசு கிறிஸ்து மேசி யாவாக வந்தபோதும் இஸ்ரவேலர் நிழலைத்தான் தேடிக் கொண்டிருந்தார்கள். நிசம் வந்தபின் நிழல் எங்கே? "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்" என்றார் இயேசு! அவர்களோ நிசத்தை அல்லது பொருளை ஏற்றுக்கொள்ளாமல் நிழலையே தழுவியணைத்துக் கொள்ள விரும்பினார்கள். என்னே பரிதாபம்! நாம் பொருளையும் (substance) நிழலையும் (shadow) ஒரு மனே உடையவர்களாயிருக்க முடியாது. ஒன்று பொருளை யுடையவர்களாயிருக்கவேண்டும், அல்லது நிழலை யுடையவர்களாயிருக்கவேண்டும். நிழலைத் தழுவிய ணைத்து, பொருளைத் தவறவிடுவது மடமை! "அவை கள் வருங்காரியங்களுக்கு நிழலாயிருக்கின்றன; அவை களின் பொருள் கிறிஸ்துவைப் பற்றியது" (கொலோ 2:17).

2) **கொலோசெயர் 2:14-16,** "நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின் மேல் ஆணியடித்து, துரைத்தனங் களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு, வெளி யரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவை யிலே வெற்றி சிறந்தார். ஆகையால் உணவையும் பானத் தையும் குறித்தாவது, பண்டிகை நாளையும் மாதப் பிறப் பையும் ஒய்வு நாட்களையும் குறித்தாவது, ஒருவனும் உங்களைக் குற்றப்படுத்தாதிருப்பானாக." நியாயப்பிர



மாணம் நமக்கு எதிரிடையாகவும் விரோதமாகவும் இருந்த கையெழுத்து! நியாயப்பிரமாணத்தை நம்மால் நிறைவேற்ற முடியவில்லை. அது நம்மேல் பாரமான சுமையாயிருந்தது. அதனால் நம்மேல் இரக்கங்கொண்ட தேவன் நமக்கு எதிரிடையாகவும் நமக்கு விரோதமாகவும் இருந்த தம்முடைய கையெழுத்தைத் தாமே குலைத்துப்போட்டார். அது மட்டுமல்ல, பாதையை மறித்துக்கொண்டு சிலை போல் நின்றுகொண்டிருந்த அதை நடுவே இராதபடிக்கு அகற்றிவிட்டார். கல்வாரிச் சிலுவையிலே தம்முடைய மாம்சமாகிய திரையைக் கிழித்து, புதிதும் ஜீவனுமான வழியை உருவாக்குவதற்குத் தடையாயிருந்ததை எடுத்துச் சிலுவையின்மேல் ஆணியடித்தார். சட்டதிட் டங்களாகிய நியாயப்பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினால் அகற்றினார். துரைத்தனங்கள், அதி காரங்கள் எல்லாவற்றையும் வெளியரங்கமாக்கி, அவற் றின்மேல் சிலுவையிலே வெற்றி சிறந்தார். ஆகையால் "தொடாதே, ருசிபாராதே, தீண்டாதே" என்ற நியாயப் பிரமாணக் கட்டளைகளைக் குறித்தும், போஜனம், பானம், ஓய்வுநாட்கள் போன்றவற்றைக் குறித்தும் எவரையும் குற்றப்படுத்த ஒருவனுக்கும் உரிமையில்லை. வரப்போகி றவைகளுக்கு நிழலாயிருந்த அவை வழியில் இராத படிக்கு கிறிஸ்து அவற்றை நீக்கிவிட்டாரே! அல்லேலூயா!

3) **கலாத்தியர் 3:23-25**, "விசுவாசம் வருகிறதற்கு முன்னே, வெளிப்படப்போகிற விசுவாசத்திற்கு ஏதுவாக நாம் அடைக்கப்பட்டவர்களாய் நியாயப்பிரமாணத்தின் கீழ் காவல்பண்ணப்பட்டிருந்தோம். இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுவதற்கு நியா யப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவிடம் வழிநடத்துகிற ஆசானாய் இருந்தது. விசுவாசம் வந்தபின்பு நாம் ஆசா னுக்குக் கீழானவர்களல்லவே." நியாயப்பிரமாணம் நம்மை அடைத்துவைத்திருந்த சிறைச்சாலை! நம்மை அடக்கிவைத்திருந்த வாத்தியார்! முற்காலத்தில்

வாத்தியார் என்றால் மாணவருக்குச் சிம்ம சொப்பனம் தான். அரசனின் பிள்ளைக்கும் ஆசிரியரென்றால் பீதிதான்; ஆசிரியருக்கு அவன் மாணவன்தானே? அவ்விதமே நியாயப்பிரமாணமாகிய ஆசான் நம்மைப் பயமுறுத்தி, அடக்கி வைத்திருந்தது. ஆனால் விசுவாசம் வந்தபின்னரோ, அந்த ஆசானுக்கு நாம் கீழ்ப்பட்டவர் களல்ல. கிறிஸ்துவுக்குள் விடுதலையாக்கப்பட்டவர்கள், கிறிஸ்துவுக்குள் சுயாதீனர். எத்தனை மகிழ்ச்சி! எத் தனை பேரின்பம்!

விசுவாசம் எவ்வாறு நியாயப்பிரமாணத்தைத் தவிர்த் தது அல்லது அதைச் சேராதது என்பதைக் கீழ்க்காணும் வேதவாக்கியங்கள் தெளிவாக விளக்குகின்றன—

*ரோமர் 3:20-22*, பாவத்தை அறிகிற அறிவு நியாயப் பிரமாணத்தினால் வருகிறபடியால், எந்த மனிதனும் நியாயப்பிரமாணத்தின் செய்கைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை. இப்படியிருக்க, நியாயப்பிரமாணம் இல்லாமல் தேவநீதி வெளியாக்கப் பட்டிருக்கிறது; அதைக் குறித்து நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களும் சாட்சியிடுகின்றன. அது இயேசு கிறிஸ்துவின்மீதுள்ள விசுவாசத்தினாலே பலிக்கும் தேவ நீதியே; விசுவாசிக்கிற எவர்களுக்குள்ளும் எவர்கள் மேலும் அது பலிக்கும், வித்தியாசமே இல்லை.''

*ரோமர் 3:27,28*, ''இப்படியிருக்க, மேன்மைபாராட்டல் எங்கே? அது நீக்கப்பட்டதே. எந்தப் பிரமாணத்தினாலே? கிரியைப் பிரமாணத்தினாலேயா? அல்ல; விசுவாசப் பிரமாணத்தினாலேயே. ஆதலால், மனிதன் நியாயப் பிரமாணத்தின் கிரியைகளில்லாமல் விசுவாசத்தினா லேயே நீதிமானாக்கப்படுகிறான் என்று தீர்க்கிறோம்.''

*ரோமர் 9:30-32*, ''இப்படியிருக்க நாம் என்ன சொல்லுவோம்? நீதியைத் தேடாத புறவினத்தார் நீதியை



அடைந்தார்கள்; அது விசுவாசத்தினாலாகும் நீதியே. நீதிப்பிரமாணத்தைத் தேடின இஸ்ரவேலரோ நீதிப் பிரமாணத்தை அடையவில்லை. ஏனென்றால், அவர்கள் விசுவாசத்தினாலே அதைத் தேடாமல் நியாயப்பிரமாணத் தின் செய்கைகளினாலே தேடினபடியால் அதை அடைய வில்லை; இடறுதற்கான கல்லில் இடறினார்கள்.''

*கலாத்தியர் 2:16,21*, ''நியாயப்பிரமாணத்தின் செய் கைகளினாலே எந்த மனிதனும் நீதிமானாக்கப்படுவதில் லையே... நான் தேவனுடைய கிருபையை விருதாவாக்கு கிறதில்லை. நீதியானது நியாயப்பிரமாணத்தினாலே வருமானால், கிறிஸ்து மரித்தது வீணாயிருக்குமே.''

*கலாத்தியர் 3:10-12*, ''நியாயப்பிரமாணத்தின் கிரி யைக்காரராகிய யாவரும் சாபத்திற்குட்பட்டிருக்கிறார்கள்; நியாயப்பிரமாண புத்தகத்தில் எழுதப்பட்டவைகளை யெல்லாம் செய்யத்தக்கதாக அவைகளில் நிலைத்திரா தவன் எவனோ அவன் சபிக்கப்பட்டவன் என்று எழுதி யிருக்கிறதே. நியாயப்பிரமாணத்தினாலே ஒருவனும் தேவனிடத்தில் நீதிமானாகிறதில்லையென்பது வெளி யரங்கமாயிருக்கிறது. ஏனெனில், *விசுவாசத்தினாலே* நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே. நியாயப் பிரமாணமோ விசுவாசத்திற்குரியதல்ல; அவைகளைச் *செய்கிற* மனிதனே அவைகளால் பிழைப்பான்.''

நியாயப்பிரமாணத்தில் நூற்றுக்குத் தொண்ணூற் றொன்பதையும் கைக்கொண்டு, ஒன்றில் தவறுகிறவனும் சபிக்கப்பட்டவன். ஏனெனில் நியாயப்பிரமாணம் முழு மையும் கடைப்பிடிக்கிறவனே ஆசீர்வதிக்கப்பட்டவன். நியாயப்பிரமாணம் விசுவாசத்திற்கு உட்பட்டதல்ல. இந்த இரண்டையும் ஒரே புட்டியில் அடைத்துவைக்க முடியாது.

''கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத் தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார்''

(கலா 3:13). நாம் அந்தச் சாபத்தினின்று மீட்கப்படுவதற்காக கிறிஸ்து சிலுவை மரத்தில் தொங்கினார். இயேசு கிறிஸ்துவுக்குட்பட்டவர்களாய் இருப்பவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை. நம்மை ஆக்கினைத் தீர்ப்புக்குட்படுத்துகிறவன் யார்? கிறிஸ்துவே நமக்காக மரித்தவர்; நமக்காக மரத்திலே தூக்கப்பட்டவர்; நமக்காகச் சாபமானவர் (கலா 3:13). “விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்!” என்று நூறு தடவை வேண்டுமானாலும் திரும்பத் திரும்ப சொல்லலாம். விசுவாசத்தினாலேயே நாம் வாழுவோம்!



*பகுதி 1 அத்தியாயம் 3*

# எளிய விசுவாசம்

**எளிய** விசுவாசத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக வேதத்தில் மூன்று பெண்களைப் பார்க்கிறோம். இம்மூவரும் சிற்றின்பப் பாவத்தைப் பால் போல் பருகிக் கொண்டிருந்தவர்கள்; ஆனால் அவர்களது விசுவாசம் அவர்களை வாழ்வுதரும் நீரூற்றில் பானம்பண்ணுகிறவர்களாய் மாற்றிவிட்டது. முழுவதும் தீமையே உருவாகக் கொண்டவன் மனிதன். இறைவனோ முற்றிலும் பரிசுத்தர், நல்லவர், உன்னதமானவர். இரண்டுக்குமிடையில் எத்தனை முரண்பாடு! இந்த அறிவே தேவனை உண்மையாய் ஆராதிக்கிறவர்களாய் நம்மை மாற்றிவிடும்.

### அ) ராகாப்

எபிரெயர் 11:31, “விசுவாசத்தினாலே ராகாப் என்னும் வேசி வேவுகாரரைச் சமாதானத்தோடே ஏற்றுக்கொண்டு, கீழ்ப்படியாதவர்களோடேகூடச் சேதமாகாதிருந்தாள்.” எபிரெயர் நிருபம் எழுதப்பட்ட அன்று, சரித்திரத்திலே இவள் தோன்றி ஏறக்குறைய 2000 ஆண்டுகளுக்கு மேல் ஆகியிருந்தும், இவள் வேசி என்றே அழைக்கப்படுகிறாள். அவளது பாவத்தின் கறை அவ்வளவு இறு

கியது. ஆனாலும் விசுவாசத்தினாலே அவள் சேதமாகாதிருந்தாளாம். புறவினத்துப் பெண்ணாகிய அவளது விசுவாசம் மிகவும் ஆச்சரியமானது. "அவள் அந்தச் சிவப்புக் கயிற்றை ஜன்னலிலே கட்டி வைத்தாள்" என்று வாசிக்கிறோம் (யோசு 2:21). சிவப்பு நூல் கயிறு! அவளது பாவம் இரத்தாம்பரச் சிவப்புதான்! ஆனாலும் அந்தச் சிறிய சிவப்பு நூல்—அவளது எளிய விசுவாசம்—அவளை இரட்சித்தது! தாவீது ராஜாவின் பூட்டனாகிய போவாசைப் பெற்றெடுக்கும் பாக்கியத்தை அவள் பெற்றாள். எபிரெயர் 11ஆம் அத்தியாயத்தில் விசுவாச வீரர் பட்டியலில் இடமும் பெற்றாள். அவளைவிட நல்ல மக்கள் பலருக்கும் கிடைக்காத சிலாக்கியம்! எளிய விசுவாசத்தின் மேன்மைதான் என்னே! சிவப்பு நூல்—செஞ்சிலுவை—ஆம், கல்வாரிச் சிலுவையின் அன்பிலே அன்றே அவள் இணைக்கப்பட்டாள் அன்றோ?

## ஆ) சமாரியப் பெண்

யோவான் 4:39,41,42, "நான் செய்த எல்லாவற்றையும் எனக்குச் சொன்னார் என்று சாட்சி சொன்ன அந்தப் பெண்ணின் வார்த்தையினால் அந்த ஊரிலுள்ள சமாரியரில் அநேகர் அவர்மேல் விசுவாசமுள்ளவர்களானார்கள்... அப்பொழுது அவருடைய உபதேசத்தினால் இன்னும் அநேகம் பேர் விசுவாசித்து, அந்தப் பெண்ணைப் பார்த்து: உன் சொல்லினால் அல்ல, அவருடைய உபதேசத்தை நாங்களே நேரில் கேட்டு, அவர் மெய்யாய்க் கிறிஸ்துவாகிய உலக இரட்சகர் என்று அறிந்து விசுவாசிக்கிறோம் என்றார்கள்."

விபச்சாரத்தில் வாழ்ந்தவள்! ஆனால் இயேசுதான் மேசியா என்பதைக் கண்டுகொண்டாள். அவளால் உள்ளத்தில் அதை அடைத்து வைத்திருக்க முடியவில்லை. ஓடினாள், ஊரிலுள்ள அத்தனை மக்களுக்கும் நற்செய்தியைப் பறைசாற்றும் வானொலியாக மாறினாள்.



ஆனால் அந்த ஊராரோ, "அவள் மூலமாக" விசுவாசத்தைப் பெற்றதைக்கூட சொல்ல மறுக்கின்றனர் (வச 42). தங்கள் கண்களுக்குமுன் விசுவாசியாக மாறிய அவளை அங்கீகரிக்கவும் அவர்களுக்கு மனமில்லை. காரணம்? சமுதாயத்தில் அவளது சாட்சியும், கதையும் அவ்வளவு கேவலமாயிருந்தன. ஆனாலும் அவளது எளிய விசுவாசம் அவளை இரட்சித்தது.

பிரியமானவர்களே, உங்கள் பாவத்தின் அகோரம் நீங்கள் ஆக்கினைத்தீர்ப்புக்குட்பட்டவர்கள் என்ற குற்றவுணர்வைக் கொண்டுவருகின்றதோ? சிலுவையை நோக்கிப் பாருங்கள். உங்கள் விசுவாசமே உங்களை இரட்சிக்கும்!

## இ) பாவியான பெண்

லூக்கா 7:37,38, "அப்பொழுது அந்த ஊரிலிருந்த பாவியாகிய ஒரு பெண் அவர் பரிசேயன் வீட்டிலே பந்தியிருக்கிறதை அறிந்து, ஒரு பரணியில் பரிமள தைலம் கொண்டுவந்து, அவருடைய பாதங்களின் அருகே பின்னாக நின்று அழுதுகொண்டு, அவருடைய பாதங்களைக் கண்ணீரினால் நனைத்து, தன் தலைமயிரினால் துடைத்து, அவருடைய பாதங்களை முத்தம்செய்து, பரிமள தைலத்தைப் பூசினாள்." அவளது பெயரே 'ஊரிலிருந்த பாவி!' அவளது பாவத்தை யூகிக்க முடிகிறதல்லவா? விபச்சாரம். ஆனால், தன் கண்ணீரை ஆண்டவர் பாதத்தில் ஊற்றினாள்; தன் தலை மயிரினால் துடைத்தாள்; அவருடைய பாதங்களை முத்தம்செய்தாள்; விலையுயர்ந்த பரிமள தைலத்தைப் பூசினாள். இயேசு அவளைப் பார்த்து, "உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது" என்றார்.

நண்பரே, மார்க்கம் உங்களை அங்கீகரிக்காமலிருக்கலாம்; உலகம் உங்களை ஏற்றுக்கொள்ளாமலிருக்

கலாம்; இயேசுவுடன் விருந்துண்ணும் பரிசுத்தவான்கள் கூட உங்களைப் புரிந்துகொள்ளாமலிருக்கலாம். கவலை வேண்டாம். ஆண்டவராகிய இயேசுவின் பாதத்தில் உங்கள் கண்ணீரையும், உங்கள் இதயமாகிய பாட்டி லையும் உடைத்து அதிலுள்ள நறுமண தைலத்தையும் ஊற்றிவிடும்போது, அவர் உங்களை ஏற்றுக்கொள்வார். நாம் ஆசீர்வதிக்கப்படும்படி அவர் சாபமானாரன்றோ? நாம் விடுதலையடையும்படி அவர் தண்டனையடைந்தா ரன்றோ? ஜீவத் தண்ணீரை நாம் பருகும்படி அன்று இரத்த வியர்வை சிந்தினவராய்க் கசப்பான பாத்திரத்தில் குடித் தாரன்றோ? விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்!

இந்த மூன்று எடுத்துக்காட்டுகளைக் கவனித்தபின், இயேசு அந்நாள் மதத் தலைவர்களையும், சமுதாயத்தில் செல்வாக்கு நிறைந்தவர்களையும் பார்த்து ஏன் கீழ்க் கண்ட வார்த்தைகளைச் சொன்னார் என்று நன்கு விளங் கும். ''வரிக்காரரும் வேசிகளும் உங்களுக்கு முன்னே இறையரசில் நுழைகிறார்கள் என்று நிசமாகவே உங்க ளுக்குச் சொல்லுகிறேன். ஏனென்றால், யோவான் நீதி மார்க்கமாய் உங்களிடத்தில் வந்திருந்தும், நீங்கள் அவனை விசுவாசிக்கவில்லை; வரிக்காரரும் வேசி களுமோ அவனை விசுவாசித்தார்கள்; அதை நீங்கள் கண்டும், அவனை விசுவாசிக்கும்படி பின்னர்கூட மனம் வருந்தவில்லை'' (மத் 21:31,32).

இயேசு சாதா மக்களில் கண்டு பாராட்டின ஒரே காரியம் விசுவாசம்தான். மதத் தலைவர்கள் நியாயப் பிரமாணத்தைப் பிடித்துக்கொண்டார்கள்; தங்களால் செய்ய முடியாததைச் செய்ய நினைத்தார்கள்; பரிசுத்த தேவனுக்கு முன்பாக அழுக்கான கந்தையாயிருக்கிற தங்கள் நீதியைக் குறித்துப் பெருமைபாராட்டினார்கள். ஆனால் வரிக்காரரும், வேசிகளுமோ விசுவாசத்தைத் தழுவிக்கொண்டார்கள்; தங்களால் முடிந்த ஒன்றே ஒன்றைச் செய்தார்கள்: 'கர்த்தாவே, கிருபையாயிரும்' என்று மட்டும் சொன்னார்கள்.



''திருவாளர் மார்க்கம்'' தனது மார்க்கமாகிய பொம் மையை அலங்கரித்து கிருபை அல்லது ஆசீர்வாதம் என்ற கிரீடத்தை அதற்குச் சூட்ட விரும்புகிறார். ஆனால் அது தேவனுடைய தீர்மானமன்று. எனவே திருவாளர் மார்க் கம்—அதுதான் இஸ்ரவேலர்—தோல்வியடைந்தார். சிலுவையைக் குறித்த போதனை ''திருவாளர் ஞானம்'' அவர்களுக்கு—அதாவது கிரேக்கருக்கு—பயித்திய மாய்த் தெரிந்தது. எனவே இருவரும்—யூதரும் கிரேக் கரும்—சுவிசேஷத்தின் எளிமைக்கு முன்பாக இடறி னார்கள். ''ஏனென்றால், அவர்கள் விசுவாசத்தினாலே அதைத் தேடாமல், நியாயப்பிரமாணத்தின் செய்கை களினாலே தேடினபடியால் அதை அடையவில்லை; இடறுதற்கான கல்லில் இடறினார்கள். இதோ, இடறுதற் கான கல்லையும், தவறுதற்கான கன்மலையையும், சீயோனில் வைக்கிறேன்; அவரிடத்தில் விசுவாசமாய் இருப்பவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லை என்று எழுதியிருக்கிறபடியாயிற்று'' (ரோ 9:32,33). கர்த்தராகிய இயேசுவின்மீது எளிய விசுவாசம் வைக்கிறவர்கள் ஒருநாளும் வெட்கப்பட்டுப்போவதில்லை.

மனிதன் ஏதோ ஒன்றைச் ''செய்து'' அதற்கான கூலி யாக இரட்சிப்பைப் பெற்று, அதன் மூலம் பெருமை யடித்துக்கொள்ள நினைக்கிறான். தேவனோ எவரோடும், எவ்வேளையிலும், எக்காரணத்தையிட்டும் தமது மகி மையைப் பகிர்ந்துகொள்ளுகிறவர் அல்ல. ''என் மகி மையை நான் வேறொருவருக்கும் கொடேன்'' என்றார் அவர் (ஏசா 48:11). தேவன் இரட்சிப்பை நூற்றுக்கு நூறு இலவசமாகவே கொடுத்துவிடுகிறார். துதி, கனம், மகிமை அனைத்தும் அவருக்கே! அவரளிக்கும் இரட் சிப்பை விசுவாசத்தோடு பெற்றுக்கொள்வதே நமது கடன். எனவேதான் எபேசியர் 2:8,9 இவ்விதம் சொல் கிறது: ''கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல,

இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமைபாராட்டாத படிக்கு இது நற்செயல்களினால் உண்டானதல்ல.''

கிரியையில்லாமல் தேவனிடத்தில் விசுவாசம் வைக்கிறவனுடைய ஆசீர்வாதத்தை ரோமர் 4:5−8இல் வாசிக்கிறோம். ''ஒருவன் *கிரியை* செய்யாமல் பாவியை நீதிமானாக்குகிறவரிடத்தில் *விசுவாசம்* வைக்கிறவனாயிருந்தால், அவனுடைய விசுவாசமே அவனுக்கு நீதியாக எண்ணப்படும். அந்தப்படி, கிரியைகளில்லாமல் தேவனாலே நீதிமானென்றெண்ணப்படுகிற மனிதனுடைய பாக்கியத்தைக் காண்பிக்கும்படி: எவர்களுடைய அக்கிரமங்கள் மன்னிக்கப்பட்டனவோ, எவர்களுடைய பாவங்கள் மூடப்பட்டனவோ, அவர்கள் பாக்கியவான்கள். எவனுடைய பாவத்தைக் கர்த்தர் எண்ணாதிருக்கிறாரோ, அவன் பாக்கியவான் என்று தாவீது சொல்லியிருக்கிறான்.'' நம் வாழ்நாள் முழுவதும் கருத்திற்கொண்டு தியானிக்கவேண்டிய உண்மை இது.

கடவுள் எதிர்பார்க்கும் எளிமையைக் குறித்து இடறலடைந்த ஒரு மனிதனைப் பழைய ஏற்பாட்டில் பார்க்கிறோம். அவன்தான் சீரிய இராஜாவின் படைத்தலைவன் நாகமான். அவனது சரித்திரம் 2 இராஜாக்கள் 5:1,9−14இல் கூறப்பட்டுள்ளது. தொழுநோயாளியான அவன் தீர்க்கதரிசி எலிசாவிடம் சென்றால் சுகம் கிடைக்கும் என்று கேள்விப்பட்டு அவனிடம் விரைந்து சென்றான். யோர்தானில் ஏழுதரம் முழுகினால் சுத்தமாவான் என்று எலிசா சொல்லியனுப்பினான். எத்தனை எளிமையான காரியம்! நாகமானோ, ''தீர்க்கதரிசி என்னைத் தொட்டு ஜெபம்பண்ணிக் குணமாக்குவார் என்றல்லவோ நினைத்திருந்தேன்'' என்று கடுங்கோபத்தோடு திரும்பிப் போய்விட்டான். ''தகப்பனே, தீர்க்கதரிசி ஒரு பெரிய காரியத்தைச் சொல்லியிருந்தால் செய்திருப்பீரல்லவா? இந்த எளிய காரியத்தைச் செய்யவேண்டியது எத்தனை



அதிகம்'' என்ற அவனது ஊழியக்காரரின் சொற்கள் நாகமானின் மதியீனத்தை அகற்றின. ''அவன் இறங்கினான்.'' தேவன் தன்னுடைய விருப்பத்திற்கு இணங்கி வரவேண்டும் என்று அவன் நினைத்தபோது அவர் அவனுக்கு உதவி செய்ய முடியவில்லை. அவன் தன் பெருமையை விட்டு இறங்கி, தீர்க்கதரிசி சொன்னது போல் முழுகினபோதோ அவனது சதையெல்லாம் ஒரு சிறு பிள்ளையின் சதையைப்போல மாறிற்று.

இம்மானுவேலின் இரத்த ஊற்றிலே ஒரு முறை மூழ்கியெழுந்தால் போதும், பாவக்குஷ்டம் நீங்கிவிடும். நம்புவதற்குக் கடினமாக உள்ளதோ? மாளிகையை விட்டு மாட்டுத் தொழுவத்திற்கு இறங்கி வாருங்கள்!

***பகுதி 1 அத்தியாயம் 4***

# கலப்பட சுவிசேஷம்

**சிலுவையோடு** எதையும் கூட்டாதே; அதிலிருந்து எதையும் கழிக்காதே!"—இதுவே சுத்த சுவிசேஷம். எனவேதான் பவுல், "நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயன்றி வேறொன்றையும் குறித்து மேன்மை பாராட்டாதிருப் பேனாக" என்றான் (கலா 6:14).

இந்நாட்களில் சுவிசேஷத்தில் கலப்படம் ஏராளம். சில கலப்படங்களை இங்கு கவனிப்போம்.

### அ) ஞானஸ்நானம், முதலியன

ஞானஸ்நானம் இரட்சிப்புக்கு ஒரு நிபந்தனை என்பது கலப்பட சுவிசேஷமாகும். நாம் விசுவாசித்தபின்னர் ஞானஸ்நானத்தின் மூலம் தேவனோடு நல்மனசாட்சியின் உடன்படிக்கை செய்யவேண்டியது தெளிவான உபதேசம் (1 பேது 3:21). ஆனால் ஞானஸ்நானம் இரட்சிப்புக்குமுன் அல்ல, அதற்குப்பின் வருவது. எனவேதான் வேதத்திலும், இன்றும் சில சமயங்களில் தண்ணீர் ஞானஸ்நானத்திற்கு முன்னதாகவே தேவன் பரிசுத்த ஆவியின் ஞானஸ்



நானத்தை மக்களுக்குக் கொடுத்துவிடுகிறார். இரட் சிப்புக்குமுன் திருமுழுக்கு வருவதாயிருந்தால் தேவன் இரட்சிக்கப்படாதவர்களையும் அபிஷேகிக்கிறார் என் றல்லவா பொருள்பட்டுவிடும்?!

தசமபாகம் கொடுத்தல், உபவாசமிருத்தல், ஜெபித் தல், ஏழை எளியவர்க்கு உதவி செய்தல் இவையெல்லாம் அவசியம். வேதபாரகர், பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் நமது நீதி அதிகமாயிருக்கவேண்டுமே! ஆனால் இரட்சிப்புடன் இவை ஒன்றையும் சேர்க்காது. எனது ஜெபம் கேட்கப்படுவதால் நான் இரட்சிக்கப்பட்டி ருக்கிறேன் என்றும் எவரும் சொல்லமுடியாது. ஏனெனில் இயேசு பிசாசுகளின் ஜெபத்தைக்கூட கேட்டுப் பன்றி களுக்குள் போக அவைகளைக் கட்டளையிட்டாரே (மத் 8:31). ஏமாந்துபோகவேண்டாம்; இரட்சிப்பு சிலுவையில் மட்டுமே உண்டு!

*எந்தக் கிரியை செய்துமே, உந்தன் நீதி கிட்டாதே;*
*கண்ணீர் நித்தம் சொரிந்தும், கஷ்ட தவம் புரிந்தும்,*
*பாவம் நீங்க மாட்டாதே, நீரே மீட்பர் இயேசுவே.*

இந்தச் சுத்த சுவிசேஷத்தைக் கடந்த 40 ஆண்டு களுக்கு மேலாக எவ்விதக் கலப்புமின்றி அறிவித்து வருகின்றனர் பண்டிதர் பில்லி கிரகாமும் அவரது குழு வினரும். உலகமெங்கும் அவர்கள் நடத்தும் ஒவ்வொரு கூட்டத்தின் இறுதியிலும் பாடப்படும் பாடல் இதோ—

*நான் பாவிதான்—ஆனாலும் நீர்*
*மாசற்ற ரத்தம் சிந்தினீர்;*
*'வா' என்று என்னை அழைத்தீர்,*
*என் மீட்பரே வந்தேன்!*

விளைவு? இந்த உலகத்திலுள்ள நூற்றுக்கணக்கான ஊழியங்கள் சேர்ந்து ஆதாயப்படுத்தின ஆத்துமாக்

களைவிட அதிக எண்ணிக்கையுள்ள ஆத்துமாக்களை பில்லி கிரகாமின் ஊழியத்தின் மூலமாக ஆண்டவர் தம் மந்தையிலே கொண்டுவந்து சேர்த்திருக்கிறார். இன்று உலகம் முழுவதும் மிகுந்த வல்லமையுடன் தேவனுடைய நற்செய்தியைப் பரப்பிவரும் Back to the Bible நிறுவனத்தின் தலைவர் Warren W. Wiersbe என்பவரும் 40 ஆண்டுகளுக்கு முன் வாலிபராயிருந்த சுவிசேஷகர் பில்லி கிரகாமின் செய்தியின் மூலம் தொடப்பட்டவர் ஆவார்! எளிய சுத்த சுவிசேஷத்தின் கனி எப்படி என்று பாருங்கள்!

லூக்கா 18ஆம் அத்தியாயத்தில் ஒரு பரிசேயனைக் காண்கிறோம். தன்னைத்தானே நம்பி, மற்றவர்களை அற்பமாய் எண்ணினவன். “நான் அவனைப் போலல்ல; அவனைவிட மிகவும் நல்லவன்” என்றான் தேவனிடம். ஆயக்காரனோ தூரத்திலே நின்று, “தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்" என்றான். முகவுரையும், முடிவுரையும் இல்லாத ஜெபம். ஆனால் இவனே நீதிமானாக்கப்பட்டவனாய்த் தன் வீட்டுக்குத் திரும்பினான் என்று திருமறை கூறுகிறது. இன்னொரு பரிசேயனைப்பற்றிப் பிலிப்பியர் 3:2–7இல் வாசிக்கிறோம். மார்க்க சம்பந்தமாய்த் தனக்கு லாபமாயிருந்தவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினான் அவன். அவன்தான் அப்போஸ்தலன் பவுல்.

### ஆ) பாவ அறிக்கை

உங்களுடைய “எல்லாப் பாவங்களையும் அறிக்கை செய்து விட்டுவிட்டீர்களா?” என்று சில பிரசங்கிகள் இரட்சிக்கப்படாதவர்களைக் கேட்பார்கள். இவ்வுலகிலே தன்னுடைய பாவங்கள் ஒன்றுவிடாமல் எல்லாவற்றையும் அறிக்கை செய்தவர் எவருமே கிடையாது. அது நிபந்தனையானால் இதுவரை ஒருவருமே இரட்சிக்கப்பட்டிருக்க முடியாது. ஏதோ நினைவிற்கு வந்த சில பாவங்களை, பரிசுத்த ஆவியானவர் உணர்த்தியபடி, நாம் அறிக்கை



யிட்டிருப்போம். ஒருமுறை ஒரு சகோதரனிடம் அவரோடு கூட நின்றுகொண்டிருந்த நண்பர் “இரட்சிக்கப்பட்டிருக்கிறாரா” என்று கேட்டேன். அவர் இப்பொழுதுதான் கல்வாரிப் “பாதையில்” இருக்கிறார் என்றார்! அதாவது, இப்பொழுது அவர் பாவங்களை ஒவ்வொன்றாய் அறிக்கை செய்துகொண்டிருக்கிறாராம்! எந்த வேதத்தில் இப்படி இருக்கிறதோ தெரியவில்லை. இது மாறுபாடான சுவிசேஷம். கலப்படம். “உடனடி” இரட்சிப்புக்கு வேதத்தில் எடுத்துக்காட்டுகள் ஏராளம்.

அதற்கு முந்தின வினாடிவரை பாவியாயிருந்தவன் அடுத்த வினாடி பரிசுத்தவானாய் மாற்றப்படுகிறான். அதுதான் சிலுவையின் வல்லமை, கிறிஸ்துவின் வல்லமை, தேவனுடைய ஈவு. பெருமைபாராட்ட ஒன்றுமேயில்லை.

r *ஆயக்காரன் (லூக் 18:13,14)*

அவன் வரி வசூலிப்பவன், பலரை ஏமாற்றியவன், எல்லாராலும் வெறுக்கப்பட்டவன். தேவாலயத்துக்குச் சென்றபோதோ, தனது ஒன்றுமில்லாமையை உணர்ந்தான்; தேவனது பரிசுத்தத்திற்கு முன்னால் தான் நிற்கத் தகுதியற்றவன் என்பதையறிந்தான்; அவரை நெருங்கத் துணிவில்லை. வானத்துக்கு நேராகத் தன் கண்களை ஏறெடுக்கவும் தைரியம் வரவில்லை. தன் மார்பிலே அடித்துக்கொண்டு, “தேவனே, பாவியாகிய என் மேல் கிருபையாயிரும்” என்று கதறினான். “உடனே” நீதிமானாக்கப்பட்டவனாய்த் தன் வீட்டுக்குத் திரும்பிப்போனான். வந்தான், கதறினான், பெற்றான், திரும்பினான்! உடனடி இரட்சிப்பு!

r *சகேயு (லூக் 19:5–9)*

இவன் வரிக்காரருக்குத் தலைவன்; செல்வந்தன்; அனைவராலும் பாவி என்று முடிவுகட்டப்பட்டவன். ஆனால் அவனது இதயத்தின் ஆழத்தில் ஓர் ஆசை,

"இயேசுவை எப்படியாவது பார்க்கவேண்டும்!" குள்ள னாயிற்றே, திரள் கூட்டத்தின் நடுவில் நடந்துவரும் இயேசுவை எப்படிப் பார்க்கமுடியும்? வெட்கத்தை மறந்தான். இரட்சகரைக் காணும் வாஞ்சையினால் ஏறி னான் காட்டத்தி மரத்தில். உள்ளத்தையறிந்த உன்னதர் நின்றார் அங்கேயே. "சகேயுவே, நீ சீக்கிரமாய் இறங்கி வா! இன்றைக்கு நான் உன் வீட்டிலே தங்கவேண்டும்." விரைவாய் இறங்கி, சந்தோஷத்தோடே அவரை அழைத் துக்கொண்டுபோனான். அதைக் கண்ட யாவரும், "இவர் பாவியான மனிதனிடத்தில் தங்கும்படி போய் விட்டாரே" என்று முறு முறுத்தார்கள். சகேயு சொன் னது: "ஆண்டவரே, என் சொத்தில் பாதியை ஏழை களுக்குக் கொடுக்கிறேன், நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால், நான்கு மடங்காய்த் திரும்பச் செலுத்துகிறேன்." மனந் திரும்பிய இதயத்தின் ஆழத்திலிருந்து வந்த உரை கேட்டு அன்பர் இயேசு நவின்றார்: "*இன்றைக்கு* இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது!" அதாவது, ஒவ்வொரு பாவமாக அறிக்கையிட்டு தவறிழைத்த ஒவ்வொருவரி டமும் சென்று காரியங்களைச் சரிசெய்யுமுன்! பரிசுத்த வான்களெல்லாரும் வீட்டுக்கு வெளியே நின்று முறு முறுத்துக்கொண்டிருந்தார்கள். வீட்டுக்குள்ளிருந்த பாவியான மனிதனோ இரட்சிப்பின் மகிழ்ச்சியில் திளைத் துக்கொண்டிருந்தான். உடனடி இரட்சிப்பு!

r *சிலுவைக் கள்ளன் (லூக் 23:29)*

சிலுவையில் தொங்கிக்கொண்டிருந்தான் அக் கள்ளன். அவனால் செய்யமுடிந்ததெல்லாம் தலையைத் திருப்புவது மட்டுமே. முள்முடியணிந்தவராய்த் தன்ன ருகில் சிலுவையிலறையப்பட்டு இரத்த வெள்ளத்தில் தொங்கும் குற்றமற்ற இயேசு மெய்யான தேவகுமாரன் என்பதை உணர்ந்தான். அவனது உள்ளத்தில் விசுவாசம்



துளிர்விட்டது. மெதுவாக இயேசுவின் பக்கமாகத் தலையைத் திருப்பினான். "ஆண்டவரே, நீர் உம்முடைய அரசில் வரும்போது அடியேனை நினைத்தருளும்." அருமை இரட்சகரின் பதில்: "*இன்றைக்கு* நீ என்னுடனே கூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்கு சொல்லுகிறேன்." நீதிமன்றம் அவனை நீதிமானாக்க முடியவில்லை, சிறைச்சாலை அவனைச் சீர்திருத்த முடியவில்லை, நியாயத்தீர்ப்பு அவனை நல்லவனாக மாற்ற முடியவில்லை. ஆனால் வாழ்க்கையின் இறுதி வினாடியில் உடனடி இரட்சிப்பு!

r *எத்தியோப்பிய மந்திரி (அப் 8:35-38)*

எருசலேமில் பணிந்துகொள்ளும்படியாக வந்து விட்டுத் திரும்பி தன் ஊருக்கு இரதத்தில் போய்க்கொண் டிருந்த இவன் ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்தை வாசித்துக்கொண்டிருந்தான். ஆவியானவரின் கட் டளைப்படி அவனுடன் இரதத்தில் சேர்ந்து அவனுக்கு இயேசுவைப் பிரசங்கித்தான் சுவிசேஷகன் பிலிப்பு. இயேசு கிறிஸ்துவை கடவுளுடைய குமாரனென்று மந்திரி முழு மனதோடு விசுவாசித்தான். தண்ணீருள்ள ஓரிடத்திற்கு வந்ததும் உடனே இரதத்தை நிறுத்திவிட்டுத் தண்ணீரில் இறங்கி ஞானஸ்நானமும் பெற்றுக்கொண்டு, சந்தோஷத் தோடே தன் வழியே போனான். உடனடி இரட்சிப்பு!

r *லீதியாள் (அப் 16:13-15)*

தியத்தீரா ஊராள், இரத்தாம்பரம் விற்கிறவள், தேவனை வணங்குகிறவள். ஆற்றினருகே அமர்ந்து பவுலும் சீலாவும் உபதேசித்தவைகளைக் கேட்டுக் கொண்டிருந்தாள். பவுல் சொல்லியவைகளைக் கவ னிக்கும்படி கர்த்தர் அவள் இருதயத்தைத் திறந்தரு ளினார். அவள் உள்ளம் இரட்சிப்பின் மகிழ்ச்சியினால்

பொங்கி வழிந்தது. அதே நாளில்தானே அவளும் அவள் வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்றனர். உடனடி இரட்சிப்பு!

r *சிறைச்சாலைக்காரன் (அப் 16:31−33)*

நள்ளிரவில் பவுலும் சீலாவும் தொழுமரத்தில் மாட்டப்பட்ட கால்களுடன் தேவனைத் துதித்துப் பாடிய போது சிலைச்சாலையில் நடந்த அற்புத சம்பவம் நமக்குத் தெரியும். நடுநடுங்கி அவர்களுக்கு முன்பாக விழுந்த சிலைச்சாலை அதிகாரிக்கும், அவன் வீட்டிலிருந்த யாவருக்கும் பவுலும் சீலாவும் இறைவார்த்தையைப் போதித்தார்கள். அந்த இரவில்தானே அவனும் அவனுடையவர்கள் அனைவரும் திருமுழுக்குப் பெற்றுக் கொண்டார்கள். அவன் தன் வீட்டார் அனைவரோடும் தேவனிடத்தில் விசுவாசமுள்ளவனாகி மனமகிழ்ச்சியடைந்தான். உடனடி இரட்சிப்பு!

இந்த உடனடி இரட்சிப்பு அனுபவங்களையெல்லாம் லூக்கா சுவிசேஷத்திலும் அப்போஸ்தலர் நடபடிகளிலும் காண்பது கவனிக்கவேண்டியது. இவ்விரு நூல்களின் ஆசிரியரான லூக்கா ஒரு மருத்துவர், நடைமுறை மனிதன். மனிதனுடைய மனோதத்துவத்தையும் உடல் அமைப்பையும் அறிந்தவன்!

### (இ) நகை கழற்றுதல்

ஞானஸ்நானத்திற்குமுன் நகை கழற்றவேண்டுமென்று உபதேசிப்பது இன்னொரு கலப்படமாகும். ‘‘விசுவாசித்து ஞானஸ்நானம்’’ என்றுதான் வேதம் போதிக்கிறதே தவிர, ‘‘கழற்றி ஞானஸ்நானம்’’ என்று வேதத்தில் எங்கும் கிடையாது. வசனமே குறிப்பிடாத நிபந்தனைகளை விசுவாசிகள்முன் வைக்கும் பிரசங்கிகளை ஆண்டவர் பொறுத்துக்கொண்டிருக்க முடியாது. எனவேதான் இவ்விதப் பிரசங்கிகள் தண்ணீர் ஞானஸ்நானம் கொடுப்



பதற்குமுன் தேவன் ஆவியின் ஞானஸ்நானத்தைக் கொடுத்துவிடுகிறார்! சாமி வரங்கொடுத்தாலும் பூசாரி வரங்கொடுக்க மாட்டானாம்! நான் இங்கு விசுவாசிகள் நகையணிவதை ஆதரித்தோ எதிர்த்தோ பேசவில்லை. ஆனால் இரட்சிப்புக்குத் தேவையான அல்லது திருமுழுக்கிற்கு நிபந்தனையான ஒரே காரியமாகிய விசுவாசத்தோடு எதைக் கூட்டுவதையும் நூற்றுக்கு நூறு எதிர்க்கிறேன்.

*எந்தன் மேன்மை சிலுவையல்லாமல்*
*ஏதுமில்லை இந்தப் பாரினிலே;*
*உந்தனுடனே என்னை அறைந்தேன்,*
*உந்தன் குருசில் பங்கடைந்தேன்.*

*பகுதி 1 அத்தியாயம் 5*

# மனிதனின் பொறுப்பு

**இரட்சிப்புக்குத்** தேவையானது விசுவாசம் ஒன்று தான் என்றால் கீழ்க்கண்ட வசனங்களுக்கு விளக்கம் என்ன ? "விசுவாசமும் கிரியைகளில்லா திருந்தால் தன்னில்தானே செத்ததாயிருக்கும். வீணான மனிதனே, கிரியைகளில்லாத விசுவாசம் செத்ததென்று நீ அறிய வேண்டுமோ ?... கிரியைகளில்லாத விசுவாசம் செத்ததாயிருக்கிறது" (யாக் 2:17,20,26).

இங்கே 'கிரியை' என்று வேதம் எதைக் குறிப்பிடு கிறது ? தேவனுடைய கிருபை அல்லது இரக்கத்தைப் "பெறுவதற்காக" நற்செயல்கள் அல்லது மார்க்கச் சடங்கு கள் அல்ல; ஆனால் விசுவாசத்தினாலே தேவகிருபை யைப் "பெற்றுக்கொண்ட" நாம் தேவப்பிள்ளைகள் என்று சாட்சியாய் நிரூபணமாய்ச் செய்யும் செயல்களாகும். கிரியையில்லாமல் விசுவாசம் இரட்சிக்கும் என்கிறான் பவுல்; கிரியையில்லாத விசுவாசம் செத்தது என்கிறான் யாக்கோபு. மேலெழுந்தவாறு பார்த்தால் இரண்டும் முரண்பட்டதாய்த் தோன்றும். ஆனால் முரண்பாடு இல்லை என்பதை யாக்கோபு நிருபத்திலேயே கொடுக் கப்பட்டுள்ள கீழ்க்காணும் இரு எடுத்துக்காட்டுகள் தெளிவாக்குகின்றன.



**அ) ஆபிரகாம்**

"நம்முடைய பிதாவாகிய ஆபிரகாம் தன் குமாரன் ஈசாக்கைப் பலிபீடத்தின்மேல் செலுத்தினபோது, கிரியை களினாலே அல்லவோ நீதிமானாக்கப்பட்டான் ?" (யாக் 2:21).

ஆதி 15:5,6ஆம் வசனங்களில் இச்சரித்திரத்தைப் பார்ப்போம். "கர்த்தர் அவனை வெளியே அழைத்து: நீ வானத்தை அண்ணாந்து பார், நட்சத்திரங்களை எண்ண உன்னாலே கூடுமானால், அவைகளை எண்ணு என்று சொல்லி; பின்பு அவனை நோக்கி: உன் சந்ததி இவ்வள வாய் இருக்கும் என்றார். அவன் கர்த்தரை விசுவாசித் தான், அதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார்."

ஆபிரகாம் விருத்தசேதனம் பண்ணப்பட்டதை ஆதி யாகமம் 17ஆம் அத்தியாயத்திலும், ஈசாக்கு பிறந்ததை 21ஆம் அத்தியாயத்திலும், ஈசாக்கைப் பலியிடச் சென்றதை 22ஆம் அத்தியாயத்திலும் வாசிக்கிறோம். இவை எல்லாவற்றிற்கும் முன்னரே 15ஆம் அத்தியா யத்திலேயே அவன் நீதிமானாக எண்ணப்பட்டுவிட்டான். காரணம் ? செத்ததுபோன்ற தனது உடலைக்கூட தேவன் உயிர்ப்பித்து வானத்து நட்சத்திரங்களைப் போன்று எண்ணமுடியாத சந்ததியைத் தன் மூலம் உருவாக்குவார் என்பதை நம்பினான். அவன் கர்த்தரை விசுவாசித்தான்; அதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார். அதன் பொருள் என்ன ? கிரியை இல்லாமல் முதலாவது அவன் விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்டான். இதுவே பவுல் குறிப்பிடும் கிரியை. ஆனால் நீதிமானாக்கப்பட்ட "பின்பு," அவன் விருத்தசேதனம்பண்ணப்படுதல், ஈசாக்கைப் பலியிடச் செல்லுதல் முதலிய செயல்களைத் தொடர்ந்து காட்டினான். இதுவே யாக்கோபு கூறும் கிரியையாகும்.

## ஆ) ராகாப்

"அந்தப்படி ராகாப் என்னும் வேசியும் தூதர்களை ஏற்றுக்கொண்டு வேறுவழியாய் அனுப்பிவிட்டபோது, கிரியைகளினாலே அல்லவோ நீதியுள்ளவளாக்கப் பட்டாள் ?" (யாக் 2:25).

யோசுவா 2ஆம் அத்தியாயத்தில் இஸ்ரவேலரில் இருவர் எரிகோ பட்டணத்தை வேவு பார்க்க வந்து, ராகாப் என்னும் வேசியின் வீட்டில் தங்கினதை வாசிக்கிறோம். அவள் அவர்களை வீட்டின்மேல் ஏறப்பண்ணி, வீட்டின் மேல் பரப்பப்பட்ட சணல் தட்டைகளுக்குள்ளே மறைத்து வைத்திருந்தாள். அவள் அந்த வேவுகாரரைச் சந்தித்தபின் தான் யேகோவா தேவனை நம்பினாளா ? இல்லை, அதற்கு முன்பே அவர் மீது விசுவாசம் வைத்திருந்தாள். இதோ பாருங்கள்—"அந்த மனிதர் படுத்துக்கொள்ளுமுன்னே" அவள் வீட்டின் மேல் அவர்களிடத்திற்கு ஏறிப்போய், கர்த்தர் உங்களுக்கு தேசத்தை ஒப்புக்கொடுத்தாரென் றும்... அறிவேன்... உங்கள் தேவனாகிய கர்த்தரே உயர வானத்திலும் கீழே பூமியிலும் தேவனானவர் என்றாள்" (யோசு 2:8,9,11). தேவன்மீது அவளுக்கிருந்த அசைக்க முடியாத நம்பிக்கைதான் என்னே! ஆம், அவளுக்கு ஏற்கனவே உறுதியான விசுவாசம் இருந்தது. அந்த விசு வாசத்தை வெளிக்காட்டும் செயலாகத்தான் வேவுகா ரரை ஏற்றுக்கொண்டாள், அவர்களை மறைத்துவைத் தாள், ஜன்னல் வழியே இறக்கி அனுப்பிவிட்டாள்.

அப்போஸ்தலன் யாக்கோபு எந்தச் சந்தர்ப்பத்திலே கிரியையோடுள்ள விசுவாசத்தைக் குறித்துக் கூறுகிறா ரென்பதை யாக்கோபு 2:13−17ஐ வாசிக்கும்போது அறி கிறோம். ஒரு சகோதரனாவது சகோதரியாவது அனுதின ஆகாரமில்லாமலும், ஆடையில்லாமலும் இருக்கும்போது அவர்களுக்கு வேண்டியவைகளைக் கொடுக்காத



ஒருவன் தனக்கு விசுவாசமுண்டென்று சொல்லியும் பயனில்லை. கிரியையுள்ள விசுவாசமென்றால் விசு வாசமும், அதைத் தொடர்ந்து நமது உடன் சகோதர சகோதரிகளிடமும், அயலகத்தாரிடமும் முழுமையாகக் காட்ட வேண்டிய பரிவு, இரக்கம், அன்பு, கருணையான செயல்களும் சேர்ந்ததாகும். அதாவது, விசுவாசத்தினால் இரட்சிக்கப்பட்ட நாம், விசுவாசத்தினால் நீதிமான் களாக்கப்பட்ட நாம், விசுவாசத்தினால் நீதிமான்களென்று எண்ணப்பட்ட நாம், நமது அயலகத்தாரைக் கவனித்து வாழவேண்டும். இந்தப் பூமியிலே நாம் சரியான உறவுள்ள மக்களாக இருக்கவேண்டும். கல்வாரிச் சிலுவையண் டையிலே நாம் இரட்சகரைச் சந்தித்தபோது கிருபை யினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டோம். அந்த விசுவாசத்தைத் தேவன் ஏற்றுக்கொள்கிறார். இப்பொழுதோ அந்த விசுவாசத்தைச் செயல்மூலம் நமது நடைமுறை வாழ்க்கையிலே வெளிப்படுத்தவேண்டும். கிரியையுள்ள விசுவாசம் என்பது இதுவே.

பவுலின் நிருபங்களில் விசுவாசமானது ஆவியின் கனியாகிய வெளிப்பாடுகளுடன் இணைந்து வருவதை அடிக்கடி பார்க்கலாம். எடுத்துக்காட்டுகள்:

| | | |
|---|---|---|
| கலா 5:6 | — | விசுவாசமும் அன்பும் |
| எபே 1:15 | — | " |
| கொலோ 1:4 | — | " |
| 1 தெச 1:3 | — | " |
| 2 தெச 1:3 | — | " |
| 1 தீமோ 1:14 | — | " |
| பிலே 5 | — | " |
| 1 தீமோ 1:19 | — | விசுவாசமும் நல்மனசாட்சியும் |
| தீத்து 3:8 | — | விசுவாசமும் சுத்தமனசாட்சியும் |

இவ்விதம் விசுவாசம் நற்செயல்களில் வெளிப்படு கிறது. இச்சத்தியத்தை இன்னும் தெளிவாக்க கீழ்க்கண்ட இரு வசனங்களைப் பாருங்கள்.

“கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட் சிக்கப்பட்டீர்கள்... நற்செயல்களைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் படைக்கப்பட்டு, கடவுளின் வேலைப்பாடாயிருக்கிறோம்” (எபே 2:8,10).

“இந்த வார்த்தை உண்மையுள்ளது; தேவனிடத்தில் விசுவாசமானவர்கள் நற்கிரியைகளைச் செய்யக் கவன மாயிருக்கும்படி, நீ இவைகளைக் குறித்துத் திட்டமாய்ப் போதிக்கவேண்டுமென்று விரும்புகிறேன். இவைகளே நன்மையும் மனிதருக்கும் பயனமானவைகள்” (தீத்து 3:8).

இப்படி, விசுவாசத்தினாலே தேவனோடு ஒப்புரவாகி இரட்சிக்கப்படுகிறோம். விசுவாசத்தைச் செயலில் காட்டி மனிதரோடு ஒப்புரவாகி அன்பில் நடந்துகொள்ள வேண்டும்.

இறுதியாக, இயேசுவின் இரு முக்கிய சீடர்களைப் பார்ப்போம். ஒருவன் யூதாஸ். நம்பப்பட்டு பணப்பையைக் கையில் வைத்திருந்தான்! மற்றவன் பேதுரு. தலைவன்! இருவரும் பின்வாங்கினர்; இருவரும் தோல்வியடைந் தனர்.

“கிறிஸ்துவை எனக்குத் தெரியும், நான் அவரைக் காட்டிக்கொடுக்கிறேன்” என்றான் யூதாசு! கேவலம், முப்பது வெளிக்காசுக்காக! பின்பு உணர்ந்தான், “குற்ற மில்லாத இரத்தத்தைக் காட்டிக்கொடுத்ததினால் பாவம்செய்தேன்.” அருள்நாதர் இயேசுவிடம் வந்தி ருந்தால், கெத்செமனே தோட்டத்தில் “சிநேகிதனே” என்று அன்போடு அழைத்த அந்த இயேசு அவனை மார்போடு அணைத்திருப்பார். ஆனால் அவனுக்கோ “விசுவாசம்”



இல்லை ஆலயத்துக்கு ஓடினான், மார்க்கத்துக்கு ஓடினான். காசைக் காணிக்கையாய் எறிந்தான். பிரதான ஆசாரியர்கூட அவனது காணிக்கையை அங்கீகரிக்க வில்லை. ஓடினான், தூக்குபோட்டுக்கொண்டு செத்தான். இயேசுவிடன் திரும்புவதற்கான விசுவாசம் அவனுக்கு இல்லை.

பேதுருவின் பாவம் யூதாசின் பாவத்தைவிடப் பெரியது. கிறிஸ்துவை மூன்று முறை மறுதலித்தான்; அவரைச் சபிக்கவும் செய்தான். ஆனால் அன்பாய் நோக்கிய இயேசுவின் பரிவுள்ள கண்கள் அவனது கண் களைச் சந்தித்தன. மனங்கசந்து அழுதான். இயேசு விடம் திரும்பி வந்தான். யூதாசின் பாவத்தைவிடக் கொடிய பாவம்தான். ஆனால் கிறிஸ்துவைச் சபித்த பிறகும்கூட அவரிடம் திரும்பி வருவதற்கான “விசு வாசம்” இவனுக்கு இருந்தது.

அருமையானவர்களே, கிறிஸ்துவுடன்கூட நடந்த நீங்கள் பின்வாங்கிப் போய்விட்டீர்களோ? பாவத்தின் எல்லைக்கே நீங்கள் சென்றிருக்கலாம். ஆனால் உங்கள் விசுவாசம் ஒழிந்து போகாதபடி ஆண்டவர் உங்களுக் காக ஜெபித்திருக்கிறார். விசுவாசத்துடன் திரும்பி வாருங்கள்; பிறருக்கு ஆசீர்வாதமாவீர்கள்—பேதுரு வைப்போல்! (லூக் 22:32).

விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்!

*பகுதி 2*

# விசுவாச வாழ்வின் தொடர்ச்சி

**விசுவாசத்தினால்** நீதிமான் பிழைப்பான்! விசுவாசத்தினால் மட்டுமே நீதிமான் பிழைப்பான்! பழைய ஏற்பாட்டிலிருந்து விசுவாசத்திற்கு ஓர் எடுத்துக் காட்டு சொல்லவேண்டுமானால் அது ஆபிரகாமைத் தவிர வேறு யாராகவும் இருக்கமுடியாது.

“விருத்தசேதனமில்லாத காலத்தில் அவன் விசுவாசத் தினாலே அடைந்த நீதிக்கு முத்திரையாக விருத்தசேதன மாகிய அடையாளத்தைப் பெற்றான். விருத்தசேதன மில்லாதவர்களாய் விசுவாசிக்கிற யாவருக்கும் நீதி எண்ணப்படும்படி அவர்களுக்கு அவன் தகப்பனாயிருக் கும்படிக்கும், விருத்தசேதனத்தைப் பெற்றவர்களாய் மட்டுமல்ல, நம்முடைய தகப்பனாகிய ஆபிரகாம் விருத்தசேதனமில்லாத காலத்தில் அடைந்த விசுவாச மாகிய அடிச்சுவடுகளில் நடக்கிறவர்களாயுமிருக்கிறவர் களுக்குத் தகப்பனாயிருக்கும்படிக்கும், அந்த அடை யாளத்தைப் பெற்றான்” (ரோ 4:11,12).

ஆபிரகாம் “விசுவாசிகளின் தகப்பன்” என்று அழைக்கப்படுகிறான். ஒரு மனிதனுக்கு தேவன்



கொடுக்கக்கூடிய மிகுந்த கனமுள்ள பெயர் இதுவே. ஆபிரகாமுக்கும் விசுவாசத்துக்குமுள்ள சம்பந்தத்தை நாம் தியானிக்கும்போது, பளிச்சென நம் சிந்தையில் பதியும் வேத வாக்கியம் “ஆபிரகாம் தேவனை விசு வாசித்தான்; அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது” என்பதே. இச்சொற்றொடர் நான்குமுறை வேதத்தில் வருகிறது—ஆதியாகமம், ரோமர், கலாத்தியர், யாக்கோபு. விளக்கத்திற்கு வசதியாக இந்த வரிசையை மாற்றித் தியானிப்போம்.

### அ) ரோமர் 4:3,10

“வேத வாக்கியம் என்ன சொல்லுகிறது? ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது என்று சொல்லுகிறது... அது எப்பொழுது அவனுக்கு அப்படி எண்ணப்பட்டது? அவன் விருத்த சேதனமுள்ளவனாயிருந்தபோதோ, விருத்தசேதன மில்லாதவனாயிருந்தபோதோ? விருத்தசேதனமுள்ள வனாயிருந்தபோதல்ல, விருத்தசேதனமில்லாதவனா யிருந்தபோதே.”

இன்றைய நமது கிறிஸ்தவ வாழ்வில் இதை துவக்கமாகிய *இரட்சிப்பின்* அனுபவத்தோடு ஒப்பிடலாம்.

### ஆ) யாக்கோபு 2:21-23

“நம்முடைய பிதாவாகிய ஆபிரகாம் தன் குமாரன் ஈசாக்கைப் பலிபீடத்தின்மேல் செலுத்தினபோது கிரியை களினாலே அல்லவோ நீதிமானாக்கப்பட்டான்? விசுவாசம் அவனுடைய செயல்களோடேகூட முயற்சி செய்து, செயல் களினாலே விசுவாசம் பூரணப்பட்டதென்று காண்கிறாயே. அப்படியே ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது என்கிற வேத வாக்கியம் நிறைவேறிற்று; அவன் தேவனுடைய சிநேகிதன் எனப்பட்டான்.”

பலிபீடத்தின்மேல் படைத்தல் என்பது *பரிசுத்த மாகுதலின்* பாதையை நமக்குச் சுட்டிக்காட்டுகிறது.

### இ) கலாத்தியர் 3:6,8

"அப்படியே ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது... மேலும் தேவன் விசுவாசத்தினாலே புறவினத்தாரை நீதிமான்களாக்கு கிறாரென்று வேதம் முன்னாகக் கண்டு: உனக்குள் சகல மக்களினங்களும் ஆசீர்வதிக்கப்படும் என்று ஆபிரகா முக்குச் சுவிசேஷமாய் முன்னறிவித்தது."

"பூமியிலுள்ள சகல மக்களினங்களும் உன் மூலமாய் ஆசீர்வதிக்கப்படும்!" இந்த வசனத்தின்படி, யேகோவா தேவனுடைய பிரதான சுவிசேஷக் கட்டளையைப் பெற்ற முதலாவது மனிதன் ஆபிரகாம் எனலாம். "உலகமெங்கும் போய் படைப்பு அனைத்திற்கும் சுவிசேஷத்தைப் பிர சங்கியுங்கள்" என்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நாம் பெற்ற சுவிசேஷப் பேராணையைப் பல்லாயிரம் ஆண்டுகட்குமுன்பே "உனக்குள் சகல மக்களினங்களும் ஆசீர்வதிக்கப்படும்" என்று சொன்னபோதே தேவன் ஆபிரகாமுக்குக் கொடுத்துவிட்டார். எனவே தேவனின் *மிஷனரித் திட்டத்தின்* ஆரம்பமே ஆபிரகாம்தான்.

### ஈ) ஆதியாகமம் 15:4-6

"அப்பொழுது கர்த்தருடைய வார்த்தை அவனுக்கு உண்டாகி, இவன் உனக்குச் சுதந்தரவாளியல்ல, உன் கர்ப்பப் பிறப்பாயிருப்பவனே உனக்குச் சுதந்தரவாளி யாவான் என்று சொல்லி, அவர் அவனை வெளியே அழைத்து: நீ வானத்தை அண்ணாந்து பார், நட்சத் திரங்களை எண்ண உன்னாலே கூடுமானால் அவைகளை எண்ணு என்று சொல்லி; பின்பு அவனை நோக்கி: உன்



சந்ததி இவ்வளமாய் இருக்கும் என்றார். அவன் கர்த் தரை விசுவாசித்தான், அதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார்."

எலியேசர் ஆபிரகாமின் வீட்டில் பிறந்தவனாயிருந் தான். ஆபிரகாமுக்கோ புத்திர சந்தானம் இல்லாதிருந்தது. தன் வீட்டில் பிறந்த பிள்ளையாகிய எலியேசரே தனது சுதந்தரவாளி என்று ஆபிரகாம் நினைத்தான். "உன் கர்ப்பப் பிறப்பாயிருப்பவனே உனக்குச் சுதந்தரவாளியா யிருப்பான்" என்று தேவன் சொன்னபோதோ அவன் அதை விசுவாசித்தான். அது அவனுக்கு நீதியாக எண் ணப்பட்டது. உண்மையில் ஆபிரகாமின் உடல் செத்தது போலிருந்தது; அவன் தன்னில்தானே ஒரு குழந்தையைப் பெற்றெடுக்க திறனற்றவனாயிருந்தான். ஆகவே இந்தக் காரியத்தில் மரித்தவன் என்று சொல்லப்படக்கூடிய ஒருவனை தேவன் உயிரோடே எழுப்பி அவன்மூலம் ஒரு சந்ததியை இவ்வுலகில் உருவாக்கியிருக்கிறாரென்றால் அது *உயிர்த்தெழுதலின்* அடையாளமாகும்.

இவ்விதம், "ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது" என்ற வசனம் ரோமரில் *இரட்சிப்பை* அடுத்தும், யாக்கோபில் *பரிசுத்த மாகுதலை* அடுத்தும், கலாத்தியரில் *நற்செய்திப் பேரா ணையை* அடுத்தும், ஆதியாகமத்தில் *உயிர்த்தெழுதலை* அடுத்தும் சொல்லப்பட்டுள்ளது. Salvation, Sanctification, Commission and Resurrection. அதாவது மறுபிறப்பு முதல் உயிர்த்தெழுதல் வரை கிறிஸ்தவ வாழ்க்கை யானது விசுவாசத்தினாலானதே. துவக்கம் முதல் முடிவு வரை விசுவாசமே!

"நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை *ஏற்றுக் கொண்டபடியே*, அவருக்குள் வேர்கொண்டவர்களாகவும், அவர்மேல் கட்டப்பட்டவர்களாகவும், அவருக்குள் நடந்து கொள்ளுங்கள்" என்று திருமறை போதிக்கிறது

(கொலோ 2:6). கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டது விசுவாசத்தினாலே; அவரில் நடந்துகொள்ளுவதும் விசுவாசத்தினாலேயாம்!

‘விசுவாச வாழ்வின் தொடர்ச்சி’ என்ற இப்பகுதியில் ஐந்து காரியங்களைத் தியானிப்போம்.

1. பாவத்தின்மீது வெற்றி
2. தேவனோடு ஐக்கியம்
3. பரிசுத்தவான்களின் ஐக்கியம்
4. உடலுக்கடுத்த தேவைகள்
5. விசுவாசத்தைப் பகிர்ந்துகொள்ளுதல்



***பகுதி 2 அத்தியாயம் 1***

# பாவத்தின்மீது வெற்றி

**பாவம்** நிறைந்த இவ்வுலகில் பாவத்தின்மேல் வெற்றி காணுவது சாத்தியமா? இன்றைக்குப் பிரச்னைகளிலெல்லாம் பிரச்னை பாவப்பிரச்னைதான். பாவத்தின் சுருக்கமான ஆனால் நிறைவான விளக்கத்தை 1 யோவான் 2:16இல் காண்கிறோம். “மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினால் உண்டானவைகள்.” எல்லாப் பாவங்களும் இம்மூன்றுக்குள் அடங்கும்.

எடுத்துக்காட்டாக, ஆதாமுக்கும், ஏவாளுக்கும் வந்த சோதனை இதுதான். பழமானது சாப்பிடுவதற்கு ஏற்றதாயிருந்தது—*மாம்சத்தின் இச்சை;* பழமானது பார்ப்பதற்கு இன்பமாயிருந்தது—*கண்களின் இச்சை;* புசிக்கும் நாளில் தேவனைப்போல ஆவீர்கள்—*வாழ்வின் பெருமை.* இந்தச் சோதனையில் அவர்கள் இருவரும் படுதோல்வியடைந்தனர். இரண்டாம் ஆதாமாகிய இயேசுவுக்கும் இதேவித சோதனைகள்தான் வந்தன. “இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி செய்யும்”—*மாம்சத்தின் இச்சை;* மலையின்

மேல் கொண்டுபோய் உலகத்தின் சகல அரசுகளையும் அவைகளின் மகிமையையும் அவருக்குக் காண்பித்து, “இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன்” என்றது—*கண்களின் இச்சை;* தேவாலயத்து கோபுரத்தின்மேல் அவரை நிறுத்தி, “தாழக்குதியும், தூதர்கள் உம்மைக் கைகளில் ஏந்திக்கொண்டு போவார்கள்” என்றது—*ஜீவனத்தின் பெருமை.* இந்த மூன்று பொல்லாத சோத னைகளை உலகம் என்ற ஒரே வார்த்தையில் அடக்கலாம்.

கிறிஸ்துவைப்போல ஜெயிக்க நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை 1 யோவான் 5:4 மிக அழகாகக் கூறுகிறது. “கடவுளால் பிறப்பதெல்லாம் உலகை வெல் லும்; நம்முடைய விசுவாசமே உலகை வெல்லும் வெற்றி.” வெல்லும் இவ்விசுவாசம் என்ன என்பதை அடுத்த வசனம் தெளிவாக்குகிறது. “இயேசுவானவர் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறவனைத் தவிர உலகத்தை ஜெயிக்கிறவன் யார்?” இவ்வுலகத்தி லுள்ள பாவங்களை ஜெயிப்பதற்கு இயேசு தேவ குமாரன் என விசுவாசித்தால் போதுமாம்! என்னே எளிமை, என்னே வல்லமை! இது சாத்தியமாவது எங்ஙனம்? தேவ குமார னாகிய அவரோடு நாமும் தேவனுடைய குமாரராக குமா ரத்திகளாக இருக்கிறோம்; அப்படியானால் அவர் உல கத்தை ஜெயித்ததுபோல் அவரது இளைய சகோதர சகோதரிகளாகிய நாமும் உலகத்தை ஜெயிக்க முடியும்; தண்ணீரினாலும் ஆவியினாலும் தேவக் குடும்பத்திற்குள் பிறந்த நாமும் உலகத்தை மேற்கொள்ள இயலும்.

அப்போஸ்தலனாகிய பவுல் இந்தச் சத்தியத்தை இன்னொரு விதமாகச் சொன்னான்: “கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும் பிழைத் திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத்



தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமார னைப் பற்றும் *விசுவாசத்தினாலே* பிழைத்திருக்கிறேன்” (கலா 2:20). மாம்சத்தில் விசுவாச வாழ்வு! நாம் மறுபடியும் பிறந்தபோது நமது மாம்ச உடல் மரிக்கவில்லை. ஆவிக் குரிய உடலாக அது மாற்றப்படுவது இயேசுவின் வருகையில்தான். இப்போது மாம்சத்தோடும், இரத்தத் தோடும் இவ்வுலகில் பிழைத்திருக்கிறதோ தேவகுமார னைப் பற்றும் “விசுவாசத்தினால்” மட்டுமே. இதைத் தான் கிறிஸ்துவோடு அடையாளப்படுத்திக்கொள்ளுதல் என்று சொல்லுகிறோம். தேவன் விரும்பும் வண்ணம் வெற்றி வாழ்க்கை வாழ வாஞ்சிக்கும் எவரும் இச் சத்தியத்தைச் சரியாய் அறியவேண்டும். ‘நான் பொய் சொல்லமாட்டேன், பிறர் பொருளை இச்சிக்கமாட்டேன், யாரையும் ஏமாற்றமாட்டேன், நான் சொன்னதைச் செய்வேன், அசைவம்கூடச் சாப்பிடமாட்டேன்’—இதைப் போன்ற நூற்றுக்கணக்கான தீர்மானங்கள் கொண்ட வாழ்க்கை அல்ல கிறிஸ்தவ வெற்றி வாழ்க்கை என்பது. இன்றைக்கு அநேக கிறிஸ்தவர்களும் இவ்வித மனித மார்க்கத்தைத் தழுவத்தான் நினைக்கிறார்கள். இந்த நீதிகளனைத்தும் தேவனுடைய பார்வையிலே அழுக்கான கந்தையாம் (ஏசா 64:6).

கிறிஸ்துவோடு அடையாளப்படுத்திக்கொள்ளுதல் (Identification with Christ) என்ற சத்தியத்தை மிக நேர்த்தியாக விளக்குவது ரோமர் ஆறாம் அத்தியாய மாகும். இந்த அத்தியாயத்தை எவரும் முழுவதும் விவ ரித்துத் தீராது. ஆழ்ந்த சத்தியம், ஆனால் நடை முறைக்குத் தேவையான அளவு இதை விளக்கலாம்.

2000 ஆண்டுகட்குமுன் இயேசு சிலுவையில் உயிர் விட்டபோது நாமும் அவரோடு சிலுவையிலறையப்பட் டோம். இந்த விசுவாசமே கிறிஸ்துவோடு அடையாளப் படுத்திக்கொள்ளுதலில் முதற்படி. “கிறிஸ்து இயேசுவுக்

குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா ?'' (ரோ 6:3). கிறிஸ்துவுடனே செத்ததுமட்டுமல்ல, அவருடன் அடக்கமும் பண்ணப்பட்டோம். "அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம்'' (ரோ 6:4). பாவத்துக்கு மரித்து அவருடன் அடக்கம்பண்ணப்பட்டுவிட்டோம். அவ்விதமே கிறிஸ்து உயிரோடெழுந்தபோது நாமும் உயிரோடு எழுப்பப்பட்டோம். "அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம்'' (ரோ 6:5). வெற்றி வாழ்க்கை இயேசுவின் உயிர்த்தெழுதலினாலேயே. சிலுவை நல்லது, இன்றியமையாதது, அங்கே கிறிஸ்து நமக்காய்ப் பலியானார். ஆனால் வெறும் மரணத்திலே அற்புதம் ஏதும் இல்லை. கிறிஸ்துவுக்கு முன்னரும், பின்னரும்கூட பல குற்றவாளிகள் சிலுவையில் உயிர்விட்டனர். செத்தபின் உயிர்த்தெழுதலே அற்புதம்; அதுவே மகிமை, மாட்சிமை, மகத்துவம்! கெத்செமனே வேண்டும், ஆனால் போதாது; கல்வாரி வேண்டும், ஆனால் போதாது; காலியான கல்லறைக்கு வந்துசேரவேண்டும்! அதுதான் "இனி நான் அல்ல; கிறிஸ்துவே என்னில் *பிழைத்திருக்கிறார்''* என்பது. அடுத்தது ? உன்னதங்களிலே அவரோடுகூட அமர்ந்திருக்கிறோம்! "கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே... நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்'' (எபே 1:3). தந்தையானவரிடம் ஏறிச்சென்ற கிறிஸ்து என்ன செய்தார் ? மலரெனகசக்கிச் சாறு எடுக்கப்பட்ட—கிழித்துப் பிய்க்கப்பட்ட—உடைத்து நொறுக்கப்பட்ட—தம் உடலை நித்திய பலியாகப் பிதாவுக்குமுன் சமர்ப்பித்தார். பிதா அதை அங்கீகரித்தார். அப்படியே நாமும் நமது உறுப்புகளைக் கடவுளுக்கு அர்ப்பணித்து, அவரோடு ஆளுகையும் செய்கிறோம். "உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள்'' (ரோ 6:13).



மட்டுமல்ல, நீங்கள் அவருக்குள் பரிபூரணமானவர்கள் என்பதையும் விசுவாசியுங்கள். திருவசனம் அப்படித்தான் சொல்லுகிறது. "தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் உடல்ரீதியாக அவருக்குள் வாசமாயிருக்கிறது. மேலும்... அவருக்குள் *நீங்கள்* பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள்'' (கொலோ 2:9,10).

கிறிஸ்துவுடன் செத்தேன்; அவருடன் அடக்கம்பண்ணப்பட்டேன்; அவரோடு உயிர்த்தெழுந்தேன்; அவரோடு பரமேறினேன்; அவரோடு வீற்றிருக்கிறேன்; பிரியமானவருக்குள் தேவன் என்னைப் பிரியமானவனாக ஏற்றுக்கொண்டிருக்கிறார்; கிறிஸ்துவுக்குள் பரிபூரணமுமடைந்திருக்கிறேன்! இதுவே பூரண செய்தி. இதை விசுவாசிப்பதே கிறிஸ்துவோடு அடையாளப்படுத்திக்கொள்ளுதலாகும். இந்த விசுவாசமே நமது உள்ளான மனிதனைப் பலப்படுத்துகிறது. "உள்ளான மனிதனில் வல்லமையாய்ப் பலப்படவும், *விசுவாசத்தினாலே* கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும்...'' (எபே 3:16,17). இந்த விசுவாசம்தான் நமது கேடகமும் மார்புக்கான கவசமுமாம்.

எபேசியர் 6:13-17இல் நமக்குரிய ஆறு போராயுதங்களைப் பார்க்கிறோம். "எல்லாவற்றிற்கும் மேலாக'' **விசுவாசமென்னும்** கேடகத்தைப் பிடித்துக்கொள்ள வேண்டுமாம்! அரைக்கச்சை, பாதரட்சை, தலைச்சீரா, பட்டயம் அனைத்துமே முக்கியமானதாயிருந்தாலும் "எல்லாவற்றிற்கும் மேலாகப்'' பிடிக்கவேண்டியது விசுவாசமென்னும் கேடகத்தையே! உடலின் எப்பகுதியையும் கேடகம் பாதுகாக்கும் அல்லவா ?

விசுவாசமானது கேடகம் மட்டுமல்ல, மார்புக் கவசமும் கூட. 'விசுவாசம் அன்பு என்னும் மார்க்கவசத்தையும் அணிந்துகொண்டிருக்கக்கடவோம்'' (1 தெச 5:8). ஒரு

வேளை தலையில் அம்பெய்தால் கேடகத்தை உயர்த்தித் தலையைப் பாதுகாத்துக்கொள்ளும் அதே வேளையில் மார்பை நோக்கி வரும் அம்பிலிருந்து பாதுகாக்கப்பட மார்க்கவசம் தேவையல்லவா ? அதுவும் விசுவாசம்தான்!

பிரியமானவர்களே, இதுதான் வெற்றி வாழ்வின் இரகசியமாகும். அப்போஸ்தலர் அல்லது ஊழியக்காரரிடம் பாவ அறிக்கை செய்தால்தான் வெற்றி வாழ்வு சாத்தியம்; மற்றபடி நமது பாவம் மனிதருக்குத் தெரியாதாகையால் அப்பாவத்தைத் திரும்பச் செய்துகொண்டிருப்போம் என்ற நவீன உபதேசம் ஒன்று இன்று தாண்டவமாடுகிறது. தேவன் காட்டும் எளிய வேத முறையிலிருந்து விசுவாசி களைத் திசைதிருப்ப வஞ்சகனின் சூழ்ச்சியாகும் இது. கவனமாயிருங்கள்!

விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்!



*பகுதி 2 அத்தியாயம் 2*

# தேவனோடு ஐக்கியம்

**நாம்** இறைவனோடு உறவுகொள்ள இரு ஏதுக்களை அவர் தந்துள்ளார்—திருவசனமும் திருவேண்டலும். இவையிரண்டும் பறவையின் இரு இறக்கைகள் போல. புகை வண்டியின் இரு தண்டவாளங்கள் போல. இவை யிரண்டினின்றும் பிரிக்கக்கூடாதவாறு இவற்றோடு விசுவாசமானது பின்னிப் பிணைந்துள்ளது.

## அ) திருவசனம்

இந்த உலகிலேயே மிகப் பெரிய விசுவாசம் இறை வார்த்தையில் வைக்கும் விசுவாசமே. எபிரெயர் 11ஆம் அத்தியாயத்தில் விசுவாச வீரர் பட்டியலில் முதலில் வருவது ஆபேலோ, ஏனோக்கோ, ஆபிரகாமோ அல்ல; நீங்களும் நானும்தான்! பாருங்கள்: ‟விசுவாசத்தினாலே *நாம்* உலகங்கள் தேவனுடைய **வார்த்தையினாலே** உண் டாக்கப்பட்டதென்று... அறிந்திருக்கிறோம்'' (எபி 11:3). ஆம், நமது விசுவாசம் பெரியது, மேலானது; உலகத்தை உருவாக்கிய தேவ வார்த்தையின்மீது வைக்கும் விசு வாசம் அது. வேதத்தின் முதல் பக்கத்திலே ‟என்றார் தேவன்'' என்று பலமுறை பார்க்கிறோம் (ஆதி 1:3,6,9, 11,14,15,20,22,24,26,28,30).

திருமறையின் பிரதான நோக்கமே நித்திய வாழ்வை நல்கும் விசுவாசத்தை நமக்கு அளிப்பதே. “இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய வாழ்வை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கின்றன” (யோ 20:31). “விசுவாசம் (காதில்) கேட்பதினாலே வரும், கேட்பது தேவனுடைய வசனத்தினாலே வரும்” (ரோ 10:17). தேவனுடைய வார்த்தையைக் கேட்கும்போது நாம் துவக்க விசுவாசத்தைப் பெறுகிறாம். வேதத்தைத் தொடர்ந்து அந்தத் துவக்க விசுவாசத்தோடு வாசித்தால் விசுவாசமானது வளரும். ஒரு சிலரது வாழ்வில் துவக்கத்தில் திருவசனத்தை விசுவாசித்ததுபோல் இப்போது முடிவதில்லை. காரணம், வேதத்தை வாசிக்கும் ஒவ்வொரு சமயத்திலும் ஏற்கனவே பெற்றுள்ள விசுவாசத்தை அவர்கள் பயன்படுத்தத் தவறுவதால் அது வளர்ச்சியின்றி நாளடைவில் பலமிழந்து போகிறது. “அது மெய்யாகவே தேவ வசனந்தான்; **விசுவாசிக்கிற** உங்களுக்குள்ளே அது செயலாற்றுகிறது” (1 தெச 2:13).

விசுவாசிக்கும்போது மட்டுமே தேவ வசனம் செயல்படும் என்பதற்கு இன்னொரு வசனத்தைப் பாருங்கள்: “உத்தம நிதானிப்பையும் அறிவையும் எனக்குப் போதித்தருளும், உம்முடைய கற்பனைகளின்மீது *விசுவாசமாயிருக்கிறேன்”* (சங் 119:66). சங்கீதக்காரன் தன் வாழ்க்கையில் கடைப்பிடித்த, நாம் கடைப்பிடிக்கவேண்டிய, நடைமுறை சத்தியம் இதுதான்—வசனம் விளங்க வேண்டுமானால் வசனத்தை விசுவாசிக்கவேண்டும்! Trust the Word to be taught of the Word!

இஸ்ரவேலர் தோல்வியடைந்தது இங்குதான். “சுவிசேஷம் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டதுபோல நமக்கும் அறிவிக்கப்பட்டது; அதைக் கேட்டவர்கள் *விசுவாசமில்லாமல்* கேட்டபடியினால், அவர்கள் கேட்ட வசனம் அவர்களுக்குப் பயன்படவில்லை. விசுவாசித்தவர்களாகிய நாமோ அந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்கிறோம்; அவருடைய செயகைகள் உலகத் தோற்றமுதல் முடிந்திருந்தும், இவர்கள் என்னுடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதில்லையென்று என்னுடைய கோபத்திலே ஆணையிட்டேன் என்றார்” (எபி 4:2,3). இந்த இடத்தில் இளைப்பாறுதல் என்பது கிறிஸ்து முடித்த மீட்பின் பணியின் ஆசீர்வாதங்களாகும். திருவசன விசுவாசத்தால் மட்டுமே நாம் இவ்வாசீர்வாதங்களைச் சுதந்தரிக்கலாம்.



வசனத்தை வாசிக்கும் நமது பொறுப்பென்ன? வழியருகே விதைக்கப்பட்டு பறவைகள் எடுத்துச் சென்ற நிலையை வசனம் கேட்டு அதைத் திரும்பத் தியானிக்காததால் மறந்துவிடுவதற்கு ஒப்பிடலாம். இதில் விசுவாசமே கிடையாது. அடுத்த நிலமாகிய கற்பாறை கொஞ்சக்கால விசுவாசத்தைக் குறிக்கும், உடைவு, நொறுங்குதல், பொறுமையான தியானம் ஆகியவை இல்லாததே காரணம். தேவன் குறைவற்றவர்; வசனம் குறைவற்றது; நமது குறைவை வசனம் மூலம் நிறைவாக்க விரும்பும் தேவன் நம்மிடம் எதிர்பார்க்கும் ஒரே ஒத்துழைப்பு எளிய விசுவாசமே.

### ஆ) திருவேண்டல்

நாம் தேவனிடம் செல்லுவதே விசுவாசத்தின் மூலம் தான். “அவர்மீதுள்ள **விசுவாசத்தால்** அவருக்குள் நமக்குத் *தைரியமும்* திடநம்பிக்கையோடே கடவுளிடத்தில் சேரும் சிலாக்கியமும் உண்டாயிருக்கின்றன” (எபே 3:12). “ஆகையால், சகோதரரே, நாம் பரிசுத்த தலத்தில் நுழைவதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய்ப் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு ஏற்படுத்தினபடியால், அந்த மார்க்கத்தின் வழியாய்

நுழைவதற்கு அவருடைய இரத்தத்தினாலே நமக்குத் *தைரியம்* உண்டாயிருக்கிறபடியினாலும், தேவனுடைய வீட்டின்மேல் அதிகாரியான மகா ஆசாரியர் நமக்கு ஒருவர் இருக்கிறபடியினாலும், துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும், சுத்தமான நீரால் கழுவப்பட்ட உடலுள்ளவர்களாயும், உண்மையுள்ள இருதயத்தோடும் **விசுவாசத்தின்** பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம்'' (எபி 10:19-22).

ஒரே சத்தியத்தை விளக்கும் இந்த இரண்டு முக்கிய வசனப்பகுதிகளிலும் ''தைரியம்'' என்ற பதம் வருகிறதைப் பார்க்கிறோம். நாம் ஜெபிப்பதற்காக முழங்காற்படியிடும் ஒவ்வொரு சமயமும், அடுத்த நிமிடமல்ல, அந்த நிமிடமே தேவப்பிரசன்னத்தில் இருக்கிறோம் என்பதை அறிய வேண்டும். இரண்டு, மூன்று பேர் தேவ சமூகத்தில் கூடியிருக்கும்போது, 'கர்த்தாவே எங்கள் நடுவில் *வாரும்*' என்று அழைக்கத் தேவையில்லை. இரண்டோ மூன்று பேர் அவர் நாமத்தில் கூடும்போது, அவர்கள் நடுவில் தாம் ஏற்கனவே *இருப்பதாக* வாக்குக்கொடுத்துவிட்டார் (மத் 18:20). வந்திருக்கும் ஒருவருக்கு அழைப்பு அல்ல, வரவேற்புதான் கொடுக்கவேண்டும்! அதாவது முழங்காலிட்டவுடன், ''எங்கள் நடுவில் இருக்கிறவரே, உம்மைத் துதிக்கிறோம்'' என்று துவங்கிவிடவேண்டும். உணர்ச்சிகளைச் சார்ந்த ஜெப வாழ்க்கை குழந்தைத்தனமானது. மனரம்மியமான, மகிழ்ச்சியான உணர்வுகள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் உண்மை—அதாவது, இயேசு நம் நடுவில் பிரசன்னமாயிருக்கிறார் என்பது—மாறாது. உணர்ச்சிகள் மனிதனது மனோநிலையைப் பொறுத்தவை; அவை தேவப் பிரசன்னத்தைப் பொறுத்தவையல்ல. நாம் உணர்ந்தாலும் உணராவிட்டாலும் அவர் நம் நடுவிலிருப்பதுதான் உண்மை. இவ்வித அறிவுக்குள் நான் எனது கிறிஸ்தவ வாழ்வின் துவக்கத்திலேயே வந்துவிட்டது பலவித வஞ்சகங்களிலிருந்து என்னைக் காப்பாற்றியுள்ளது.



அடுத்து, உங்கள் வேண்டலைக் கடவுள் கேட்கிறாரென்று விசுவாசியுங்கள். இதோ உங்களுக்கு நன்றாய்த் தெரிந்த சில வசனங்கள்:

மாற்கு 11:22,24, ''இயேசு அவர்களை நோக்கி: தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களாயிருங்கள்... நீங்கள் ஜெபம்பண்ணும்போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும் என்று சொல்லுகிறேன்.''

1 யோவான் 5:14,15, ''நாம் எதையென்றாலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப்பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக் கேட்டாலும், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக்கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம்.''

யாக்கோபு 1:6-8, ''ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால் அவன் தேவனிடம் கேட்கட்டும், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும். ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கவேண்டும்: சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான். அப்படிப்பட்ட மனிதன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினைக்கக்கூடாது. இருமனமுள்ளவன் தன் வழிகளிலெல்லாம் நிலையற்றவனாயிருக்கிறான்.''

ஜெபத்திற்கு விசுவாசம் தேவை; ஆனால் ஜெபிக்க ஜெபிக்கத்தான் விசுவாசம் வளரும். அப்படியே, துதிக்க விசுவாசம் தேவை; ஆனால் துதிக்கத் துதிக்கத்தான் விசுவாசம் வளரும். விசுவாசத்தோடு வேதத்தை தியா

னிக்கவேண்டும்; தியானிக்க தியானிக்க விசுவாசம் வளரும் என்று ஏற்கனவே நாம் கவனித்ததைப் போன்றது இது. "பிரியமானவர்களே, உங்கள் மகா பரிசுத்தமான *விசுவாசத்தின்மேல்* உங்களை உறுதிப்படுத்திக்கொண்டு பரிசுத்த ஆவிக்குள் **ஜெபம்பண்ணுங்கள்**" (யூதா 20). "நீங்கள் போதிக்கப்பட்டபடியே, *விசுவாசத்தில்* உறுதிப் பட்டு, **துதியோடு** அதில் பெருகுவீர்களாக" (கொலோ 20:27).

ஜெபத்தை முக்கியப்படுத்தும் அதே வேளையில் ஓர் எச்சரிப்பும் அவசியம். ஜெபித்துக்கொண்டேயிருந்து விட்டு, வேதம் வாசிப்பதில் குறைவுபடுவோமானால் நாம் ஞானத்தில் குறைந்துவிடுவோம். ஜெபம் தருவது பக்தி; வேதம் தருவது புத்தி. பக்தியும், புத்தியும் சமநிலையில் இருக்கவேண்டும். பக்தியில்லாத புத்தியும், புத்தியில்லாத பக்தியும் ஒரு காசுக்கு உதவாது. புறாக்களைப்போல் கபடற்றவர்களாயிருங்கள் என்று சொன்ன இயேசு பாம்பு களைப்போல் வினாவுள்ளவர்களாயுமிருங்கள் என்றும் சொன்னாரன்றோ ?

இரட்சிப்பைப் பெறுவது "ஞானமுள்ள" விசுவாசத் தினால்! "கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத் தினாலே உன்னை *இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனா கத்தக்க* பரிசுத்த வேத எழுத்துக்களை நீ சிறுவயது முதல் அறிந்தவனென்றும் உனக்குத் தெரியும்" என்று தீமோத்தேயுவைப் பவுல் பாராட்டினான் (2 தீமோ 3:15). பரிசுத்த வேத எழுத்துக்கள் நமது விசுவாசத்தை ஞான முள்ள விசுவாசமாக மாற்றும். சிலர் நினைப்பதுபோல் ஞானமும், விசுவாசமும் ஒன்றுக்கொன்று முரண் பட்டதல்ல; இரண்டும் சேர்ந்திருக்க முடியும். அநேக துர்வுபதேசங்கள் 40 நாள் உபவாசத்திற்குப் பின்னர் வெளிவருகின்றன. காரணம் என்ன ? உபவாசத்தைக் கற்றுத் தந்த தேவன் உபவாசத்திற்கு எதிரானவரா ?



அல்லவே. உபவாசத்தின்போது ஒரேடியாக ஜெபத்தி லிருந்துவிட்டு, போதுமான அளவு வேதத்தைப் படிக்கா மலிருப்பதே அதற்குக் காரணம். இயேசு கிறிஸ்து 40 நாட்கள் உபவாசம் முடித்து வந்ததும் சொன்னதென்ன ? "மனிதன் ஆகாரத்தினாலே மட்டுமல்ல, கடவுளுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்" (மத் 4:4). 40 நாட்கள் உபவாசத்தின்போதும் அவர் தேவ வசனத்தையே ஆகாரமாக உட்கொண்டு மகிழ்ந்திருந்தார் என்பதே அதன் பொருள். எனவேதான் அவர் வேத வார்த்தைகள் மூலம் சாத்தானை மடங் கடித்தார். அதிகம் ஜெபிக்கிறவர்களுக்கு சாத்தானின் சோதனைகள் மிகத் தந்திரமாக இருக்கும். சரியான வேத அறிவும் தெளிவான தியானமும் மட்டுமே அவர்களைப் பாதுகாக்கும். ஒரு மணி நேரம் ஜெபித்தால், ஒன்றேகால் மணி நேரமாவது வேதத்தைத் தியானிக்கவேண்டும்! ஜெபிக்கும்போது நாம் தேவனோடு பேசுகிறோம்; வேதம் வாசிக்கும்போது தேவன் நம்மோடு பேசுகிறார். போது மான அளவு மதியீனமாய்ப் பேச நமக்குத் திறமையுண்டு. ஆனால் தேவனோ நாள் முழுவதும் நம்மோடு பேசினாலும் ஞானத்தையே பேசுவார். ஆகையால்தான் பிரசங்கி 5:1,2இல் இப்படி வாசிக்கிறோம்: "நீ தேவாலயத்துக்குப் போகும்போது உன் நடையைக் காத்துக்கொள். மூடர் பலியிடுவதுபோலப் பலியிடுவதைவிட செவிகொடுக்கச் சேர்வதே நலம். தாங்கள் செய்கிறது தீமையென்று அறியாதிருக்கிறார்கள். தேவ சமூகத்தில் நீ துணிகரமாய் உன் வாயினால் பேசாமலும், மனம்பதறி ஒரு வார்த்தையும் சொல்லாமலும் இரு, தேவன் விண்ணகத்திலிருக்கிறார்; நீ மண்ணகத்திலிருக்கிறாய், ஆதலால் உன் வார்த்தை கள் சுருக்கமாயிருப்பதாக." **நமது** சொற்கள் சொற்ப மாயிருக்கட்டும்; தேவாதி தேவனின் வார்த்தைகள் அதிகமாயிருக்கட்டும்.

*பகுதி 2 அத்தியாயம் 3*

# பரிசுத்தவான்களின் ஐக்கியம்

ஆதித் திருச்சபையின் விசுவாசத்தின் இரகசியம் அப் 2:44இல் உள்ளது: "விசுவாசிகளெல்லாரும் ஒருமித்திருந்தார்கள்." எத்தனை மகத்துவமான காரியம்! 'ஆண்டவரே, அதைத் திரும்பச் செய்யும்' எனக் கதறுவோம்! இன்றும் அனைத்து சபை விசுவாசிகளும் ஒரு மனப்பட்டால் நாமும் உலகத்தைத் தலைகீழாய் மாற்ற முடியும்—இல்லை, தலைகீழ் உலகத்தை நேராக்க முடியும்!

r பரிசுத்தவான்கள் கூடிவருதல் விசுவாசத்துக்கு ஊன்றுகோலாயிருக்கிறது என்பதை எபி 10:22-25இல் காண்கிறோம்: "துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும், சுத்தமான தண்ணீரால் கழுவப்பட்ட உடலுள்ளவர்களாயும், உண்மையுள்ள இருதயத்தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம்... மேலும், அன்புக்கும் நற்செயல்களுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனித்து, சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறது போல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக்கடவோம்; நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்தி சொல்லவேண்டும்."



தனி நபர் விசுவாசம் கூட்டு வாழ்க்கை விசுவாசத்தை உருவாக்க அவசியம்; அப்படியே கூட்டு வாழ்க்கை விசுவாசம் தனிநபரின் விசுவாசத்தைப் பலப்படுத்துவதற்கு அவசியம். நாம் கூடிவருகையில் அனைவரது விசுவாசமும் ஒருங்கிணைவதால் தேவன் அதைப் பெரிதும் விரிவடையச் செய்கிறார். ஆகவேதான் குறைந்த விசுவாசத்தோடு வரும் நாம் நிறைவான விசுவாசத்தோடு திரும்பிச் செல்கிறோம்; பலவீனமுள்ள விசுவாசத்தைக் கொண்டு வரும் நாம் ஐக்கியக் கூடுகையை முடித்துச் செல்லும்போது பலமுள்ள விசுவாசத்தைப் பெற்றுச்செல்கிறோம். இப்படிப்பட்ட விசுவாசத்தில் தேவனுடைய சபை வளரும் போது அதின் அங்கங்களும் பெருகும். "சபைகள் விசுவாசத்தில் உறுதிப்பட்டு நாளுக்கு நாள் பெருகின" என்று வாசிக்கிறோம் (அப் 16:5). எத்தனை அருமையான வசனம்! இதுவே தரத்திலும் அதே வேளையில் அளவிலும் வளர்ச்சி! Qualitative and quantitative growth!

இன்று கிழக்கு நாடுகளிலும் மேலை நாடுகளிலும் 'திருச்சபை வளர்ச்சி' (Church Growth) என்பது அதிகமாகப் பேசப்படுகிறது, இதன் அடிப்படையில் பல திருப்பணி இயக்கங்கள் உருவாகியுள்ளன. இறையியல் கல்லூரி மாணவர்களில் பலர் திருச்சபை வளாச்சி என்பதைச் சிறப்புப் பாடமாக எடுத்து அதைக் குறித்துப் பல விரிவுரைகள் எழுதியுள்ளனர். ஆனால் எண்ணிக்கை வளர்ச்சி மட்டும் திருச்சபை வளர்ச்சி ஆகாது; சபையின் தரமும் உயரவேண்டும். சபையானது விசுவாசத்தில் வளருவதன் மூலம் எண்ணிக்கையிலும் பெருகும். கொரியா நாட்டில் சிறியதாக ஆரம் பிக்கப்பட்ட சீயோல் நகர் சபையில் இன்று ஐந்து இலட்சத்திற்கும் மேற்பட்ட அங்கத்தினர்கள் உள்ளனர். மாதந்தோறும் புதிதாக ஐயாயிரம்பேர் ஞானஸ்நானம் பெற்று சபையில் சேர்க்கப்படுகின்றனராம். உலகிலேயே மிகப் பெரிய சபை இதுதான். விசுவாசத்தில் திடப்பட்டு ஆழமாகவும் உயரமாகவும் வளரும் திருச்சபை

எண்ணிக்கையிலும் பெருகும் என்பதற்கு இச்சபை ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. நமது நாட்டிலுள்ள சபைகளும் அவ்வாறு வளர கண்ணீருடன் மன்றாடுவோம்.

r பரிசுத்தவான்கள் கூடிவருதலில் இன்னொரு முக்கிய காரியம் ஒருவருக்கொருவர் உதவி செய்தலாகும். குறிப்பாக விசுவாசத்தில் பலவீனமுள்ளவன் பலம் பெற்றுக்கொள்ளுகிறான். "விசுவாசத்தில் பலவீனமுள்ளவனைச் சேர்த்துக்கொள்ளுங்கள்; ஆனாலும் அவனுடைய மன ஐயங்களைக் குற்றமாய் நிர்ணயிக்காமலிருங்கள். ஒருவன் எந்தப் பதார்த்தத்தையும் சாப்பிடலாமென்று நம்புகிறான்; பலவீனனோ மரக்கறிகளை மட்டும் சாப்பிடுகிறான். சாப்பிடுகிறவன் சாப்பிடாதவனை அற்பமாயெண்ணாதிருப்பானாக; சாப்பிடாதிருக்கிறவனும் சாப்பிடுகிறவனைக் குற்றவாளியாகத் தீர்க்காதிருப்பானாக. தேவன் அவனை ஏற்றுக்கொண்டாரே" (ரோ 14:1−3).

கடவுள் ஒருவனை ஏற்றுக்கொள்ளும்போது, அவனைத் தள்ளிவிடுவதோ, அவன்மீது தீர்ப்புச் சொல்வதோ நம்முடைய காரியம் அல்ல. ஆனால் இன்று சில சபைகளில் அங்கத்தினராயிருக்கவேண்டுமானால் தலைவர்கள் விதிக்கும் நிபந்தனைகள்தான் எத்தனை! தேவன் ஒருவனைத் தம்முடைய பிள்ளையாய் ஏற்றுக்கொள்ளும்போது அதற்குமேல் ஒரு நிபந்தனையும் திணிக்க மனிதனுக்கு உரிமையில்லை. தேவனுக்கு முன்பாக நாம் யார்? தேவனே ஏற்றுக்கொண்ட ஒருவனுடன் ஜெபிக்க மறுப்பது, ஆராதிக்க மறுப்பது, ஊழியம் செய்ய மறுப்பது, இதெல்லாம் மனிதனால் உண்டாக்கப்பட்ட பாரம்பரியச் சுவர்களாம். இவைகளும் கிறிஸ்துவின் சிலுவையால் தகர்ந்திடவேண்டும்.

சபைக்கு சபை கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். எல்லாரும் ஒரே மாதிரியாக இருக்கமுடியாது. ஒன்றுபோல



இருப்பதை அல்ல தேவன் ஒருமைப்பாடு என்று சொல்வது. Unity is not uniformity. தேவன் படைத்த இந்த உலகத்திலே ஒரே மாதிரியான இரண்டு முகங்களை நாம் காணவே முடியாது. இருவரது குரல்கூட ஒன்றுபோல் இருப்பதில்லையே! பூக்களைப் பாருங்கள், எத்தனை வண்ணங்கள்! தாவரங்களைப் பாருங்கள், எத்தனை வகைகள், எத்தனை நிறங்கள்! தேவன் பலவகைகளின் தேவனாயிருக்கிறபடியால் அவரைத் துதிப்போம். God of diversity!

"மற்றொருவனுடைய வேலைக்காரனைக் குற்றவாளியாகத் தீர்க்கிறதற்கு நீ யார்? அவன் நின்றாலும் விழுந்தாலும் அவனுடைய தலைவனுக்கே அவன் உத்தரவாதி; அவன் நிலைநிறுத்தப்படுவான்; தேவன் அவனை நிலைநிறுத்த வல்லராயிருக்கிறாரே. அன்றியும், ஒருவன் ஒரு நாளை மற்றொரு நாளிலும் சிறப்பாக எண்ணுகிறான்; வேறொருவன் எல்லா நாட்களையும் சமமாக எண்ணுகிறான்; அவனவன் தன் தன் மனதிலே முழு நிச்சயத்தை உடையவனாயிருக்கக்கடவன். நாட்களை சிறப்பாக்கிக் கொள்ளுகிறவன் கர்த்தருக்கென்று சிறப்பாக்கிக்கொள்ளுகிறான்; நாட்களை சிறப்பாக்கிக்கொள்ளாதவனும் கர்த்தருக்கென்று சிறப்பாக்கிக்கொள்ளாதிருக்கிறான். சாப்பிடுகிறவன் கடவுளுக்கு நன்றி செலுத்துகிறபடியால் கர்த்தருக்கென்று சாப்பிடுகிறான்; சாப்பிடாதிருக்கிறவனும் கர்த்தருக்கென்று சாப்பிடாதிருந்து தேவனுக்குத் துதி செலுத்துகிறான். நம்மில் ஒருவனும் தனக்கென்று வாழ்வதுமில்லை. ஒருவனும் தனக்கென்று சாவதுமில்லை. நாம் வாழ்ந்தாலும் கர்த்தருக்கென்று வாழ்கிறோம், நாம் செத்தாலும் கர்த்தருக்கென்று சாகிறோம்; ஆகையால் இருந்தாலும் இறந்தாலும் நாம் கர்த்தருடையவர்களாயிருக்கிறோம். கிறிஸ்துவும் மரித்தோர் மேலும் உயிருள்ளோர் மேலும் ஆண்டவராயிருக்கும்பொருட்டு, மரித்தும் எழுந்தும் பிழைத்துமிருக்கிறார்" (ரோ 14:4−9).

திருச்சபைக்குள்ளே தேவன் வைத்துள்ள பரந்த வேறுபாடுகளைப் பாருங்கள்! சாப்பிடுகிறவன் சாப்பிடா தவனை அற்பமாய் எண்ணக்கூடாது. சாப்பிடாதவன் சாப்பிடுகிறவனைக் குற்றவாளியாகத் தீர்க்கக்கூடாது. ஏனெனில் சாப்பிடுகிறவன் கர்த்தருக்கென்று சாப்பிடு கிறான். வெள்ளிக்கிழமை ஆசரிப்போ, சனிக்கிழமை ஆசரிப்போ, ஞாயிற்றுக்கிழமை ஆசரிப்போ, அல்லது ஒரு நாளையும் ஆசரிக்காமல் இருப்பதோ, இவை ஒன்றும் நமது ஐக்கியத்திற்கு அடிப்படையாய் இருத்தல் கூடாது. ஏனெனில் நாட்களை ஆசரிக்கிறவனும் கர்த்தருக்கென்று ஆசரிக்கிறான்; நாட்களை ஆசரிக்காதவனும் அவருக் கென்றே ஆசரிக்காதிருக்கிறான். தேவன் ஏற்றுக் கொண்டவனை நிபந்தனையின்றி திறந்த மனதோடே ஏற்றுக்கொள்ளுவோம்.

ரோமர் 14:22,23ஆம் வசனங்கள் விசுவாசத்தில் பலமுள்ளவர்களுக்கு ஒரு சவாலாக அமைந்துள்ளது. ‘‘உனக்கு விசுவாசமிருந்ததால் அது தேவனுக்கு முன்பாக உன்மட்டும் இருக்கட்டும். நல்லதென்று நிச்சயித்த காரியத்தில் தன்னைக் குற்றவாளியாக்காதவன் பாக்கிய வான். ஒருவன் சந்தேகத்தோடு சாப்பிட்டால், அவன் விசுவாசமில்லாமல் சாப்பிடுகிறபடியால், ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கப்படுகிறான். விசுவாசத்தினால் வராத யாவும் பாவமே.’’ தேவன் படைத்ததெல்லாம் நல்லதாகை யால் எதையும் சாப்பிடலாம் என்ற விசுவாசம் சிலருக்கு இருக்கும். ஒருவேளை அது பலமுள்ள விசுவாசமாயி ருந்தாலும் தேவனுக்கு முன்பாக அதை யாரென்றாலும் தனக்குள்ளே வைத்திருக்கவேண்டும். அதைக் குறித்துப் பெருமையாய்ப் பேசி மற்றவர்களது மனச்சாட்சியைக் குற்றப்படுத்தக்கூடாது. நமது விசுவாசத்தைப் பெருமித விளம்பரம் செய்வதை விட்டுவிட்டுப் பிறரது மனச்சாட்சி இடறலடையாதபடி, அவர்களுக்கு அனுகூலமாய் இருக்க வேண்டும். ‘‘பலமுள்ளவர்களாகிய நாம் நமக்கே பிரிய



மாய் நடவாமல், பலவீனருடைய பலவீனங்களைத் தாங்கவேண்டும். நம்மில் ஒவ்வொருவனும் பிறனுடைய பக்திக்கேதுவான நன்மையுண்டாகும்படி அவனுக்குப் பிரியமாய் நடக்கக்கடவன்’’ (ரோ 15:1,2).

r அடுத்து, நாம் கூடிவரும்போது காணப்படும் பொது விசுவாசத்தால் வரங்கள் அருளப்படுவதும் செயல்படு வதும் சாத்தியமாகிறது. இது ஒரு முக்கியமான ஆசீர் வாதமாகும். வரங்கள் அருளப்படுதல் என்பது இன்று நிறையப் பேசப்படுகிறது. இதைத் திருவசன அடிப்படை யில் தெளிவாக அறிந்துகொள்வது நல்லது. ரோமர் 1:10,11, ‘‘நீங்கள் உறுதிப்படுவதற்காக சில ஆன்மீக வரங்களை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கும், உங்க ளிலும் என்னிலுமுள்ள விசுவாசத்தினால் உங்களோடே கூட ஆறுதலடையும்படிக்கும், உங்களைக் காண வாஞ் சையாயிருக்கிறேன்.’’ பவுல் தனது விசுவாசத்தை ரோம் நகர் விசுவாசிகளோடும், அவர்கள் தங்களது விசுவா சத்தைப் பவுலோடும் பகிர்ந்துகொள்ளும் கருத்தை இங்கு காண்கிறோம். இவ்விதப் பரிமாற்றம்தான் வரங்களைக் கொடுத்தல் அல்லது அருளுதல் என்பதின் ஆழ்ந்த கருத்தாகும்.

வரங்களைப்பற்றிப் பேசும்போது நாம் கவனமாயிருக்க வேண்டிய இன்னொரு காரியமுமுண்டு. அதாவது, நாம் நமது விசுவாசத்தின் ‘‘எல்லையை’’ நன்கறிந்து அதற்குள் செயல்படவேண்டும். ஏனெனில் ஒவ்வொருவருக்கும் தேவன் வெவ்வேறு அளவு விசுவாசத்தைக் கொடுத்திருக் கிறார். பவுலின் சாட்சியைக் கவனியுங்கள்: ‘‘எனக்கு அருளப்பட்ட கிருபையினாலே நான் சொல்லுகிறதாவது: உங்களில் எவனானாலும் தன்னைக் குறித்து எண்ண வேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல், அவனவனுக்குத் தேவன் பகிர்ந்த விசுவாச அளவின்படியே, தெளிந்த எண்ணமுள்ளவனாய் எண்ணவேண்டும்’’ (ரோ 12:3).

இன்றைக்கு அநேக பிரசங்கிமார் இந்த உண்மையைப் பிரசங்கிக்காமல் விசுவாசிகளைத் தடுமாறச் செய்கின்றனர். 'விசுவாசத்தோடு பேசுங்கள், பேசினதெல்லாம் நடக்கும்' என்று சொல்லிவிடுகிறார்கள். 'பிரசங்கியாருக்கு நடந்தது, எனக்கு நடக்கவில்லையே' என்று மக்கள் அங்கலாய்க்கின்றனர். பிரியமானவர்களே, நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள விசுவாச அளவிற்கு மேலாக எண்ணக்கூடாது. சுகமளிக்கும் கூட்டங்களில் முடவனை மேடைக்குக் கொண்டுவந்து, பரிதாபமாய் அவனைத் திரும்ப அனுப்புவதை எத்தனைமுறை பார்த்திருக்கிறோம்! இது தேவனுக்கு மகிமையை அல்ல, அவமகிமையையே கொண்டுவருகிறது. இது அவரைப் பரியாசம் பண்ணுவதாகும். நடக்காத ஒன்றைப் பேசக்கூடாது. பேதுரு மற்றும் யோவான் மூலம் தேவாலயத்தின் வாசலிலிருந்த சப்பாணி சுகம் பெற்றான் (அப் 3:1−8). நம் தேவன் பெரியவர். அற்புத சுகமளிக்கும் அவரது வல்லமை குறைந்துவிடவில்லை. இன்றைக்கும் அவரிடமிருந்து அற்புத சுகத்தைப் பெற்றுக்கொள்வோர் எண்ணற்றோர். ஆனால் பொது மேடையில் சப்பாணியையும், பிறவிக் குருடனையும் அழைத்துவைத்து வெறுங் கூச்சல்போட்டு, புகைப்படம் எடுத்து, வந்தவனை அப்படியே அனுப்பும் கேவலம் நிறுத்தப்படவேண்டும். இதெல்லாம் அவனவனுடைய விசுவாச வரம்பை மீறுவதால் ஏற்படும் குழப்பங்களாகும். எல்லாரும் எலியாபோல தங்களை நினைத்துவிடக்கூடாது. இது தேவனுக்கு அபகீர்த்தி.

ஒரு பெரிய ஊழியர் மரித்துப்போனார். அவர் உயிரோடு எழும்புவார் என்று சொல்லி மூன்று நாட்கள் அவரது உடலை வைத்திருந்து ஜெபித்தார்கள். உடல் அழுகியதுதான் மிச்சம். இது தேவனைப் பரியாசம் செய்தலாகும். நம் விசுவாச எல்லைக்கு மேலாக நடித்துக்காட்ட முயன்று தேவனைப் பரியாசத்துக்குள்ளாக்கக்கூடாது. நம்



தேவன் அற்புதங்களின் தேவன். அவருக்கு உதவி செய்ய நினைக்கவேண்டாம்!

உங்களுக்குத் தீர்க்கதரிசன வரம் கொடுக்கப்பட்டிருந்தால், உங்களுக்கு அளிக்கப்பட்ட விசுவாச அளவின்படியே சொல்லவேண்டும். "நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியே நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர்களானபடியினாலே, நம்மில் தீர்க்கதரிசனம் சொல்லுகிற வரத்தையுடையவன் விசுவாசப்பிரமாணத்துக் கேற்றதாகச் சொல்லக்கடவன்" (ரோ 12:6). மட்டுமல்ல, இரண்டு மூன்று தீர்க்கதரிசிகள் நிதானித்துப்பார்க்க இடம் கொடுக்கவேண்டும். தவறு எனச் சுட்டிக்காட்டப்பட்டால் சாந்தத்தோடு சரிசெய்யவேண்டும். சுகமளிக்கும் கூட்டங்கள் நடத்தும் பிரபல தேவ ஊழியர் பலருக்கு ஒரு தலைவர்போலிருந்த கார்டன் லின்ட்ஸே (1906−1973) என்பவர் தீர்க்கதரிசனம் சொல்லுதலைக்குறித்துக் கீழ்க்கண்ட ஆலோசனையைத் தருகிறார்: "நீங்கள் தீர்க்கதரிசனம் சொல்லும்போது, *இதோ தேவன் சொல்லுகிறதாவது* என்றெல்லாம் துவங்குவது உசிதமானதல்ல, அது ஆபத்தானது. நாம் இதைச் செய்யவேண்டுமென்று தேவன் விரும்புகிறார் என்று அறிகிறேன் என்பது போலப் பேசி விளக்கம் கொடுங்கள். ஒரு சகோதரன் சொன்னது சரி அல்லது வசனத்திற்கு அது அவ்வளவு பொருத்தமாக இல்லை என்று இன்னொரு சகோதரன் சொல்லட்டும். மூத்தவர்கள் அதை நிதானித்துப் பார்க்கட்டும். இந்த விதமான தீர்க்கதரிசனம் மக்களை ஒருவித அழுத்தத்திற்குள் கொண்டுவராது."

r பரிசுத்தவான்களின் ஐக்கியமும் விசுவாச வாழ்வும் என்ற பொருளில் கவனிக்கவேண்டிய இன்னொரு குறிப்பு தலைவர்களின் விசுவாசமாகும். "தேவ வசனத்தை உங்களுக்குப் போதித்து உங்களை நடத்தினவர்களை நீங்கள் நினைத்து, அவர்களுடைய நடக்கையின் முடிவை நன்

றாய்ச் சிந்தித்து, அவர்களுடைய விசுவாசத்தைப் பின்பற்றுங்கள்'' (எபி 13:7). இங்கு ''முடிவு'' என்பது அவர்கள் வாழ்க்கையின் முடிவையல்ல, வாழ்க்கையின் கனியை அல்லது விளைவைக் குறிக்கிறது. தேவனுக்கு நல்ல கனிகொடுக்கும் ஊழியரின் விசுவாசத்திலிருந்து பயனுள்ள படிப்பினைகளைப் பெற்றுக்கொள்ளவேண்டும். ஆனால், எவராயிருந்தாலும் ஒரே ஊழியனின் விசுவாசத்தைப் பின்பற்றுவது ஆபத்தானது. எனவேதான் மேற்கண்ட வசனத்தில் ''உங்களை நடத்தினவர்கள்'' என்று பன்மையில் தரப்பட்டுள்ளது. விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் ''போராடு'' என்று முதல் நிருபத்தில் தீமோத்தேயுவுக்கு எழுதிய பவுல், இரண்டாம் நிருபத்தில் சாட்சியாக நல்ல போராட்டத்தைப் ''போராடினேன்'' எனப் பகர்ந்தான். இவ்விதம் தடம் புரளாத மாதிரித் தலைவர்கள் இன்று எவ்வளவாய்த் தேவை! ''விசுவாசத்தில் விசுவாசிகளுக்கு மாதிரியாயிருப்பது'' ஊழியக்காரரின் தலையாய கடமையாகும் (1 தீமோ 4:12). தலைவர்கள் இவ்வித பொறுப்புடன் நடந்துகொள்ளும்போது, இளைஞர்கள் ''பலவித அந்நிய போதனைகளால் அலைக்கழிக்கப்பட்டுத்'' திரியாதிருப்பார்கள் (எபி 13:7−9).



*பகுதி 2 அத்தியாயம் 4*

## உடலுக்கடுத்த தேவைகள்

**மத்தேயு** சுவிசேஷத்தில் இயேசு நான்கு இடங்களில் தமது சீடர்களை அவர்களது விசுவாசக் குறைவிற்காகக் கடிந்துகொண்டார். இந்த நான்கு சம்பவங்களும் உடலுக்கடுத்த அல்லது பொருளாதாரத் தேவைகளை அடுத்ததே.

''அற்ப விசுவாசிகளே! இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் காட்டுப் புல்லுக்குத் தேவன் இவ்விதமாக உடுத்துவித்தால், உங்களுக்கு உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவா?'' (மத்6:30). இங்கு அவர்களது *கவலையைக்* கடிந்துகொண்டார்.

''அற்ப விசுவாசிகளே! ஏன் பயப்படுகிறீர்கள் என்று சொல்லி; எழுந்து, காற்றையும் கடலையும் அதட்டினார். உடனே, மிகுந்த அமைதல் உண்டாயிற்று'' (மத் 8:26). இது புயற்காற்றிலே உயிர்ப் பாதுகாப்பை நாடின சந்தர்ப்பம். இங்கு அவர்களது *பயத்தைக்* கடிந்துகொண்டார்.

''உடனே இயேசு கையை நீட்டி அவனைப் பிடித்து: அற்ப விசுவாசியே, ஏன் சந்தேகப்பட்டாய் என்றார்'' (மத்

14:31). பேதுரு தண்ணீரிலே அமிழ்ந்துபோகும் தருணம் இது. ஒரு காரியத்தைச் செய்யத் துணிந்து முனைந்த போது வந்த தோல்வி. இங்கு அவனது *சந்தேகத்தைக்* கடிந்துகொண்டார்.

“அற்ப விசுவாசிகளே, அப்பங்களைக் கொண்டுவரா ததைக் குறித்து நீங்கள் உங்களுக்குள்ளே யோசனை பண்ணுகிறதென்ன ?” (மத் 16:8). முந்திய அற்புதங் களை மறந்துபோன சம்பவம் இது. இங்கு அவர்களது *வீண்விவாதத்தைக்* கடிந்துகொண்டார்.

விசுவாசமானது கவலை, பயம், சந்தேகம், விவாதம் ஆகியவைகளுக்கு எதிர்மறையானது. எனவேதான் அவற்றை அவ்வளவாய்க் கடிந்துகொண்டார் இயேசு.

உடலுக்கடுத்த தேவைகளின்கீழ் உடலில் ஆரோக்கி யம், பொருளாதாரச் செழிப்பு ஆகிய இரண்டையும் தியானிப்போம்.

### அ) உடலில் ஆரோக்கியம்

வியாதி வந்தால் முதலாவது செய்யவேண்டியது ஜெபம். “உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால், அவன் சபையின் மூப்பர்களை வரவழைக்கட்டும்; அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்கு எண்ணெய் பூசி, அவனுக்காக ஜெபம்பண்ணக்கடவர்கள். அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் நோயாளியை இரட்சிக்கும்; கர்த்தர் அவனை எழுப்புவார்; அவன் பாவம் செய்தவனானால் அது அவ னுக்கு மன்னிக்கப்படும்” (யாக் 5:14,15). மூப்பர்கள் என்றால் மேய்ப்பர்கள் என்று பொருள். அவர்களை “அழைக்க”வேண்டும். அவர்களுக்கு “வரம்” இல்லை என்று எண்ணக்கூடாது. அபிஷேகிக்கப்பட்ட மேய்ப்பர் எவரையும் தேவன் இந்தத் தேவையில் பயன்படுத்துவார். அவர்களை வரவழைக்கும்போது அவர்களது விசுவாச



மும் வளரும். “ஒரு” மூப்பரை அல்ல, “மூப்பர்களை” என்று குறிப்பிட்டிருப்பதில் காரியம் உண்டு. வேதம் போதிக்காத ‘ஒரே-மேய்ப்பர்-ஊழியத்தையே’ பெரும் பாலும் கண்டுள்ள நமக்கு இது விகற்பமாகத் தெரியும். ஆனால் ஒழுங்கு அதுதான். வேதத்தின்படி நடந்தால் இடறுதலில்லை; எப்போதும் பாதுகாப்பு!

மூப்பர்கள் வந்ததும் அவர்களிடம் எண்ணெயைக் கொடுத்து அதை நம்மீது பூசி ஜெபிக்கச் சொல்லவேண் டும். “ஒலிவ” எண்ணெய்தான் தேவை என்று சொல்லி சில இடங்களில் எண்ணெய் வியாபாரமே நடக்கிறது! எந்த எண்ணெயும் பயன்படுத்தலாம். ஆப்பிரிக்காவில் மண்ணெண்ணெய்கூட பூசி ஜெபிக்கிறார்களாம்! அப்படியே எண்ணெயை ஆசீர்வதிப்பது வசனத்தின்படி சரியல்ல. சுகமாக்கும் தேவ வல்லமைக்கு ஓர் அடை யாளமாகத்தான் எண்ணெய் பயன்படுத்தப்படுகிறது. ஆசீர்வதிக்கவேண்டியது நோயாளியைத்தான்.

ஜெபிக்கும்போதே தேவனுடைய வார்த்தையின் வல்ல மையை விசுவாசிக்க வேண்டும். “அவர் தமது வசனத்தை அனுப்பி அவர்களைக் குணமாக்குகிறார்” என்று வாசிக் கிறோம் (சங் 107:20). கர்த்தருடைய வார்த்தை வியாதி யின் கொடுக்கை உடைத்தெறியும் வல்லமையுள்ளது. “ஆண்ட வரே, நீர் என் வீட்டிற்கு வருவதற்கு நான் தகுதி அல்ல, ஒரு வார்த்தை மட்டும் சொல்லும். அப்போது என் வேலைக்காரன் சுகமடைவான்” என்றான் ஒரு படைத் தலைவன். அந்த நிமிடமே அவனது வேலைக்காரன் சுக மானான்! (மத் 8:8,10) வார்த்தையின்மீதுள்ள இந்த விசுவாசத்தையே இயேசு பெரிதும் மெச்சிக்கொண்டார்.

உங்களுக்கு ஒருவேளை விசுவாசம் குறைவாக அல்லது பலவீனமாக இருக்குமானாலும், “போதுமான விசுவாசம் எனக்கு இல்லை. என் அவிசுவாசம் நீங்கும்படி

உதவி செய்யும், ஆண்டவரே'' என்று உண்மையாய் மறைக்காமல் தேவனிடம் சொல்லுங்கள். ஒரு மனிதன் இயேசுவிடம் இவ்வாறு வேண்டினான்: ''*விசுவாசிக்கிறேன்* ஆண்டவரே, என் *அவிசுவாசம்* நீங்கும்படி உதவி செய் யும்'' (மாற் 9:23,24). அவன் இரக்கம் பெற்றவனாய்த் திரும்பிச் செல்லவில்லையா? இல்லாத ஒன்றை இருப்பதாக அறிக்கையிடும்போதோ தேவனுக்கே நகைப்பு வந்துவிடும்! குறைவோ, நிறைவோ, உண்மை நிலையை ஒத்துக்கொண்டு, கூட்டிக்குறைக்காமல் தேவனிடம் சொல்லுவதே நேர்மையாகும். சாதக விசுவாசப் பிர சங்கிகள் (Positive Faith Preachers) சிலரின் போதனை களை இங்குதான் என்னால் ஒத்துக்கொள்ள முடிய வில்லை. நாவில் சொல்பிறவாததற்கு முன்னரே தேவன் யாவற்றையும் அறிந்திருக்கிறார். ஏதோ சாதகமாகப் பேசவில்லை என்பதால் அப்படியே அது பாதகமாகி விடாது. தேவன் நமது பலவீனங்களைக் குறித்துப் பரி தபிக்கிறவர் என்றுதான் வேதம் போதிக்கிறது. வலி இருக்கும்வரை ''ஆண்டவரே, வலிக்கிறது'' என்று சொல்ல வேண்டும். காய்ச்சல் இருக்கும் வரை ''காய்ச்சலடிக் கிறது'' என்று தைரியமாகச் சொல்லவேண்டும். இல்லை யென்று சொன்னால் அது பொய். உள்ளதை உள்ள தென்று சொல்வதே சாதக அறிக்கையாகும் (Positive Confession). உள்ளதை இல்லையென்று சொல்வது பாதக அறிக்கை (Negative Confession). நம்மை தேவ னிடம் அர்ப்பணித்து நமது விசுவாசக் குறைவை ஒத்துக் கொள்ளும்போது தேவன் நம்மை அணைத்துக்கொள் வார். பரிவுடன் நம் தேவைகளை நிறைவேற்றுவார்.

அடுத்து, தேவ வாக்குத்தத்தங்களை, குறிப்பாக சுகத்துக்கான வசனங்களை, அடிக்கடி நினைவுபடுத்தி அவைகளை உரிமைபாராட்டுங்கள். தேவன் தமது வசனத்தைக் கனப்படுத்துவார். ஆபிரகாமும் சாராளும் தேவனது வாக்குத்தத்தத்தை நம்பினதால் விசுவாசத்



தில் வல்லவர்களானார்கள்; உடலில் பலம் பெற்றார்கள் (ரோ 4:19–21; எபி 11:11).

மருந்து சாப்பிடுவது பாவம் என்று சிலர் எண்ணுகின் றனர். மருந்து சாப்பிட்டுவிட்டு குற்றவுணர்வுக்குள்ளா வோர் அநேகர். பன்னிரண்டு வருடங்களாய்ப் பெரும் பாடுள்ள ஒரு பெண் இருந்தாள். தன் சம்பாத்தியம் முழுவதையும் மருந்துகளுக்காக மருத்துவர்களிடம் செலவழித்தாள். பிறகு இயேசுவிடம் வந்து அவரைத் தொட்டபோது சுகமடைந்தாள். அவள் பன்னிரண்டு ஆண்டுகளாக மருந்து சாப்பிட்டதற்காக இயேசு ஏதாவது சொல்லி அவளைக் கடிந்துகொண்டாரா? அதைப்பற்றி அவர் பேசவே இல்லையே! ''உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, சமாதானத்தோடே போ'' என்றல்லவா சொன்னார்? ''இதோ பூமியின் மேல் எங்கும் விதைதரும் சகலவிதப் பூண்டுகளையும், விதைதரும் கனிமரங் களாகிய சகலவித விருட்சங்களையும் உங்களுக்கு கொடுத்தேன், அவைகள் உங்களுக்கு ஆகாரமாயிருக் கக்கடவது'' என்றார் தேவன் (ஆதி 1:29). மருந்து என்றால் என்ன? வேர்கள், இலைகள், கனிகள், விதைகள் ஆகியவற்றிலிருந்து சாறு எடுத்து இயந்திரங்கள் மூலம் மாத்திரையாகவோ தண்ணீர் மருந்தாகவோ செய்வது தானே. மருந்தும் விசுவாசமும் ஒன்றுக்கொன்று முரண்பட்டது என்று ஒரு காலத்தில் மக்கள் நினைத்தனர். பிரபல ஊழியர் ஓரல் ராபர்ட்ஸின் பெயரைக் கேட்டவுடன் நோயுற்ற ஒரு சிறு பிள்ளையின் தலையில் கைவைத்து உருக்கமாக அவர் ஜெபிக்கும் படம்தான் நமது நினை வுக்கு வரும். அனைத்து உலகில் அற்புத சுகமளிக்கும் ஊழியத்தில் அசாதாரணமாக தேவன் அவரைப் பயன் படுத்தியுள்ளார். அவர் அமெரிக்காமில் டுல்சா நகரில் ஒரு பெரிய மருத்துவமனை நிறுவியுள்ளார். மருந்தும் விசுவாசமும் இணைந்துபோகமுடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றார். அவரது மருத்துவ

மனையின் பெயரே ‘விசுவாச நகர்’ என்பதுதான்! அங்கு ஜெபம், விசுவாசம், மருந்து ஆகிய மூன்றையும் கலந்து நோயாளிகளுக்குக் கொடுக்கிறார்கள். அதைத்தான் வேலூரிலுள்ள கிறிஸ்தவ மருத்துவமனையும், நெய்யூரி லுள்ள வில்லியம் பூத் மருத்துவமனையும், உலகிலுள்ள எல்லாக் கிறிஸ்தவ மருத்துவமனைகளும் இத்தனை வருடங்களாகச் செய்துவருகின்றன!

அப்படியானால் நாம் மருந்து சாப்பிட்டுத்தான் ஆகவேண்டுமா? இல்லை. “நானே உன் பரிகாரியாகிய கர்த்தர்” (யாத் 15:26) என்றவர் மருந்து இல்லாமலேயே சுகமாக்க வல்லவர். சிகிச்சை இல்லாமல் சுகம் பெறக்கூடிய விசுவாசத்தை தேவன் உங்களுக்குக் கொடுத்திருந்தால் அவ்வாறே செய்யுங்கள். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். ஆனால் மருந்து சாப்பிடும் ஒருவனுக்கு விசுவாசம் குறைவு என்று மட்டும் நினைத்துவிடாதிருங்கள். மருந்து சாப்பிடும் காரியத்தில் முரட்டுப் பிடிவாதம் இருப்பதும் நல்லதல்ல. ‘எனக்கு அது விருப்பமில்லை’ என்று வேண்டு மானால் சொல்லுங்கள். ‘என் வாழ்நாள் முழுவதும் ஒரு முறைகூட மருந்து சாப்பிடமாட்டேன்’ என்ற தேவை யில்லாத தீர்மானத்தை எடுக்காதீர்கள். அவ்வித தீர்மானத்திற்கு வேதத்தில் எடுத்துக்காட்டுமில்லை, போதனையுமில்லை. தேவையில்லாத ஒன்றைச் சொல்லி விட்டு, என்றோ ஒருநாள் ஒரு விபத்தினாலேயோ வியாதியினாலேயோ சிகிச்சையெடுக்க நேர்ந்தால், அது உங்களைக் குற்றவுணர்வுக்குள்ளாக்கி வீணாக வருத்தி விடும். மற்றப்படி, சிகிச்சை எடுக்கிறார்களென்று தேவன் ஒருவரையும் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கமாட்டார். ஆனால், மருந்து எடுத்தாலும் குணமாக்குகிறவர் தேவன் தான். சுகம் கர்த்தருடைய கரத்திலிருந்துதான் வரும். “மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக் கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்... அவரு டைய தழும்புகளால் குணமாகிறோம்” (ஏசா 53:4,5).



நாம் மருந்து எடுத்தாலும், எடுக்காவிட்டாலும் “சாவுக்கேதுவான” இந்த உடல் ஒருநாள் அழிவைக் காணும். நாம் ஒவ்வொருவரும் உடலில் ஏதாவது ஒரு குறைவுள்ளவர்களாய்த்தானிருக்கிறோம். அழிவுள்ளதாய் விதைக்கப்படும் இந்த உடல் அழிவில்லாததாய் எழுந்தி ருக்கும். அது எதிர்காலத்தில் வரவிருக்கும் உடல் மீட் பாயிருக்கிறது. அதுவரை சுகமளிக்கும் ஊழியங்களை யும், மருத்துவ சிகிச்சைகளையும், வலிகளிலிருந்தும் வியாதிகளிலிருந்தும் மக்களை விடுவிக்க எடுக்கப்படும் அனைத்து முயற்சிகளையும் தேவன் ஆசீர்வதித்துக் கனப்படுத்துவாராக. ஒவ்வொரு மருத்துவமனையையும் ஒவ்வொரு மருத்துவரையும் தேவன் ஆசீர்வதிப்பாராக. ஏனெனில் எங்கும் வியாதியும் வேதனையும் உண்டு. இது வேதனையும் வியாதியும் நிறைந்த உலகம். ஒருநாள் வரும்; அன்று வியாதி இராது, கண்ணீர் இராது, மரணம் இராது. அதுவரை வியாதி, கண்ணீர், மரணம் இருக்கத் தான் செய்யும். அவர் திரும்ப வரும்போது, அந்நாளில், நமது கண்ணீர் யாவையும் அவர் துடைப்பார் (வெளி 21:4).

### ஆ) பொருளாதாரச் செழிப்பு

பொதுவாக, நமது அடிப்படைத் தேவைகளைக் கட வுள் சந்திக்கும்படி நாம் எதிர்பார்க்கலாம். இதைக் குறித்து இயேசு இவ்விதம் சொன்னார்: “தேவன்... உங்களுக்கு உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவா?... முதலாவது இறையரசையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்” (மத் 6:30,33). “எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்” என்று ஜெபிக்கவும் இயேசு கற்றுக்கொடுத்தார். சங்கீதக் காரனாகிய தாவீதின் சாட்சியும் இதுவே: “கர்த்தருடைய பரிசுத்தவான்களே, அவருக்குப் பயந்திருங்கள்; அவ

ருக்குப் பயந்தவர்களுக்குக் குறைவில்லை. சிங்கக்குட்டிகள் ஆகாரக்குறைவினால் பட்டினியாயிருக்கும்; கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையும் குறைவுபடாது'' (சங் 34:9,10).

இவ்விதம் பொதுவாக நமது அனுதின தேவைகளைத் தேவன் சந்திப்பார். ஆனால் சில வேளைகளில் தேவன் நமது அன்றாடகத் தேவைகளைச் சந்திக்காமலும் இருக்கலாம்; நம்மைப் பசி, தாகம், வறுமை முதலிய சோதனையான நிலைமைகளிலும் வைக்கலாம். கீழ்க்கண்ட வேதப்பகுதிகள் இதைத் தெளிவுப்படுத்துகின்றன: ''இந்நேரம் வரைக்கும் பசியுள்ளவர்களும், தாகமுள்ளவர்களும், நிர்வாணிகளும், குட்டுண்டவர்களும், தங்க இடமில்லாதவர்களுமாயிருக்கிறோம்'' (1 கொரி 4:11). இதைச் சொன்னது அப்போஸ்தலனாகிய பவுல்! அப்போஸ்தலர் கூட குறைவிலிருக்க முடியும்! ''அன்றியும் சகோதரரே, மக்கெதோனியா நாட்டுச் சபைக்குத் தேவன் அளித்த கிருபையை உங்களுக்கு அறிவிக்கிறோம். அவர்கள் மிகுந்த உபத்திரவத்தினாலே சோதிக்கப்படுகையில் கொடிய தரித்திரமுடையவர்களாயிருந்தும், தங்கள் பரிபூரண சந்தோஷத்தினாலே மிகுந்த உதாரத்துவமாய்க் கொடுத்தார்கள்'' (2 கொரி 8:1,2). மக்கெதோனியர் நல்ல பரிசுத்தவான்கள்; அப்போஸ்தலரால் நற்சாட்சி பெற்றவர்கள்; முன்மாதிரியானவர்கள்; தேவ கிருபை பெற்றவர்கள். அவர்களும் ''மிகுந்த உபத்திரவத்தையும், கொடிய தரித்திரத்தையும்'' உடையவர்களாயிருக்க முடியும்! ''பரிசுத்தவான்களுக்குச் செய்யவேண்டிய தர்ம சகாயத்தைக் குறித்து, நான் அதிகமாக உங்களுக்கு எழுதவேண்டுவதில்லை... இந்த தர்ம சகாயமாகிய பணிவிடை பரிசுத்தவான்களுடைய குறைவுகளை நீக்குகிறதுமல்லாமல், அநேகர் தேவனைத் துதிப்பதினாலே சம்பூரண பலனுள்ளதாயும் இருக்கும்'' (2 கொரி 9:1,11). இதன் பொருள் என்ன? பரிசுத்தவான்களும் தேவையில்



இருக்கமுடியும். அவர்களுக்கும் உணவு, உடை, உறைவிடம் இல்லாத நிலை இருக்கமுடியும். அது அவர்களது விசுவாசக்குறைவு அல்ல. ''பிரயாசத்திலும், வருத்தத்திலும், அநேகமுறை கண்விழிப்புகளிலும், பசியிலும், தாகத்திலும், அநேக முறை உபவாசங்களிலும், குளிரிலும், நிர்வாணத்திலும் இருந்தேன்'' என்றார் பவுல் (2 கொரி 11:27). வெற்றிகரமான ஊழியக்காரனாகிய பவுல் அப்போஸ்தலன் ஆகாரமின்றிப் பசியும் தாகமும் அனுபவித்தார்; ஆடையின்றிக் குளிரிலும் நிர்வாணத்திலும் இருந்தார். ஆம், பரிசுத்தமான ஊழியக்காரரும் கொடிய தரித்திரத்தைக் கடந்துபோகச் சாத்தியமுண்டு. அதற்காக அவர்கள் விசுவாசமற்ற ஊழியர்கள் என்று குற்றஞ்சாட்டலாகாது.

மேலை நாடுகளிலிருந்து இந்தியாவுக்கு இறக்குமதியாகியுள்ள ''சுகபோக வாழ்வு'' உபதேசத்தைக் குறித்து (Prosperity Doctrine) எச்சரிக்கையாயிருங்கள். 'விசுவாசத்தோடு பேசினால் அற்புதம் நிகழும், நீங்கள் கேட்கிற எல்லா பொருட்களும் வீட்டிற்குள் வந்துவிடும்' என்பார்கள். இந்த உபதேசத்தின்படி விசுவாசிகளுக்குப் பாடுகளேயில்லை; துன்பங்களேயில்லை; கொடுக்க வேண்டியதுமில்லை; இழக்கவேண்டியதுமில்லை; பெற்றுக் கொண்டேயிருக்க வேண்டியதுதான். ஆனால் விசுவாச வீரர் பட்டியலடங்கிய எபிரெயர் 11ஆம் அத்தியாயம் விசுவாசத்தினாலே 'பெற்றார்கள்' என்று மட்டும் சொல்லாமல் விசுவாசத்தினாலே 'விட்டார்கள்' என்றும் சொல்லுகிறது. நன்கு கவனியுங்கள்—

''விசுவாசத்தினாலே ஆபேல்... செலுத்தினான்''

''விசுவாசத்தினாலே ஆபிரகாம்... புறப்பட்டுப் போனான்''

''பூமியின்மேல் தங்களை அந்நியரும் பரதேசிகளும் என்று அறிக்கையிட்டு விசுவாசத்தோடே மரித்தார்கள்''

“விசுவாசத்தினாலே ஆபிரகாம்... ஒப்புக்கொடுத்தான்”

“விசுவாசத்தினாலே மோசே... எகிப்தைவிட்டுப் போனான்”

“விசுவாசத்தினாலே... சிதறுண்டு அலைந்தார்கள்”

விசுவாச வீரர்கள் விட்டார்கள், கொடுத்தார்கள், அந்நியரும் பரதேசிகளுமானார்கள்!

எனவே வளவாழ்வு உபதேசத்தையே பிரதானமாகப் பரப்பும் பத்திரிகைகளை வாசித்து நேரத்தை வீணாக்கி ஏமாந்துபோகவேண்டாம். பொதுவாக இப்படிப்பட்ட ஊழியர் கோடிக்கணக்கான ரூபாய்களுக்கான திட்டங்களைத் தீட்டி, ஜெபித்தாலும், பிரசங்கித்தாலும், எதைச் செய்தாலும் இறுதியில் சுற்றி வளைத்து தங்கள் திட்டதில் வந்து சேரும்படி செய்வார்கள். ரோமன் கத்தோலிக்கர் ஆலயம் கட்டப் பணம் சேகரிக்க பாவமன்னிப்புச் சீட்டு விற்றதுபோல இவர்களும் திட்டங்கள் தீட்டுவார்கள். இவ்வளவு தொகை அனுப்புகிறவர்களுக்காய்த் தினமும் ஜெபிப்போம், அல்லது அவர்கள் பெயரை முக்கியமான இடத்தில் பதித்து வைப்போம் என்றெல்லாம் விளம்பரம் செய்வார்கள். அப்படியானால் இரண்டு காசு போடும் விதவைகளுக்காய் ஜெபிப்பது யாரோ ? அமெரிக்காவில் இவ்வித வியாபாரம் ஏராளம். பத்திரிகைகளிலும் தொலைக்காட்சியிலும் இதே தொழில்தான். பார்த்துச் சலித்துவிட்டது. நம் தாய் நாடாகிய இந்தியாவில் ஏறத்தாழ 40 சதவீத மக்களுக்கு தினமும் ஒரு முழு உணவு கூட கிடையாது. நமது வாழ்க்கையை அவர்களுக்காகவே ஊற்றுவோம்; அவர்களோடே கலந்துவிடுவோம். சொகுசு உபதேசங்கள் இந்தியாவுக்குள் நுழையாதபடி தடுப்போம்.

ஆதித் திருச்சபையிலேயே இந்தப் பிரச்னை இருந்தது. பொன் மோதிரமும் பகட்டான ஆடைகளும் உடுத்



தியிருக்கிறவர்களுக்கு உட்காருவதற்கு நல்ல இடம் கிடைக்கும். ஆனால் கிழிந்த உடை அணிந்திருக்கிறவர்கள் தள்ளி நிற்கவேண்டும்; அல்லது கீழே உட்காரவேண்டும். இதைக் குறித்த யாக்கோபின் சவாலைக் கேளுங்கள்: “என் பிரியமான சகோதரரே, கேளுங்கள்; தேவன் இவ்வுலகத்தின் தரித்திரரை விசுவாசத்தில் செல்வந்தர்களாகவும், தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு தாம் வாக்குத்தத்தம் பண்ணின அரசைச் சுதந்தரிக்கிறவர்களாகவும் தெரிந்துகொள்ளவில்லையா ?” (யாக் 2:5). உலகத்தில் தரித்திரர், ஆனால் விசுவாசத்தில் செல்வந்தர்! அல்லேலூயா! மகிமையுள்ள நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தைப் பட்சபாதத்தோடே பற்றிக்கொள்ளாதிருப்போம்! இயேசு இவ்வுலகில் பணக்காரரோடே சுற்றவில்லை. வாழ்ந்தபோது தரித்திரரோடே; மரித்தபோது செல்வந்தனோடே!

அப்படியே பொருளாசையானது விசுவாசத்திற்குப் பரம எதிரி என்பதையும் நினைவிற்கொள்ளுங்கள். இரண்டும் ஒரே உள்ளத்தில் இருக்கமுடியாது. “**பண ஆசை** எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது; சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தைவிட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக்குத்திக்கொண்டிருக்கிறார்கள். நீயோ தேவனுடைய மனிதனே, இவைகளை விட்டோடி... **விசுவாசத்தை...** அடையும்படி நாடு” (1 தீமோ 6:10,11).

*பகுதி 2 அத்தியாயம் 5*

# விசுவாசத்தைப் பகிர்ந்துகொள்ளுதல்

இ**யேசு** நின்று, சத்தமிட்டு: ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம்பண்ணக்கடவன். வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் **விசுவாசமாயிருக்கிறவன்** எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத் தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார்'' (யோ 7:37,38).

நம்மிலுள்ள விசுவாசத்தை நாம் பகிர்ந்துகொள்ளும்படியாய் தேவன் விரும்புகிறார். அவ்வாறு பகிர்ந்துகொள்ளுதல் நமது விசுவாசத்தையும் வர்த்திக்கப்பண்ணும். ''எவன் தண்ணீர் பாய்ச்சுகிறானோ அவனுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படும்'' (நீதி 11:25).

தங்கள் விசுவாசத்தைப் பகிர்ந்துகொண்ட சில நபர்களை வேதத்தில் பார்ப்போம்.

**அ) பர்னபா**

''அவன் நல்லவனும், பரிசுத்த ஆவியினாலும் *விசுவாசத்தினாலும்* நிறைந்தவனுமாயிருந்தான்; அநேக



மக்கள் கர்த்தரிடமாய்ச் சேர்க்கப்பட்டார்கள்'' (அப் 11:24). விசுவாசத்தில் வல்லவனாகிய பர்னபா தன் விசுவாசத்தைப் பகிர்ந்துகொண்டதின்மூலம் கணக்கற்ற மக்கள் விசுவாசத்தைப் பெற்றவர்களாய் தேவனுடைய சபையில் இணைய முடிந்தது. உங்கள் சபையில் புதிய ஆன்மாக்கள் சேரவில்லையா ? நீங்கள் விசுவாசத்தை இன்னும் பகிர்ந்துகொள்ளாததே காரணமாயிருக்கலாம்.

**ஆ) பவுல்**

''சகோதரரே, நான் உங்களிடத்தில் வந்தபோது, தேவனைப் பற்றிய சாட்சியைச் சிறந்த வசனிப்போடாவது ஞானத்தோடாவது அறிவிக்கிறவனாக வரவில்லை. இயேசு கிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன். அல்லாமலும் நான் பலவீனத்தோடும் பயத்தோடும் மிகுந்த நடுக்கத்தோடும் உங்களிடத்தில் இருந்தேன். உங்கள் *விசுவாசம்* மனிதருடைய ஞானத்திலல்ல, தேவனுடைய பலத்தில் நிற்கும்படிக்கு, என் பேச்சும் என் பிரசங்கமும் மனித ஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல், ஆவியினாலும் பலத்தினாலும் உறுதிப்படுத்தப்பட்டதாயிருந்தது'' (1 கொரி 2:1−5). ஆம், விசுவாசத்தைப் பகிர்ந்துகொள்ள பேச்சுத்திறன் அவசியமில்லை. தெளிவாக எளிய நடையில் சொன்னால் போதும். அதிகம் படித்தவனாயிருந்தாலும் பவுல் தனது ஞானத்திலும் சாதுரியத்திலும் ஒரு நாளும் நம்பிக்கை வைக்கவில்லை. வசனத்தின் வல்லமையையே அவன் எப்பொழுதும் விசுவாசித்தான். அதுவே அவனது வெற்றிநிறை ஊழியத்தின் இரகசியமாகும். பவுலும் பர்னபாவும் இணைந்து தங்கள் விசுவாசத்தை மற்றவர்களுடன் பகிர்ந்துகொண்டபோது புறவினத்தாருக்கு விசுவாசக் கதவு திறக்கப்பட்டது என்று காண்கிறோம். ''அவர்கள் அங்கே சேர்ந்தபொழுது

சபையைக் கூடிவரச் செய்து, தேவன் தங்களைக் கொண்டு செய்தவைகளையும், அவர் புறவினத்தாருக்கு *விசுவாசத்தின்* கதவைத் திறந்ததையும் அறிவித்தார்கள்'' (அப் 14:27).

## இ) நான்கு சிநேகிதர்

''அங்கே படுக்கையிலே கிடந்த திமிர்வாதக்காரனை அவரிடத்தில் கொண்டுவந்தார்கள். இயேசு அவர்களுடைய *விசுவாசத்தைக்* கண்டு, திமிர்வாதக்காரனை நோக்கி: மகனே திடன்கொள், உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது என்றார்'' (மத் 9:2). நான்கு பேர் தங்கள் விசுவாசத்தைத் திமிர்வாதக்காரன் ஒருவனோடு பகிர்ந்துகொண்டனர். அவர்கள் தங்கள் செயலில் அதைக் காட்டினர். இயேசு அவர்களது விசுவாசத்தைக் கண்டு மனம் நெகிழ்ந்தார்; அவர்கள் விசுவாசத்தில் இன்னும் வளர்ந்தேகும்படி, திமிர்வாதக்காரனைச் சுகமாக்கி அவர்கள் விசுவாசத்தைக் கனம்பண்ணினார்.

## ஈ) லோவிசாள், ஐனிக்கேயாள்

''அந்த *விசுவாசம்* முந்தி உன் பாட்டியாகிய லோவிசாளுக்குள்ளும் உன் தாயாகிய ஐனிக்கேயாளுக்குள்ளும் நிலைத்திருந்தது; அது உனக்குள்ளும் நிலைத்திருக்கிறதென்று நிச்சயித்திருக்கிறேன்'' (2 தீமோ 1:5). பெண்களை உற்சாகமூட்டும் வசனம் இது! வெளியே போய்ப் பிரசங்கிக்கமுடியாது என்பது அநேக பெண்களின் சாக்குப்போக்கு. வீட்டில்தானே விசுவாசத்தைப் பகிர்ந்துகொள்ள வழியிருக்கிறதே. லோவிசாளும், ஐனிக்கேயாளும் தங்கள் இல்லத்திலேயே விசுவாசத்தைப் பகிர்ந்ததால் விசுவாசத்தில் உத்தம குமாரனாகிய தீமோத்தேயு உருவானான். மேற்கண்ட வசனம் தீமோத்தேயுவின் தந்தையையும், தாத்தாவையும்பற்றிக் கூறாமல், தாயை



யும், பாட்டியையும் மட்டுமே குறிப்பிடுகின்றது! வீட்டிலிருக்கிற பிள்ளைகளுக்கு விசுவாசத்தைக் கடத்துகிற பொறுப்பு ஆண்களைவிடப் பெண்களுக்கே அதிகம் என்பதனை இது வலியுறுத்துகிறதன்றோ? அதுமட்டுமல்ல, ''உன் தாயாகிய ஐனிக்கேயாள்... உன் பாட்டியாகிய லோவிசாள்'' என்று அவர்களது பெயர்களும் கொடுக்கப்பட்டுள்ளன. யோபு என்ற பக்தனைப் பற்றி 42 அத்தியாயங்கள் எழுதிவிட்டு, அவனது மனைவியின் பெயரை மிகவும் கவனமாக எழுதாமல் விட்டிருக்கிறது வேதம்! ''லோத்தின் மனைவியை நினைத்துக்கொள்ளுங்கள்'' என்று சொன்ன வேதம், ஞாபகத்தில் வைக்கவேண்டிய அவளது பெயரைக்கூடச் சொல்லவில்லை! ஆனால் மிகச் சாதாரணமாக எழுதும் ஓரிடத்தில் தீமோத்தேயுவின் தாயாரின் பெயரும், பாட்டியின் பெயரும் அழகாக வரையப்பட்டுள்ளன. நாம் தேவன்பேரிலுள்ள விசுவாசத்தை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளும்போது அது தேவனைக் கனப்படுத்துகிறது; பகிர்ந்துகொள்ளும் நபரைத் தேவன் கனப்படுத்துகிறார்.

''கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்.'' ஏனென்றால், ''விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறபடி, விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதி விசுவாசத்திற்கென்று அந்தச் சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப்படுகிறது!'' (ரோ 1:16,17).

*பகுதி 3*

# விசுவாச வாழ்வின் முடிவு

"**வருகிறவர்** இன்னும் கொஞ்சக் காலத்தில் வருவார், தாமதம் பண்ணார். விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான், பின்வாங்கிப் போவானானால் அவன்மேல் என் ஆத்துமா பிரியமாயிராது'' (எபி 10:37,38).

நமது விசுவாசத்துக்கு தேவன் வழங்கும் ஊக்கப்பரிசு இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையே. நாம் விசுவாச வாழ்வைத் தியானிக்க ஆபகூக் 2:4இல் துவங்கினோம். அதற்கு முந்திய வசனத்தில் இவ்விதம் வாசிக்கிறோம்: "அது தாமதித்தாலும் அதற்குக் காத்திரு; அது நிச்சயமாய் வரும், அது தாமதிப்பதில்லை.'' இதைத்தான் எபிரெயர் நிருப ஆக்கியோன், "வருகிறவர் இன்னும் கொஞ்சக் காலத்தில் வருவார், தாமதம் பண்ணார்'' என்கிறான். ஆபகூக்கில் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனமும் எபிரெயர் நிருபத்தில் கூறப்பட்டுள்ள எதிர்பார்ப்பும் எவ்வளவு அழகாக இணைந்து செல்லுகின்றன என்று பாருங்கள்! இயேசு கிறிஸ்து நம் விசுவாசத்தைத் துவக்குகிறவர் மட்டுமல்ல, அதை முடிக்கிறவருமாயிருக்கிறார். "ஒரு காரியத்தின் துவக்கத்தைவிட அதன் முடிவு



நல்லது'' (பிர 7:8). ஆம், விசுவாச வாழ்வின் துவக்கத்தைவிட அதின் முடிவு பன்மடங்கு முக்கியமானது.

எபிரெயர் 11ஆம் அத்தியாயத்தில் விசுவாச வீரரின் நீண்ட பட்டியல் தரப்பட்ட காரணத்தை எபி 12:1இலிருந்து அறியலாம். "ஆகையால், மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கென்று வைக்கப்பட்டுள்ள ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்.'' விசுவாச வாழ்வு ஓட்டப்பந்தயத்திற்கு ஒப்பிடப்பட்டுள்ளது. பந்தயத்திலே ஓடுகிறவர்களும் உண்டு; அதைப் பார்த்துக்கொண்டிருக்கிறவர்களும் உண்டு. மேகம் போன்ற திரளான சாட்சிகளாகிய விசுவாச வீரர் நம்மைப் பார்த்துக்கொண்டேயிருக்கிறார்கள் என்று அறிகிறோம். இது ஒரு தொடர் ஓட்டப் பந்தயம் (Relay Race) போன்றது. ஒவ்வொருவரும் தன்னுடைய பாகத்திற்குரிய ஓட்டத்தை ஓடி முடித்துவிட்டு தன் கையிலிருக்கிற கட்டையை (baton) அடுத்து ஓடுகிறவன் கையில் கொடுக்கவேண்டும். முன்னோடிகளாய்த் திகழும் விசுவாச வீரர் ஒவ்வொருவரும் தங்களுடைய பங்கை மிகச் சிறப்பாக ஓடி முடித்து அடுத்தவருடைய கையிலே கொடுத்தார்கள். இறுதியிலே கிறிஸ்துவின் சபையாகிய நமது கையிலே ஒப்படைத்திருக்கிறார்கள். சபையானது தொடர் ஓட்டத்தின் இறுதிப்பகுதியில் ஓடுகிறது. ஓடுகிற நமக்கும் பரவசம்; எவ்விதமாய் முடிக்கப்போகிறோம் என ஆவலுடன் பார்த்துக்கொண்டிருக்கும் விசுவாச வீரருக்கும் அதைவிட அதிகப் பரவசம்.

நாம் பரலோகக் குடிகள் (பிலி 3:20). ஒலிம்பிக் பந்தயத்திலே கலந்துகொள்ள இந்தியர் வெளிநாடு போவது போல பரலோகக் குடிகளாகிய நாம் இந்தப் பூவுலகில்

நடக்கும் ஓட்டத்தில் கலந்துகொள்ளுகிறோம். சிலர் ஓட்டத்தை முடித்து ஏற்கனவே தாயகம் (பரலோகம்!) திரும்பிவிட்டார்கள். அவர்களும் நம்முடைய ஓட்டத்தைக் காண ஆசையாயிருக்கிறார்கள். தொலைக்காட்சிப் பெட்டியில் கால்பந்தாட்டப் போட்டியைப் பார்த்துக்கொண் டிருக்கும்போது, நமது நாட்டவர் அடிக்கும் பந்து கோல் பக்கமாய்ச் செல்லும்போது, நம்மையும் அறியாமல் பரவசத்துடன் எழுந்து சத்தமிடுகிறோம். அப்படியே தனது ஓட்டத்தை நேர்த்தியாய் முடித்த நமது முற்பிதாவாகிய ஆபிரகாம் அவரது பெரும் பேரப்பிள்ளைகளாகிய நாம் கடைசி ஓட்டத்தில் ஓடுவதைப் பார்த்துப் பரவசமடை கிறார்; அவருடன் ஏனைய விசுவாச வீரரும் பரவச மடைந்து, ‘‘ஓடுங்கள், விடாதேயுங்கள்’’ என்று நம்மை உற்சாகப்படுத்துகின்றனர் என நாம் கற்பனை செய்வது தவறல்ல. நாம் சரியாக ஓடி முடிக்காவிட்டால் அவர்கள் முயற்சியெல்லாம் வீணாய்ப்போய்விடுமே! என்னே நம் பொறுப்பு!

ஓட்டத்தைச் சரியாக ஓடிமுடிக்க சில நடைமுறைப் படிப்பினைகளை இச்செய்தியில் பார்ப்போம். 100 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் கலந்துகொள்பவர்களைப் பயிற்றுவிப் பவர்கள் துவங்குதல், ஓடுதல், முடித்தல் ஆகிய மூன்று பாடங்களையும் கற்றுக்கொடுப்பார்கள். ஓட்டத்தைத் துவங்கும் பயிற்சி அதிக நேரம் எடுக்கும். தரையில் அப்படியே உட்கார்ந்துவிடக்கூடாது. குதிங்காலில் உட் கார்ந்து முன்னங்காலில் எழுந்து, ‘போ’ என்றதும் ஓட வேண்டும். துவங்கியதும் வேதத்தை அதிகரிக்கவேண் டும். முடிவின் ஓரத்துக்கு வந்துவிட்டால் வேகத்தை இன்னும் அதிகப்படுத்தவேண்டும். கூடுதலாக சுவாசிக்க வேண்டியதிருக்கும். அங்குமிங்கும் வேடிக்கைப்பார்க்க முடியாது. பந்தயத்தின் முடிவுக்கு வந்துகொண்டிருக் கிறவர்களின் முகம் வியர்த்துக் கொட்டும், இரத்தம்



வடிவதைப் போன்றிருக்கும். அப்படியே விசுவாச வாழ் வைச் சரியாய் முடிக்க நாம் கற்றுக்கொள்ளவேண்டிய கடினமான பாடங்கள் மூன்று உண்டு.

1. பாடுகள் (Sufferings)
2. சந்தேகங்களும், இருளும் (Doubts & Darkness)
3. உபத்திரவங்களும், எதிர்ப்புகளும் (Persecutions & Oppositions)

***பகுதி 3 அத்தியாயம் 1***

# பாடுகள்

**நாம்** அநேக உபத்திரவங்களின் வழியாய் இறையரசில் நுழையவேண்டும்'' (அப் 14:22).

இறையரசின் நுழைவாயிலே பாடுகள்தான். இயேசு தாங்கின துன்பங்கள் நம்மைத் தாண்டிச் செல்வதில்லை. பாடுகளிலிருந்து ஒருவரும் தப்பமுடியாது. இயேசுவின் பாடுகளில் ஒரு பங்கையாவது நாம் ஒவ்வொருவரும் அனுபவித்தே தீருவோம். உடலில் பாடுகள்! மனதில், சிந்தையில் பாடுகள்! நம்மில் சிலருக்குச் சுவிசேஷத்தை அறிவித்தவர்கள், ''கிறிஸ்தவ வாழ்க்கையானது துக்க மற்றதாய், வெற்றி மட்டுமே நிறைந்ததாய் இருக்கும்'' என்று தவறாய்ப் போதித்துள்ளதால் பாடுகள் நம் கத வைத் தட்டும்போது நாம் பிரமித்துவிடுகிறோம்.

நமக்குப் பிரச்னைகள், கவலைகள் உண்டு என்பதால் தான் பேதுரு இவ்விதம் எழுதினான்: ''அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல் லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள். தெளிந்த புத்தியுள்ள வர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்



போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான். **விசுவாசத்தில்** உறுதியாயிருந்து, அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள்; உலகத்திலுள்ள உங்கள் சகோதரரிடத்திலே அப்படிப்பட்ட பாடுகள் நிறைவேறி வருகிறதென்று அறிந்திருக்கிறீர்களே'' (1 பேது 5:7−9). உலகிலுள்ள தேவப் பிள்ளைகள் எல்லாரிடமும் பாடுகள் நிறைவேறிவருகின்றன என்பதை நினைத்து, நமது பாடு களின்போது ஆறுதலடைந்து, விசுவாசத்தில் நிலைத் திருப்போம்.

''மண்ணுலகுக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு அழிந்துபோனாலும், தேவனால் கட்டப்பட்ட கைவேலை யல்லாத நித்திய வீடு பரலோகத்திலே நமக்கு உண்டென்று அறிந்திருக்கிறோம். நாம் தரிசித்து நடவாமல், **விசு வாசித்து** நடக்கிறோம். இந்த உடலில் குடியிருக்கையில் கர்த்தரிடத்தில் குடியிராதவர்களாயிருக்கிறோமென்று அறிந்தும், எப்பொழுதும் தைரியமாயிருக்கிறோம்'' (2 கொரி 5:1,6,7). இங்கே பவுல் நமது உடலைக் குறித்துச் சொல்லுகிறான். நமது உடலை அழித்துப்போடும்படி சக்தி கள் நமது உடலுக்கு விரோதமாய் இருந்துகொண்டே யிருக்கும். நாம் அழிக்கப்படுவதில்லை என்று சொல்லா மல், அழிக்கப்படும்போது தேவனால் கட்டப்பட்ட வீட்டைப் பெறுவோம் என்றான் பவுல்.

கல்வாரிச் சிலுவையிலே கிறிஸ்து நமது பாவங் களுக்காக மரித்தபோது நம்முடைய வியாதிகளையும் தமது உடலில் சுமந்தார் என்பது உண்மை. ஆனால் பலவீனங்கள், வியாதிகள் வழியாய்ப் பரிசுத்தவான்கள் போவதில்லை என்பது உண்மையல்ல. வேதபுத்தகத் திலிருந்து மட்டுமல்ல, தேவனால் தெரிந்துகொள்ளப் பட்ட அநேக சிறந்த பரிசுத்தவான்களுடைய வாழ்க்கை யிலிருந்தும் இதை நாம் அறிந்துகொள்கிறோம். வியாதி நம்மை அணுகும்போது மகிழ்ச்சியாய் ஏற்றுக்கொண்டு

அதற்கு மாலை போடவேண்டும் என்பது பொருளல்ல. பொதுவாக ஜெபத்தின் மூலம் சுகம் பெறும்படியாய் எதிர் பார்க்கலாம். ஆனால் சில வேளைகளில் தீமோத்தேயு வின்மேல் கைகளை வைத்து ஜெபித்தும் குணமாக்க முடியாதவனாக, பவுல், "உன் வயிற்றிற்காகவும், உனக்கு அடிக்கடி நேரிடுகிற பலவீனங்களுக்காகவும் கொஞ்சம் திராட்சரசமும் கூட்டிக்கொள்" என்று ஒரு மருந்தையும் சொல்ல நேரிடலாம். சுகமாவதற்கு நாம் எல்லாவற்றையும் செய்யவேண்டும். ஆனால் முதலாவது ஜெபம், அதுதான் முக்கியம். நமது பரலோகப் பிதா, அவரது பிள்ளைகளாகிய நாம் ஆரோக்கியத்தோடும், சுகத்தோடும் இருப்பதையே விரும்புகிறார். ஆனால் நாம் விளக்கமுடியாத, விளங்கிக் கொள்ளமுடியாத காரணங்களுக்காகச் சிலவேளைகளில் தேவன் நம்மை வியாதி, பலவீனங்கள் வழியாகப் போக அனுமதிக்கிறார். ஏமி கார்மைக்கேல் அம்மையார் (1861−1951) ஓர் சிறந்த பரிசுத்தவாட்டி. பல ஆண்டுகள் வியாதி யோடும், பலவீனத்தோடும் படுக்கையிலே செலவழித் தார்கள்; வேதனையின் பள்ளத்தாக்கை ஊடுருவிச் சென்றார்கள். அப்படிப்பட்ட இருள் சூழ்ந்த நெருக்கமான சூழ்நிலையின்போதுதான் அநேகரை ஆறுதல்படுத்தக் கூடிய மிகச் சிறந்த பாடல்களையும், ஆழ்ந்த கருத்து நிறைந்த செய்திகளையும் எழுதியுள்ளார்கள். சோதனை கள், உபத்திரவங்கள் நடுவிலே கர்த்தருடைய கிருபையை அபரிமிதமாகப் பெற்று, தங்கள் பாடுகள் மூலம் கர்த்த ருடைய நாமத்தை மகிமைப்படுத்திய பரிசுத்தவான் களைக் குறித்த ஆயிரக்கணக்கான சாட்சிகளை நாம் சொல்லமுடியும். தேவப் பிள்ளைகள் பலர் தங்கள் உடலி லிருந்து முள் நீங்கும்படியாய் அவரை நோக்கி ஒருமுறை, இருமுறை மட்டுமல்ல, மும்முறை ஜெபித்தும், அவர்களது முள்ளை நீக்குவதைவிட, முடிவில் அவர்கள் கிரீடத்தைப் பெற்றுக்கொள்ளும்படியாய்ச் சிலுவைப் பாடுகளைச் சகிப்பதற்குப் போதுமான தமது கிருபையை அவர்களுக்கு அளிப்பதையே கடவுள் விரும்பினார்.



சங்கீதக்காரன் தாவீதும் தன் வாழ்க்கையிலே இப்படிப்பட்ட பாடுகள் வழியாகச் சென்றான். அவன் கூறுவதைக் கவனியுங்கள்: "என் பகைஞரெல்லாரும் என்மேல் ஏகமாய் முணுமுணுத்து, எனக்கு விரோதமா யிருந்து, எனக்குப் பொல்லாங்கு நினைத்து, தீராவியாதி அவனைப் பிடித்துக்கொண்டது; படுக்கையில் கிடக்கிற அவன் இனி எழுந்திருப்பதில்லை என்கிறார்கள். என் பிராண சிநேகிதனும், நான் நம்பினவனும், என் அப்பம் புசித்தவனுமாகிய மனிதனும், என்மேல் தன் குதிகாலைத் தூக்கினான்" (சங் 41:7−9). "உயிர்த்" தோழனே சந்தே கித்து எதிர்க்கத் துவங்கிவிட்டால் யாரைத்தான் நம்ப முடியும்? யாரையெல்லாம் நம்பக்கூடாது என்று வேதம் தரும் பட்டியல் இதோ—

r வசதிகளையும் சாதனங்களையும் நம்பக்கூடாது. "சிலர் இரதங்களைக் குறித்தும், சிலர் குதிரைகளைக் குறித்தும் மேன்மைபாராட்டுகிறார்கள்; நாங்களோ எங் கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைக் குறித்தே மேன்மைபாராட்டுகிறோம்" (சங் 20:7). "இரட்சிக்கிற தற்குக் குதிரை விருதா; அது தன் மிகுந்த வீரியத்தால் தப்புவியாது" (சங் 33:17).

r பாதுகாவலர்களை நம்பக்கூடாது. "என் வில்லை நான் நம்பேன், என் பட்டயம் என்னை இரட்சிப்பதில்லை. நீரே எங்கள் சத்துருக்களினின்று எங்களை இரட்சித்து எங்களைப் பகைக்கிறவர்களை வெட்கப்படுத்துகிறீர்" (சங் 44:6,7).

r மனிதரையும், பிரபுக்களையும் நம்பக்கூடாது. நாம் நன்றாயிருக்கும்போது அவர்களும் நம்முடன் நன்றாயிருப் பார்கள். நமக்கு இன்னல் நேரிடும்போது அவர்களுடைய நிறமும் மாறிவிடும். எனவேதான் தாவீது சொல்கிறான்: "மனிதனை நம்புவதைவிட, கர்த்தர்மீது பற்றுதலாயிருப்

பது நலம். பிரபுக்களை நம்புவதைவிட, கர்த்தர்மீது பற்று தலாயிருப்பதே நலம்'' (சங் 118:8,9).

r சிநேகிதரையும், உறவினரையும் நம்பக்கூடாது. அவர்கள் உண்மையற்றவர்களாய் மாறுவார்கள் என்பதல்ல. அவர்களது உதவிக்கு ஓர் எல்லை உண்டு. கணவனும் உதவி செய்யமுடியாமல், தானே அனுபவிக்க வேண்டிய பாடுகள் எவ்வளவு உண்டு என்பது ஒரு மனைவிக்குத் தெரியுமல்லவா? மனைவி தன் கணவனை எவ்வளவு தான் நேசித்தாலும் அவள் அவனுக்கு உதவி செய்யமுடியாமல் அவன் கடந்துபோகவேண்டிய பிரச்னைகள் பல உண்டல்லவா? ஆகவே மனைவியோ, கணவனோ, யாரானாலும் தேவனுக்கு அடுத்தபடிதான் என்பதை மறந்துபோகக்கூடாது. "சிநேகிதனை விசுவாசிக்க வேண்டாம், வழிகாட்டியை நம்பவேண்டாம்; உன் மடியிலே படுத்துக்கொள்கிறவளுக்கு முன்பாக உன் வாயைத் திறவாமல் எச்சரிக்கையாயிரு. மகன் தன் தகப்பனைக் கனவீனப்படுத்துகிறான்; மகள் தன் தாய்க்கு விரோதமாகவும், மருமகள் தன் மாமிக்கு விரோதமாகவும் எழும்புகிறார்கள்; மனிதனுடைய சத்துருக்கள் அவர் வீட்டார் தானே. நானோ கர்த்தரை நோக்கிக்கொண்டு, என் இரட்சிப்பின் தேவனுக்குள் காத்திருப்பேன்; என் தேவன் என்னைக் கேட்டருளுவார்'' (மீகா 7:5−7).

r நம்மைக்கூட நம்பக்கூடாது. 'இரதங்களும் குதிரைகளும், வில்லும் அம்பும் இரட்சிக்கவில்லை; சிநேகிதனால் உதவிசெய்ய முடியவில்லை; உற்றார் உறவினர் கைவிட்டனர்; மனைவி அல்லது கணவன்கூடப் புரிந்துகொள்ள முடியவில்லை. இனி நான் என்னுடைய காலில்தானே நிற்கவேண்டியதுதானா?' என்று அங்கலாய்த்தால் அதையும் தேவன் அனுமதிக்கமாட்டார்! நம்முடைய வாழ்க்கையிலே நாம் சார்ந்து நிற்கிற எல்லாவற்றையும் ஆண்டவர் நீக்கிப்போட்டு முடிவிலே நம்மை நாமே நம்பமுடியாத



நிலைக்குக் கொண்டுவருவார். அப்போஸ்தலனாகிய பவுலின் வாழ்க்கையிலே அப்படிப்பட்ட நிலை வந்தது. இதோ அவனது சாட்சி: "சகோதரரே, ஆசியாவில் எங்களுக்கு நேரிட்ட உபத்திரவத்தை நீங்கள் அறியாதிருக்க எங்களுக்கு மனதில்லை. என்னவெனில், பிழைப்போம் என்கிற நம்பிக்கை அற்றுப்போகத்தக்கதாக, எங்கள் பலத்திற்கு மிஞ்சின அதிக பாரமான வருத்தம் எங்களுக்கு உண்டாயிற்று. நாங்கள் எங்கள்மேல் நம்பிக்கையாயிராமல், மரித்தோரை எழுப்புகிற தேவன்மேல் நம்பிக்கையாயிருக்கத்தக்கதாக, மரணம் வருமென்று நாங்கள் எங்களுக்குள்ளே நிச்சயித்திருந்தோம்'' (2 கொரி 1:8,9).

நாம் நம்பவேண்டியது, நம்பக்கூடியது தேவன் ஒருவரே. "எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன். வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும்'' (சங் 121:1,2).

*என் நேசர் இயேசுவின்மேல் சார்ந்தே,*
*துன்ப வனாந்திரத்தில் நடந்திட*
*இன்ப நல் வாழ்வடைந்தேன்!*

தேவன் தமது பிள்ளைகளின் வாழ்க்கையிலே பாடுகளை அனுமதிப்பது ஏன் என்று பேதுரு தனது முதலாம் நிருபத்திலே குறிப்பிடுவதைக் காண்கிறோம். கோதுமையைப்போல் சுளகினால் புடைக்கப்பட்ட பேதுருவுக்குப் பாடுகளைக் குறித்த நல்ல அனுபவம் உண்டு; அவனது வார்த்தைகள் நடைமுறையானவை: "கடைசிக் காலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற இரட்சிப்புக்கு ஏதுவாக **விசுவாசத்தைக்** கொண்டு தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு அந்தச் சுதந்தரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. இதிலே நீங்கள் மிகவும் சந்தோஷப்படுகிறீர்கள்; ஆனாலும்,

துன்பப்படவேண்டியது அவசியமானதால், இப்பொழுது கொஞ்சக்காலம் பலவிதமான சோதனைகளினாலே துக்கப்படுகிறீர்கள். அழிந்துபோகிற பொன் அக்கினி யினாலே சோதிக்கப்படும்; அதைவிட அதிக விலை மதிப்புள்ள உங்கள் **விசுவாசம்** சோதிக்கப்பட்டு, இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும். அவரை நீங்கள் காணாமலிருந்தும் அவரிடத்தில் அன்புகூருகிறீர் கள்; இப்பொழுது அவரைக் காணாமலிருந்தும் அவரி டத்தில் **விசுவாசம்** வைத்து, சொல்லிமுடியாததும் மகிமை யால் நிறைந்ததுமாயிருக்கிற சந்தோஷமுள்ளவர்களாய்க் களிகூர்ந்து, உங்கள் விசுவாசத்தின் விளைவாகிய ஆத்தும இரட்சிப்பை அடைகிறீர்கள்'' (1 பேது 1:5-9).

நாம் தண்ணீர்களைக் கடக்கும் போது ஆண்டவர் நம்முடன் இருக்கிறார்; ஆறுகளை நாம் கடக்கும்போது அவைகள் நம்மேல் புரளாதபடி காத்துக்கொள்வார்; அக்கினியில் நடக்கும்போதும் நாம் வேகாதபடி நம்மை மூடிக்கொள்வார். ஒரு வேளை இமைப்பொழுது அவர் தமது முகத்தை நமக்கு மறைக்கலாம்; ''என் தேவனே, நான் கதறிச் சொல்லும் வார்த்தையை ஏன் கேளாம லிருக்கிறீர்'' என்று நாம் கூக்குரலிட்டாலும் அவர் தமது அன்பினிமித்தம் அமைதியாயிருக்கலாம்; அவரைக் காணாவிட்டாலும், அவரது ''அன்பை'' விட்டு நீங்காமல் அவரில் நிலைத்திருப்போம்.

அப்போஸ்தலன் யாக்கோபு கூறுவதுபோல் பாடு களின் நடுவில் நாம் நீடிய பொறுமையைக் காத்துக் கொள்ளவேண்டும். ''என் சகோதரரே, நீங்கள் பலவித மான சோதனைகளில் அகப்படும்பொழுது, நீங்கள் ஒன் றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும் நிறை வுள்ளவர்களாயும் இருக்கும்படி, பொறுமையானது பூரணமாய்ச் செயல்படட்டும்'' (யாக் 1:2,4). கண்ணீரின்



பள்ளத்தாக்கிலே நடந்தபோது நீடிய பொறுமையைக் கடைப்பிடித்து, நமக்கு முன்மாதிரியாகத் திகழுவது பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான் யோபு. பாடுகள் நடு விலே பக்தன் யோபுவை நினைத்துக்கொள்ளுவோம். அவன் சொன்னதென்ன ? ''அவர் என்னைக் கொன்று போட்டாலும் அவர்மேல் **நம்பிக்கையாய்** இருப்பேன்'' (யோபு 13:15). 'நான் அவர் கரத்திலிருக்கிறேன்; என் வாழ்க்கையிலே அவர் என்ன வேண்டுமானாலும் செய் யட்டும்; அவர் என்னைக் கொன்றுபோட்டாலும் அவர் மடியில் கிடப்பேன்' என்று நாமும் சொல்லுவோம்.

எவ்வளவுதான் துன்பத்தில் துவண்டாலும், வியாதியில் உழன்றாலும் நாம் காலத்துக்கு முன்னே சாகமாட்டோம் என அறிவது அவசியம். செல்வின் க்யூஸ் என்ற ஊழியன் விசுவாசிகளுக்கு அளித்த ஒரு செய்தியில் பின்வருமாறு கூறுகின்றார்: ''அருமையான விசுவாசியே, காலத்துக்கு முன்னே நீ சாவதில்லை. உன் வாழ்க்கையில் என்ன வேண்டுமானாலும் வரட்டும். உன்னைப் பரம வீட்டுக்கு அழைப்பது எப்போது என்று தேவனுக்குத் தெரியும். அந்த வேளைவரை நீ சாவதேயில்லை. நீ மரித்தால் அதுதான் உன்னை வீட்டிற்கு அழைக்க தேவன் குறித்த காலம் என்று அறிந்துகொள்ளலாம்.'' எவ்வளவு உற்சாகமூட்டும் வார்த்தைகள் ! இந்தச் சத்தியத்தைப் பசுமரத்தாணி போல் இதயத்தில் பதித்துக்கொள்ளுவோம். அப்போஸ் தலனாகிய பவுல் ரோமாபுரிக்குப் பயணம் செய்தபோது கடும் புயல்காற்றில் கப்பல் சிக்கிக்கொண்டது. வாழ்க்கை முடியப்போகிறது என எண்ணி எல்லாரும் பீதியடைந்து கலங்கித் தவித்தனர். ஆனால் புயலின் நடுவிலே பவு லின் முகத்திலோ அமைதி, சமாதானம் நிலவியது. ''எனக்குச் சொல்லப்பட்டபடியே நடக்கும் என்று தேவ னிடத்தில் **நம்பிக்கையாய்** இருக்கிறேன்'' என்றான் அவன் (அப் 27:25). தேவன் குறித்த நேரத்திற்கு முன்னே தான் மரிப்பதில்லை என்ற நம்பிக்கை அவனுக்கிருந்தது.

பிரியமானவர்களே, ஓட்டத்தின் முடிவுக்கு வரவர நமக்குப் பாடுகள் அதிகமாகலாம். ஆனால் அவை மகிமைக்கு நுழைவாயில்தான். பாடுகளைச் சகித்த இயேசு பாடுகளில் உதவிசெய்ய நம்மோடு இருக்கிறார். விசுவாசத்தில் தளரவேண்டாம். அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமாக நித்திய கனமகிமையை உண்டாக்குமல்லவா ? எனவே பாடுகளைப் பாக்கியம் என்று எண்ணுவோம்; முட்களுக்குள் இருக்கும் மலராய்த் திகழ்வோம்; யோபுடன் சேர்ந்து, “அவர் என்னைச் சோதித்தபின் நான் பொன்னாக விளங்குவேன்” என்று சொல்லுவோம் ! “அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்” (2 தீமோ 2:12).



*பகுதி 3 அத்தியாயம் 2*

# சந்தேகங்கள், இருளான வேளைகள்

**ஒவ்வொரு** கிறிஸ்தவனின் வாழ்க்கையிலும் விளக்க முடியாத தளர்வுகள் ஏற்படும் நேரங்கள் வருகின்றன. டாக்டர் மார்ட்டின் லாய்டு ஜோன்ஸ் எழுதிய *Spiritual Depression* என்ற புத்தகம் இதனை நன்றாக விளக்குகின்றது. 300 பக்கங்கள் கொண்ட இந்தப் புத்தகத்தின் துவக்கத்தில் அவர் இவ்வாறு எழுதியுள்ளார்: ‘ஆவிக்குரிய தளர்ச்சியை மேற்கொள்ளவேண்டுமானால், *விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்* என்ற உண்மையை விளங்கிக்கொள்ளவேண்டும். வேறு எந்தவிதமான முயற்சிகள், ஆலோசனைகள், சிகிச்சைகளும் தற்காலிக விடுதலையைத் தருமேயன்றி நிரந்தர விடுதலையைத் தராது.’

ஆவிக்குரிய தளர்வு என்பது சந்தேகங்களினாலும் நமது ஆத்துமாவை மூடிக்கொள்ளும் மேகத்தினாலும் ஏற்படுவதாகும். நம் ஒவ்வொருவருக்கும் இப்படிப்பட்ட சந்தர்ப்பங்கள் வந்ததுண்டு. பரவசமான வேளைகளில் நாம் அதை உணரமாட்டோம். ஆனால் நாம் தனித்து விடப்படும்போது—அல்லது, ஓர் ஆபத்து நேரிடும்போது—நாம் அதை உணருகிறோம். ஏன், ஏன், என்ற கேள்விக்குப்

பதிலே இராது. ஆவிக்குரிய தளர்வு உண்டாகும்போது விசுவாசத்தைக் காத்துக்கொள்ளுவது பெரிய போராட்டம். எனவேதான் வேதம் விசுவாசத்தை ஒரு "போராட்டம்" என்று குறிப்பிடுகிறது. "விசுவாசத்தின் நல்ல *போராட்டத்தைப்* போராடு" (1 தீமோ 6:12). "நல்ல *போராட்டத்தைப்* போராடினேன்... விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்" (2 தீமோ 4:7). ஆம், விசுவாசத்தைக் காத்துக் கொள்ள நாம் போராடவேண்டியதாயிருக்கும். ஜெபத்திற்குப் பதில் கிடைக்காது, வேத வாசிப்பு பரவசமாயிராது, வாக்குத்தத்தங்கள் நிறைவேறாததுபோலிருக்கும், பிரச்னைகள் அதிகரிக்கும், ஜெபிக்க ஜெபிக்க சூழ்நிலை மோசமாகும், பரலோகம் மூடப்பட்டதாய்த் தெரியும், தேவனுடைய முகம் மறைக்கப்பட்டது போலிருக்கும், விடுதலை கிடைக்குமென்ற நம்பிக்கையே இராது, மோசமான நிலையிலிருந்து அதிமோசமான நிலைக்கு எல்லாம் போய்க்கொண்டிருக்கும், ஊழியர் பலர் ஜெபித்தும் விடுதலை இராது, அவர்கள் நம்மை உற்சாகப்படுத்தியும் விடுதலை கிடைக்காது. விசுவாசத்தைக் காத்துக்கொள்ள போராடும் அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில்தான் விசுவாசத்தின் வரையறையை (Definition of Faith) நாம் விளங்கிக்கொள்ள முடியும்:

"விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது" (எபி 11:1). உதவி இருக்காது, ஆனால் விசுவாசம் உறுதியைத் தரும். தரிசனம் இருக்காது, ஆனால் விசுவாசம் நிச்சயத்தைத் தரும்.

இருள் சூழும் இவ்வித வேளைகளில்தான் நாம் முக்கியமானதோர் இறைத்தத்துவத்தைத் தெளிவாய் உணரலாம். "நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்துபோகாதபடிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான



விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக்கொள்ளுங்கள். பாவத்திற்கு விரோதமாய்ப் போராடுகிறதில் இரத்தம் சிந்தப்படத்தக்கதாக நீங்கள் இன்னும் எதிர்த்து நிற்கவில்லையே. அன்றியும்: என் மகனே, கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே, அவரால் கடிந்து கொள்ளப்படும்போது சோர்ந்துபோகாதே. கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ, அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார் என்று பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல உங்களுக்குச் சொல்லியிருக்கிற புத்திமதியை மறந்தீர்கள்" (எபி 12:2−6).

நாம் தேவனுடைய பிள்ளைகளானால் அவருடைய சிட்சை நிச்சயமாய் நமக்கு உண்டு. அவர் நம்மை நேசிக்கிறார் என்பதை நம்புவோமானால், அவர் நம்மைச் சிட்சிக்கிறார் என்பதையும் ஏற்றுக்கொள்வோம். தேவப் பிள்ளைகள் ஒருவரும் சிட்சையினின்று தப்பமுடியாது. தொடர்ந்து ஜெபித்துக்கொண்டிருந்தாலும் ஜெபத்திற்குப் பதிலே வராது. ஜெபத்திற்கு உடனே பதில் வராவிட்டால் தேவன் மறுக்கிறார் என்பது பொருளல்ல; நமது விசுவாசத்தைப் பெருகப்பண்ணும்படியாக தேவன் நம்மைப் பயிற்றுவிக்கிறார் என்பதுதான் பொருள். எடுத்துக்காட்டாக, லாசருவின் சரிதையிலே அவன் வியாதிப்பட்டதாகக் கேள்விப்பட்டும், சீடர்களது விசுவாசம் அதிகரிக்கும்படியாக, இயேசு உடனே எதுவும் செய்யாமல், தாம் இருந்த இடத்திலே இன்னும் இரண்டு நாட்கள் தங்கினார் (யோ 11:6,14,15). உடனே வந்திருந்தால் தெய்வீக சுகம் மட்டுமே; பிந்தி வந்ததால் உயிர்த்தெழுதல்! ஆம், தாமதமாக வரும் பதில் கூடுதல் ஆசீர்வாதங்களைக் கொண்டு வரும்; இரட்டிப்பான நன்மைகளைக் கொண்டுவரும். எனவே கடவுளிடமிருந்து பதில்வரத் தாமதிக்கும்போது நாம் பதறவேண்டிய அவசியமில்லை. "விசுவாசிக்கிறவன் பதறான்" (ஏசா 28:16).

*விசுவாசியே நீ பதறாதே, விசுவாசியே நீ கலங்காதே;*
*விசுவாசத்தால் நீதிமான் இன்றும் என்றும் பிழைப்பான்!*

இதோ இருளில் படிக்கவேண்டிய பாடம்: ''உங்களில் எவன் கர்த்தருக்குப் பயந்து அவருடைய தாசனின் சொல்லைக் கேட்டு, தனக்கு வெளிச்சமில்லாததினால் இருட்டிலே நடக்கிறானோ, அவன் கர்த்தருடைய நாமத்தை நம்பி, தன் தேவனைச் சார்ந்துகொள்ளக்கடவன்'' (ஏசா 50:10). இதன் பொருள் என்ன ? கர்த்தருக்குப் பயந்து கீழ்ப்படிதலோடு நடந்தாலும் நம் வாழ்க்கையில் இருள் சூழலாம். அவ்வேளையில் கர்த்தருடைய நாமத்தையே நம்பி அவரையே சார்ந்துகொள்ளவேண்டும். பண்டிதர் ரேமண்ட் எட்மன் என்பவர் இதை ''இருளில் ஒழுங்கு'' (Discipline of Darkness) என்றழைக்கிறார். நிசம்!

நாம் ஒவ்வொருவரும் இவ்வித இருட்டான பாதைகளில் கடந்துசெல்லவேண்டியது வரும். விசுவாசித்து நடப்பதைத் தவிர வேறு வழியேயில்லை. ''நானோ மனிதர் வாழும் நாட்டிலே கர்த்தருடைய நன்மையைக் காண்பேன் என்று விசுவாசியாதிருந்தால் கெட்டுப்போயிருப்பேன்'' (சங் 27:13). அந்தகாரத்தின் பாதையைக் கடந்துசெல்லும்போது, கர்த்தரது வாக்குத்தத்தங்களைப் பிடித்துக்கொள்ளுவோம். ''விசுவாசித்தவளே பாக்கியவதி, கர்த்தராலே அவளுக்குச் சொல்லப்பட்டவைகள் நிறைவேறும்'' என்கிறது வேதம் (லூக் 1:45).

இப்படிப்பட்ட அந்தகாரத்தில் நீங்கள் திகைத்துக் கொண்டிருக்கும்போது, சத்துரு தனது வேலையை ஆரம்பிப்பான். துயரத்தில் அமிழ்ந்துகொண்டிருக்கும் உங்களிடம் தேவனால் அனுப்பப்படாத பிரசங்கிமார் வந்து, உங்களைத் தங்கள் பிடிப்புக்குள் கொண்டுவர, அச்சந்தர்ப்பத்தைத் தங்களுக்குச் சாதகமாக சில நன்மைகள் கிடைக்கப் பயன்படுத்திக்கொள்ளுவார்கள்.



'தேவன் உங்களிடம் உள்ள இதை ஊழியத்திற்குக் கொடுக்கச் சொல்லுகிறார்' என்பது போன்ற பொய்த் தீர்க்கதரிசனம் சொல்லி உங்களை ஏமாற்ற முயற்சிப் பார்கள். இதைச் செய்யவேண்டும், அதைச் செய்யவேண்டும் என்றெல்லாம் உங்களைத் திணறவைப்பார்கள். வேதத்திலே 12 வருடங்களாக வேதனைப்பட்டு, தன் சொத்துக்களையெல்லாம் வைத்தியர்களிடம் செலவழித்தும் சுகம் கிடைக்காத ஒரு பெண் இருந்தாள். அப்படியே இன்றைக்குத் தங்கள் செல்வத்தையெல்லாம் தவறான ஊழியர்களிடம் செலவழித்தும் நன்மை ஒன்றும் பெறாத பலர் உள்ளனர்! வேதனையான காரியம்! இப்படிப்பட்ட வேளைகளில்தான் மிகுந்த கவனமாயிருக்கவேண்டும். ஏமாந்துபோகாதிருங்கள். தேவ ஊழியக்காரர் எவரும் உங்கள் விசுவாசத்திற்கு அதிகாரிகளாயிருக்கமுடியாது. பவுல் எழுதுவதைக் கவனியுங்கள்: ''உங்கள் விசுவாசத்திற்கு நாங்கள் அதிகாரிகளாயிராமல், உங்கள் சந்தோஷத்திற்குச் சகாயராயிருக்கிறோம்; விசுவாசத்தினாலே நிலைநிற்கிறீர்களே'' (2 கொரி 1:24).

மேலும், மனம் நொந்துபோயிருக்கும் உங்களில் குற்றவுணர்வை உருவாக்க எவருக்கும் உரிமையில்லை. ''கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, ஊனியல்பின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை'' (ரோ 8:1). நமக்கு வரவேண்டிய ஆக்கினையை ஏற்கனவே இயேசு சிலுவையிலே சுமந்து தீர்த்துவிட்டார்! பரிசுத்த ஆவியானவரின் ஊழியம் தேவமக்களை ஆறுதல்படுத்துவதும், ஊன்றக்கட்டுவதுமே ஒழிய அவர்களை ஆக்கினைக்குள்ளாகத் தீர்ப்பது அல்ல. கீழ்க்கண்ட வசனத்தைப் பிரசங்கிமார் தங்களுக்குச் சாதகமாக்கிக்கொள்வர்: ''தீர்க்கதரிசிகளை நம்புங்கள், அப்பொழுது சித்திபெறுவீர்கள்'' (2 நாளா 20:20). ஆனால் இந்த வசனத்தை முழுமையாயப் பாருங்கள். ''உங்கள் தேவனாகிய **கர்த்தரை** நம்புங்கள், அப்பொழுது நிலைப்

படுவீர்கள்; அவருடைய தீர்க்கதரிசிகளை நம்புங்கள், அப்பொழுது சித்திபெறுவீர்கள்.'' வரிசையைக் கவனித் தீர்களா? முதலாவது கர்த்தரை நம்பவேண்டும். அடுத்து தான் தீர்க்கதரிசிகள்! அதுவும், அவர்கள் கர்த்தரின் வார்த்தைகைளைச் சொன்னால் மட்டுமே! நீங்கள் தீர்க்கதரிசிகளையே பிரதானமாக நம்பிக்கொண்டிருந் தால் ஒருவேளை கொஞ்சக்காலம் சில காரியங்களில் நீங்கள் ''சித்தி பெறலாம்;'' ஆனால் ''நிலைவரப்படும்'' நிலையான நிரந்தர ஆசீர்வாதம் கிட்டுவது தேவனை நம்பும்போதுதான். மறுபடியும் சொல்கிறேன்: முதலாவது கர்த்தரை நம்பவேண்டும்; எழுதப்பட்ட அவரது வசனத் தைக் கவனிக்கவேண்டும்; அதற்குப் பிறகுதான் தீர்க்க தரிசிகள் எல்லாம்.

பாடுகளின்போது நீங்கள் இன்னொரு பிரச்னையைச் சந்திக்க வேண்டும். அதுதான் சத்துருவின் நகைப்பு, ஏளனம். நகைக்கிற சத்துருவைப் பார்த்து இவ்விதம் சொல்லுங்கள்: ''என் சத்துருவே, எனக்கு விரோதமாய்ச் சந்தோஷப்படாதே; நான் விழுந்தாலும் எழுந்திருப்பேன்; நான் **இருளில்** உட்கார்ந்தால் கர்த்தர் எனக்கு வெளிச்ச மாயிருப்பார். நான் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தேன்; அவர் எனக்காக வழக்காடி என் நியாயத்தை விசாரிக்கும்வரை அவருடைய கோபத்தைச் சுமப்பேன்; அவர் என்னை வெளிச்சத்திலே கொண்டு வருவார், அவருடைய நீதியைப் பார்ப்பேன்!'' (மீகா 7:8,9).



***பகுதி 3 அத்தியாயம் 3***

# உபத்திரவங்களும் எதிர்ப்புகளும்

**நாம்** சுவிசேஷத்தைப் பகிர்ந்துகொள்ளும்போது உபத்திவங்களும் எதிர்ப்புகளும் வருகின்றன. இந்தப் பகுதியிலே நாம் இருவகையினரைச் சந்திக்கிறோம்.

அ) சுவிசேஷத்தை எதிர்க்கிறவர்கள்
ஆ) சுவிசேஷத்தைத் திரிக்கிறவர்கள்

## அ) சுவிசேஷத்தை எதிர்க்கிறவர்கள்

விசுவாச வாழ்க்கையின் முடிவு என்ற இந்த அத்தி யாயத்தை எபிரெயர் 10:37,38இல் துவங்கினோம். இது எழுதப்பட்டதே உபத்திரவத்தின் சந்தர்ப்பத்தில்தான் என்பதை அதற்கு முன்னுள்ள வசனங்கள் வெளிப்படுத்து கின்றன. ''நிந்தைகளாலும் உபத்திரவங்களாலும் நீங்கள் வேடிக்கையாக்கப்பட்டதுமல்லாமல், அப்படி நடத்தப் பட்டவர்களுக்குப் பங்காளிகளுமானீர்கள். நான் (சுவி சேஷத்திற்காக) கட்டப்பட்டிருக்கையில் நீங்கள் என்னைக் குறித்துப் பரிதபித்ததுமன்றி, பரலோகத்தில் அதிக மேன் மையும் நிலையுள்ளதுமான சுதந்தரம் உங்களுக்கு உண் டென்று அறிந்து, உங்கள் சொத்துக்களையும் மகிழ்வுடன் கொள்ளையிடக் கொடுத்தீர்கள்'' (எபி 10:33,34).

நற்செய்திப்பணியில் நிச்சயமாய் எதிர்ப்புகள் வரும். அவற்றைக் குறித்து நாம் மனமுடைந்துவிடக்கூடாது. பிலிப்பி நகரிலுள்ள பரிசுத்தவான்களுக்கு இப்படிப்பட்ட எதிர்ப்புகள் வந்தபோது, அவர்களைப் பவுல் திடப்படுத்து கிறதைப் பாருங்கள்: “நீங்கள் ஒரே ஆவியினாலே உறுதி யாய் நின்று, ஒரே ஆத்துமாவினாலே சுவிசேஷத்தின் விசுவாசத்திற்காகக் கூடப்போராடி, எதிர்க்கிறவர்களால் ஒன்றிலும் மிரளாதிருக்கிறீர்களென்று உங்களைக் குறித்து நான் கேள்விப்படும்படி, எவ்விதத்திலும் நீங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குப் பாத்திரராக மட்டும் நடந்துகொள்ளுங்கள். நீங்கள் மிரளாதிருக்கிறது அவர் கள் கெட்டுப்போகிறதற்கும், நீங்கள் இரட்சிக்கப்படு கிறதற்கும் அத்தாட்சியாயிருக்கிறது; இதுவும் இறை னுடைய செயலே. ஏனெனில் கிறிஸ்துவினிடத்தில் விசுவாசமாயிருக்கிறதற்கு மட்டுமல்ல, அவருக்காகப் பாடுபடுகிறதற்கும் உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது” (பிலி 1:27−29).

அப்போஸ்தலனாகிய பவுல் சுவிசேஷத்திற்காக மிக வும் உபத்திரவப்பட்டான்; பல எதிர்ப்புகளைச் சந்தித் தான்; பொல்லாத மனிதர் கையில் சிக்கித் தவித்தான். எனினும் தான் விசுவாசித்தவர்மீது முழு நம்பிக்கை வைத்திருந்தான். “நம்முடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்து ... சாவை அழித்து, அழியா வாழ்வை சுவிசேஷத் தினாலே ஒளிரச் செய்தார். அதற்கு நான் பிரசங்கியா கவும், அப்போஸ்தலனாகவும், புறவினத்தாருக்குப் போத கனாகவும் நியமிக்கப்பட்டேன். இதின் பொருட்டு இந்தப் பாடுகளையும் அனுபவிக்கிறேன்; ஆயினும், நான் வெட்கப் படுவதில்லை. ஏனென்றால் நான் **விசுவாசித்திருக்கிற வர்** இன்னார் என்று அறிவேன்; நான் அவரிடத்தில் ஒப்புக்கொடுத்ததை அவர் அந்நாள் வரைக்கும் காத்துக் கொள்ள வல்லவராயிருக்கிறாரென்று நிச்சயித்துமிருக் கிறேன்” (2 தீமோ 1:10−12). தெசலோனிக்கேயா விசு வாசிகளுக்குப் பவுல் எழுதியது: “சகோதரரே, உங்களி டத்தில் கர்த்தருடைய வசனம் பரம்பி மகிமைப்படுகிறது போல, எவ்விடத்திலும் பரம்பி மகிமைப்படும்படிக்கும், துர்க்குணராகிய பொல்லாத மனிதர் கையினின்று நாங் கள் விடுவிக்கப்படும்படிக்கும், எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்; **விசுவாசம்** எல்லாரிடத்திலுமில்லையே” (2 தெச 3:1,2). சுவிசேஷத்தை எதிர்க்கிறவர்களைப் பொல்லாத அல்லது யோசனையில்லாத மனிதர் என்று பவுல் அழைக்கிறான். அவர்களிடமிருந்து விடுவிக்கப்பட நாம் செய்யவேண்டியது ஜெபம் மட்டுமே.



பாடுபடுவது சுவிசேஷ ஊழியத்தில் முக்கியமான தொரு பங்காகும். “நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப் பட்டும் ஒடுங்கிப்போகிறதில்லை; கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறதில்லை; துன்பப்படுத்தப்பட்டும் கை விடப்படுகிறதில்லை; கீழே தள்ளப்பட்டும் மடிந்துபோகி றதில்லை. கர்த்தராகிய இயேசுவினுடைய வாழ்வும் எங் கள் உடலிலே விளங்கும்படிக்கு இயேசுவின் மரணத்தை எப்பொழுதும் எங்கள் உடலில் சுமந்து திரிகிறோம்” (2 கொரி 4:8−10).

ஆகையால் சுவிசேஷத்தின் பொருட்டு எந்த எதிர்ப்பு கள் வந்தாலும் அஞ்சிடாமல் தைரியமாகத் தொடர்ந்து அறிவித்துக்கொண்டேயிருப்போம். சரித்திரம் முழுவ திலும் எதிர்ப்புகளின் நடுவில்தான் சுவிசேஷம் தீவிர மாய்ப் பரவியிருக்கிறது. எதிர்ப்புகளே முன்னேற்றத் திற்கு வழிவகுத்துள்ளன. கம்யூனிச நாடுகளில் பயங்கர எதிர்ப்புகள், கொடிய துன்புறுத்தல்களின் நடுவிலும் கிறிஸ்துவின் சுவிசேஷம் மிகுந்த வல்லமையாய்ப் பரவு கிறது. உபத்திரவங்களும், எதிர்ப்புகளும் நமது விசுவாசத் தையும் வேகத்தையும் அதிகரிக்கத்தான் செய்யும். இதோ

பவுலின் சாட்சி: "**விசுவாசித்தேன்**, ஆகையால் பேசி னேன் என்று எழுதியிருக்கிறபடி, நாங்களும் அந்த விசு வாசத்தின் ஆவியை உடையவர்களாயிருந்து, விசுவாசிக் கிறபடியால் பேசுகிறோம்!" (2 கொரி 4:13). "சகோதரரே, நாங்கள் எப்பொழுதும் உங்களுக்காகத் தேவனைத் துதிக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்; உங்கள் **விசு வாசம்** மிகவும் பெருகுகிறபடியினாலும்... நீங்கள் சகிக்கிற சகல துன்பங்களிலும், உபத்திரவங்களிலும் பொறுமை யையும் விசுவாசத்தையும் காண்பிக்கிறதற்காக உங் களைக் குறித்து நாங்கள் திருச்சபைகளில் மேன்மை பாராட்டுகிறோம்" என்று பவுல் தெசலோனிக்கேயா விசுவாசிகளைப் பாராட்டினான் (2 தெச 1:3,4).

**ஆ) சுவிசேஷத்தைத் திரிக்கிறவர்கள்**

"ஆவியானவர் வெளிப்படையாய்ச் சொல்லுகிறபடி, பிற்காலங்களிலே மனச்சாட்சியில் சூடுண்ட பொய்ய ருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து, விசு வாசத்தை விட்டு விலகிப்போவார்கள்" (1 தீமோ 4:1).

விசுவாசத்தை விட்டு மக்களைத் திருப்புகிற இரண்டு விதக் கொள்கையினரைக் கவனிப்போம்.

(அ) பிரமாணக்காரர்
(ஆ) வீண்விவாதக்காரர்

**(அ) பிரமாணக்காரர்**

கிருபையோடு நியாயப்பிரமாணத்தையும் கொஞ்சம் கைக்கொண்டால் நல்லது என்பதே இவர்களது உபதேசம். கலாத்திய சபையினர் இப்படிப்பட்ட உபதேசத்திற்குச் செவி கொடுத்து, விசுவாசத்தைவிட்டுப் பின்வாங்கிப்போனார்



கள். எனவே பவுல் கண்ணீரோடு அவர்களுக்கு இவ்விதம் எழுதினான்: "இப்பொழுதோ நீங்கள் தேவனை அறிந் திருக்க, அல்லது தேவனாலே அறியப்பட்டிருக்க, பல மற்றதும் வெறுமையானதுமான அவ்வழிபாடுகளுக்கு நீங்கள் மறுபடியும் திரும்பி, மறுபடியும் அவைகளுக்கு அடிமைப்படும்படி விரும்புகிறதெப்படி ? நாட்களையும், மாதங்களையும், காலங்களையும், வருஷங்களையும் பார்க்கிறீர்களே. நான் உங்களுக்காய்ப் பாடுபட்டு உழைத் தது வீணாய்ப்போயிற்றோ என்று உங்களைக் குறித்துப் பயந்திருக்கிறேன்... என் சிறு பிள்ளைகளே, கிறிஸ்து உங்களிடத்தில் உருவாகுமளவும் உங்களுக்காக மறு படியும் கர்ப்ப வேதனைப்படுகிறேன்" (கலா 4:9−11,19).

கிருபையும் நியாயப்பிரமாணமும் ஒரே இடத்தில் கூடி வாழ்வது கூடாத காரியம். "அதைக் குறித்து வேதம் என்ன சொல்லுகிறது: அடிமையானவளின் மகன் சுயாதீன முள்ளவளுடைய குமாரனோடே சுதந்தரவாளியாயிருப் பதில்லை; ஆகையால் அடிமையானவளையும் அவளு டைய மகனையும் புறம்பே தள்ளு என்று சொல்லுகிறது. இப்படியிருக்க, சகோதரரே, நாம் அடிமையானவளுக்குப் பிள்ளைகளாயிராமல் சுயாதீனமுள்ளவளுக்கே பிள்ளை களாயிருக்கிறோம்" (கலா 4:30,31) ஈசாக்கும் இஸ்ம வேலும் ஒரே வீட்டிலிருக்க முடியாது. அடிமையானவ ளுக்கும் அவள் மகனுக்கும் வீட்டின் பின்புறத்தைக்கூடக் கொடுக்கமுடியாது; அவர்களைப் "புறம்பே" தள்ளிவிட வேண்டுமாம்.

தேவன் அளிக்கும் கிருபையின் இலவச ஈவை விசுவாசிப்பதுடன் "கொஞ்சம்" நியாயப்பிரமாணத்தையும் கூட்டிக்கொள்ளலாம் என்று நினைக்கவேண்டாம். வேதம் இதை எவ்வளவு கண்டிப்பாய்ச் சொல்லுகிறதென்று பாருங்கள்: "நீங்கள் மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்துக்குட்படாமல், கிறிஸ்து நமக்கு உண்டாக்கின

சுயாதீன நிலைமையிலே நிலைகொண்டிருங்கள்... நியாயப்பிரமாணத்தினால் நீதிமான்களாக விரும்புகிற நீங்கள் யாவரும் கிறிஸ்துவைவிட்டுப் பிரிந்து கிருபை யினின்று விழுந்தீர்கள். நாங்களோ நீதி கிடைக்குமென்று ஆவியைக் கொண்டு **விசுவாசத்தினால்** நம்பிக்கை யோடே காத்திருக்கிறோம்'' (கலா 5:1,4,5). பழைய துணி யையும் புதிய துணியையும் ஒட்டுப்போடுவதும், புது ரசத்தைப் பழைய துருத்தியில் ஊற்றுவதும் பேரிழப்பு, பேரழிவு. இதைத் தெளிவாய்ப் புரிந்துகொண்டு திடமாய் விசுவாசத்தில் நில்லுங்கள்.

கடைசி நாட்களின் உபதேசக் குழப்பம் என்ன தெரி யுமா? ''ஆவியானவர் வெளிப்படையாய்ச் சொல்லுகிறபடி, பிற்காலங்களிலே மனச்சாட்சியில் சூடுண்ட பொய்ய ருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து, **விசுவாசத்தைவிட்டு** விலகிப்போவார்கள். விவாகம் பண்ணாதிருக்கவும், விசுவாசிகளும் சத்தியத்தை அறிந்தவர்களும் துதியோடே அனுபவிக்கும்படி தேவன் படைத்த உணவு வகைகளை விலக்கவும் வேண்டு மென்று அந்தப் பொய்யர் கட்டளையிடுவார்கள்'' (1 தீமோ 4:1−3). வஞ்சிக்கிறவர்களாகிய பிரமாணக் கொள்கை யினரின் உபதேசமெல்லாம் தொடாதே, ருசிபாராதே, தீண்டாதே, என்றுதானிருக்கும். இதைக்குறித்து மிகுந்த எச்சரிக்கையாயிருக்கவேண்டும். திருமறை கூறுவது என்ன? ''தேவன் படைத்ததெல்லாம் நல்லதாயிருக்கிறது; துதியோடே ஏற்றுக்கொள்ளப்படுமாகில் ஒன்றும் தள்ளப் படத்தக்கதல்ல. அது இறைவார்த்தையினாலும் இறை வேண்டலாலும் பரிசுத்தமாக்கப்படும்'' (1 தீமோ 4:4,5).

### (ஆ) வீண்விவாதக்காரர்

''ஞானமென்று பொய்யாய்ப் பேர் பெற்றிருக்கிற கொள்கையின் விபரீதங்களுக்கும் விலகு'' (1 தீமோ



6:20). இப்படிப்பட்ட விபரீதக் கொள்கைகள் நமது இறை யியல் கல்லூரிகளில் நிறைந்து காணப்படுகின்றன. இவர்கள்தான் தாராளக் கொள்கையினர் (liberals); நவீன கொள்கைக்காரர் (modernists) ஆவர். பைபிளை அப் படியே முழுவதுமாக நம்ப வேண்டியதில்லை என்று போதிப்பார்கள். கடவுள் வானத்தையும் பூமியையும் படைத் தாரோ இல்லையோ, இயேசு கன்னிகைக்குப் பிறந் தாரோ இல்லையோ, மீன் வயிற்றில் யோனா இருந்தது உண்மையோ இல்லையோ என்பவற்றையெல்லாம் குறித்து அக்கறைப்படவேண்டாம் என்று சாதாரணமாகச் சொல்லிவிடுவார்கள். வேதத்திற்குப் புறம்பான இவ்வித உபதேசங்கள் உங்கள் திருச்சபையிலோ, சமுதாயத்திலோ, ஐக்கியத்திலோ இருந்தால் அதற்கு முழுமூச்சுடன் எதிர்த்து நில்லுங்கள். நமது பெயரே ''புராட்டஸ்டண்ட்ஸ்'' (Protestants)தானே? அதாவது, ''எதிர்த்துப் போராடு கிறவர்கள்.'' பெயருக்கேற்ப நடந்துகொள்வோம்!

இன்னொரு கூட்டத்தார் உண்டு. அவர்கள் உயிர்த் தெழுதல் ஏற்கனவே நடந்தாயிற்று என்று சொல்லி மக்களது விசுவாசத்தை நாசமாக்குகிறவர்கள். இதோ பவுலின் எச்சரிப்பு: ''சீர்கேடான வீண்பேச்சுகளுக்கு விலகியிரு; அவைகளால் (கள்ளப் போதகர்களான) அவர் கள் அதிக அவபக்தியுள்ளவர்களாவார்கள்; அவர்களு டைய வார்த்தை அரிபிளவையைப்போலப் படரும். இமெநேயும் பிலேத்தும் அப்படிப்பட்டவர்கள். அவர்கள் சத்தியத்தை விட்டு விலகி, உயிர்த்தெழுதல் நடந்தாயிற்று என்று சொல்லி, சிலருடைய விசுவாசத்தைக் கவிழ்த்துப் போடுகிறார்கள்'' (2 தீமோ 2:16−18).

நெல்லை மாவட்டத்தில் விபரீதக் கொள்கையுள்ள ஒருவர் இருக்கிறார். ''என்னை விசுவாசிக்கிறவன் மரித் தாலும் பிழைப்பான்; உயிரோடிருந்து என்னை விசுவாசிக் கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலுமிருப்

பான்'' என்ற வசனத்தைப் பிடித்துக்கொண்டார். இந்த வாக்குத்தத்தத்தைப் பற்றிக்கொண்டு விசுவாசத்தோடு ஜெபிப்பவர்கள் சாகாமலிருக்கலாம் என்கிற வினோத மான உபதேசத்தைப் பரப்பிவருகிறார்! துர்ப்பாக்கியமாக அவரது மனைவியே மரித்துப்போனார்கள். அவள் இந்த வசனத்தைச் சரியாகப் புரிந்து ஜெபிக்காததினால்தான் மரித்துப்போனாள் என்று சொல்லி மக்களிடம் சமாளித்துக் கொண்டார்! இப்போது அதிக நாட்கள் உலகில் வாழ ஆசையுள்ள அநேகர் அந்தக் கூட்டத்திற்குப் போகிறார் கள். நம் நாட்டில், அதுவும் கிறிஸ்தவ உலகில், எதற்கும்—கேவலம் நாய்ச் சண்டைக்கும்—ஒரு கூட்டம் சேர்ந்துவிடும்!

தற்சமயம் வில்லியம் பிரன்ஹாமின் கொள்கைக்காரர் அவரது துர்வுபதேசத்தைப் பரப்பிவருகின்றனர். 'நமது புதிய கர்த்தருடைய நாமம் வில்லியம் பிரன்ஹாம்,' 'நானும் என் வீட்டாருமோவென்றால் வில்லியம் பிரன் ஹாமாகிய கர்த்தரையே சேவிப்போம்,' இதுபோன்ற வாசக அட்டைகளை எழுதிப் பலரை வஞ்சிக்கிறார்கள். மோசே கன்மலையை இரண்டு முறை அடிக்கக் காரணம் ஒரு முறை இயேசு கிறிஸ்துவையும், மறுமுறை வில்லியம் பிரன்ஹாமையும் அடித்தான் என்றும், வில்லியம் பிரன் ஹாம்தான் வரவேண்டிய எலியா என்றும் பொய்யான உபதேசங்களைப் போதிக்கிறார்கள். ஒரு காலத்தில் மிகப்பெரிய அற்புத சுகமளிக்கும் தேவ ஊழியராயிருந்த இந்த வில்லியம் பிரன்ஹாம் ஆரோக்கிய உபதேசத்தை விட்டு விலகிப்போய், துர்வுபதேசக்காரரானார். விபத் தொன்றில் மரணமடைந்தார். அவர் சபைக்குச் செய்தி ருக்கிற கேடு மிகப்பெரிது. இன்று அவரது பிரசங்கங்கள் *''உரைக்கப்பட்ட வார்த்தை,'' ''கடைசி காலச் செய்திகள்,'' ''ஏழாம் தூதனின் சத்தம்''* ஆகிய புத்தகங்கள், பத்திரி கைகளில் கழுகுச் சின்னத்துடன் வெளியிடப்பட்டு ''இலவசமாக'' வீடுவீடாக விநியோகிக்கப்படுகின்றன.



''மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கை பண்ணாத அநேக வஞ்சகர் உலகத்தில் தோன்றியிருக் கிறார்கள்; இப்படிப்பட்டவனே வஞ்சகனும் அந்திக் கிறிஸ்துவுமாயிருக்கிறான்... அவனை உங்கள் வீட்டிலே ஏற்றுக்கொள்ளாமலும், அவனுக்கு வாழ்த்துதல் சொல் லாமலும் இருங்கள்'' என்று திருமறை நமக்குச் சொல்லு கிறது (2 யோ 7,10).

இன்னும் நீங்கள் எச்சரிக்கப்பட வேண்டிய அநேக காரியங்கள் உண்டு. இரண்டாம் வருகையைக் குறித்து வரும் வேடிக்கையான உபதேசங்களைக் குறித்தும் மிகுந்த எச்சரிக்கையாயிருங்கள். பொதுவாக இப்படிப்பட்ட துர் உபதேசங்கள் புற்றுநோய் போல மிகத் துரிதமாகப் பரவும். இலட்சக்கணக்கான மக்கள் அதைப் பின்பற்றுவார்கள். கூட்டம் அதிகம் என்பதால் தேவன் அங்கிகரித்த ஊழியம் என்று சொல்லிவிட முடியாது. சினிமா நடிகர்களுக்கு வராத கூட்டமா? ''நான் போனபின்பு மந்தையைத் தப்ப விடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும்'' என்றான் பவுல் (அப் 20:29). உங்களில் அநேகர் இப்படிப் பட்ட வஞ்சிக்கிற பிசாசின் உபதேசங்களை நீங்கள் இருக்கிற இடங்களிலே, உங்கள் ஊழியங்களிலே, சந் திக்கவேண்டியவர்களாயிருக்கிறீர்கள். முன்னெச்சரிப்பை மறந்துவிடாதிருங்கள்.

யூதா 3இல் ''பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக நீங்கள் தைரியமாய்ப் போராடவேண்டும்'' என்று கூறப்பட்டுள்ளது. ''ஒருவிசை'' ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசம்! இதன் பொருள் என்ன? புதிய வெளிப்படுத்தல்கள் நமக்குத் தேவையில்லை. எழுதப்பட்ட வேத புத்தகமே நமக்குப் போதுமானது. இதோடு ஒன்றையும் கூட்டத் தேவை யில்லை. வேதத்தின் இறுதிப் புத்தகமாகிய வெளிப் படுத்துதலோடு வெளிப்பாடு முடிந்தது. ஆமென்.

“மனுமகன் வரும்போது பூமியிலே **விசுவாசத்தைக்** காண்பாரோ**?**” என்றார் இயேசு (லூக் 18:8). “நாங்கள் விசுவாசத்தினாலேயே பிழைக்கிறோம்; எங்களில் நீர் விசுவாசத்தைக் காண்பீர்” என்று அவருக்கு உறுதி யளிப்போம்!



***ஆசிரியரின் தினசரித் தியானநூல்...***



## நாளொரு மேனி
## BETTER EVERYDAY

சகோதரன் ஸ்டான்லியின்
40 ஆண்டு எழுத்துப்பணியில் வெளிவந்த
புத்தகங்களிலிருந்து தொகுக்கப்பட்ட அரிய சத்தியங்கள்.

432 பக்கங்கள்; 23 செ.மீ. x 16 செ.மீ. x 2 செ.மீ.
தரமான தாள், அழகிய அட்டை, பிளாஸ்டிக் உறை

*விலை ரூ. 150/–; அனுப்பச் செலவு ரூ. 25/–*

ஆங்கிலம், கன்னடம், இந்தி ஆகிய மொழிகளிலும் உண்டு.

பிறந்த நாள், திருமணம், ஆண்டு விழா, பட்டமளிப்பு,
புத்தாண்டு போன்றவற்றிற்குச் சிறந்த வெகுமதி!

***ஆண்டின் எந்த மாதத்திலிருந்தும் வாசிக்கத் துவங்கலாம்!***

*தொடர்புக்கு:*

Blessing Literature Centre
21/11 West Coovam River Road
Chintadripet, Chennai 600002, India
*Tel: 044-28450411*
<bymliterature@vsnl.net>

**ஆசிரியரது பிற நூல்கள்—**

r *அறிவூட்டும் அகவுணர்வுகள்*
r *ஆவியின் அபிஷேகம் பெறுவது எப்படி ?*
r *ஆனந்த அறுவடை*
r *இரட்சிக்கப்படுவது எப்படி ?*
r *உயர்ந்த வழிகள் உயர்ந்த எண்ணங்கள்*
r *ஊழியரும் மக்களும்*
r *எதிர்நீச்சல் வாலிபர்*
r *ஐந்தப்பம் இரு மீன்*
r *கண் திறக்கும் கட்டுரைகள்*
r *காட்டுத் தேன்*
r *கீழ்ப்படிதலே மேல் படி !*
r *சமநிலைக் கிறிஸ்தவன்*
r *சிறு நரிகள்*
r *திறந்த வானம்*
r *திரும்பிய மனிதன்*
r *தெளிவான பதில்கள் - I*
r *தெளிவான பதில்கள் - II*
r *நாளொரு மேனி (தினசரித் தியானம்)*
r *நெஞ்சில் நெருப்பு*
r *பொற்பழங்கள்*
r *பொறுமை இருந்தால் மனிதன் ஆகலாம்!*
r *மாணவ மணிகளுக்கு...*
r *வல்லமை தேவனுடையது!*

இப்புத்தகங்கள் ஆங்கிலத்திலும் உண்டு.

ஆசிரியரின் உபதேசச் செய்திகளடங்கிய
ஒலி-ஒளித் தட்டுகளை வாங்கிக் கேளுங்கள், பாருங்கள்.

Blessing Literature Centre
21/11 West Coovam River Road, Chintadripet,
Chennai 600002, India
*Tel: 044-28450411 <bymliterature@vsnl.net>*



***Visit...***

**www.StanleyOnBible.com**

***A WEBSITE FOR BIBLE LOVERS***

**CONTENTS**

p ***My Letters***
Stanley talks heart to heart
with the Visitors of this Website.

p ***General Messages***
Enlightening Articles for Christian Growth

p ***Sermon Outlines***
Outlines on miscellaneous subjects for
Personal Meditation and Pulpit Preaching

p ***Bible Studies***
Studies on specific themes
and select books of the Bible

p ***Doctrinal Essays***
Corrective Teaching to uphold
Sound Doctrines of the Bible

p ***Youth Matters***
Practical Guidelines to Young Men
and Young Women for Successful Living

p ***Leaders Column***
Biblical Insights and Practical Lessons
on Christian Leadership

p ***Missionary Challenge***
Calling Christians to obey
the Great Commission of Christ

p ***My Answers***
Answers to Questions
frequently asked but rarely answered

p ***Quotable Quotes***
Stanley's analytical Statements
about Christian Life and Ministry

# ஆசீர்வாத இளைஞர் இயக்கம்

***எழுப்புதலுக்கும் நற்செய்தி அறிவிப்பிற்கும் அர்ப்பணிக்கப்பட்டு 1971 முதல் இயங்கிவரும், சபைப்பிரிவு பாகுபாடில்லாத, ஒரு திருப்பணி***

r

எழுப்புதல் முகாம்கள், திருமறைப் பாடங்கள், பயிற்சித் திட்டங்கள் நடத்துதல்.

r

பள்ளிகள், கல்லூரிகளில் மாணவ மாணவியருக்கு ஜெபக்குழுக்கள் உருவாக்குதல்.

r

முழுநேர ஊழியரல்லாத சகோதர சகோதரிகளின் குழுக்கள் மூலம் கிராமங்கள், குடிசைப் பகுதிகள், மருத்துவமனைகள் முதலியவற்றைச் சந்தித்தல்.

r

300க்கும் மேற்பட்ட முழுநேர மிஷனரிகள் மூலம் அசாம், ஆந்திரப் பிரதேசம், இராஜஸ்தான், உத்திரப் பிரதேசம், ஒரிசா, கர்நாடகம், குஜராத், கேரளம், சத்தீஸ்கார், மகாராஷ்டிரம், மத்தியப் பிரதேசம், மேற்கு வங்கம், டில்லி, தமிழகம் மற்றும் ஜார்கண்ட் ஆகிய மாநிலங்களிலுள்ள கவனிப்பாரற்ற கிராமங்களிலும் ஆதிவாசிப் பகுதிகளிலும் சபைகள் நிறுவுதல்.

r

அசாமி, ஆங்கிலம், இந்தி, ஒரியா, கன்னடம், குஜராத்தி, தமிழ், தெலுங்கு, பெங்காலி, மராத்தி, மலையாளம் ஆகிய மொழிகளில் *"ஆசீர்வாதம்"* எனும் பத்திரிகை, புத்தகங்கள் மற்றும் ஒலி-ஒளித்தட்டுகள் வெளியிடுதல்.

r

மருத்துவப்பணி, நிவாரணப்பணி மற்றும் எழுத்தறிவு கற்பித்தல் மூலம் எளியோர், ஒதுக்கப்பட்டோருக்கு உதவுதல்.

*ஜெபியுங்கள்! பங்குபெறுங்கள்! ஆதரியுங்கள்!*

**ஆசீர்வாத இளைஞர் இயக்கம்**
**சர்ச் காலனி, வேலூர் 632 006**
**தொலைபேசி: 0416-2242943, 2248943**
<bym@sancharnet.in>
www.BlessingYouthMission.org